# காதல் வங்கி

அனுராதா ரமணன்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : ஜூலை 1995

திருநாவுக்கரசு தயாரிப்பு

சென்னை மாவட் ... நூலகம்

விலை : ரூ. 27-00

21057
3775040

நேரு அச்சகம் 43 அம்மையப்பன் தெரு சென்னை-600 014

# பதிப்புரை

நாம் செய்யும் காரியம்தான் நமக்கு நன்மையையோ, தீமையையோ செய்கிறது. வேறொரு சக்தி வந்து அவைகளைச் செய்வதில்லை என்பதை நாம் உணர வேண்டும்.

அழகை ஆராதனை செய்ய வேண்டும் என்று நினைப்பவர்கள் சிலர்.

அழகை அனுபவித்துவிட வேண்டும் என்று துடிப்பவர்கள் பலர்.

ஒரு இளம்பெண்ணின் அழகை, திறமையை ஆராதனை செய்பவராக மட்டுமல்லாமல் ஆதரிக்கவும் செய்கிறார் தேவேந்திரன்.

அதனால் ஆபத்திலும் மாட்டிக்கொள்கிறார்.

அவருக்கு ஏற்பட்ட அந்த ஆபத்தின்போது, மனைவி, மகன்கள், மகள்கள், உறவினர்கள், நண்பர்கள் எல்லாம் எப்படி நடந்துகொள்கிறார்கள்—அதனால் ஏற்படும அனுபவங்கள் இவைகளை மிக அழகாக ஆசிரியை அனுராதா ரமணன் அவர்கள் இந்நாவலில் அலசுகிறார்.

மகிமா என்ற ஒரு அழகான, அறிவான பெண்ணுக்கு உதவப்போய் அவதிப்படும் தேவேந்திரனின் கதை வாசகர்களுக்கு ஒரு படிப்பினையாக அமையும்.

**ஏ.திருநாவுக்கரசு**
வானதி பதிப்பகம்

சென்னை மாவட்ட கிளை நூலகம்
21057
3775040
கொளத்தூர், சென்னை-99.

# காதல் வங்கி

## 1

இந்தக் காதல்...
தெய்வத்துக்குத் தெரியாத
ஒரு வழிபாடு
விடியலின் செவியில்
விழாத பூபாளம்!

மதுரா, அப்பளம் பொரித்துக்கொண்டே, வேலைக்காரச் சிறுமி பாப்புவுக்குக் கட்டளையிடுகிறாள்—

''பாப்பு, அந்த அப்பள டப்பாவை எடு.''

அவள் சொல்லி முடிக்கும் முன் டப்பா அவளுக்குப் பக்கத்தில்.

''பரவாயில்லையே, அலமாரி எட்டாதே உனக்கு. இப்ப எட்டுதா...உசந்துட்டே. அப்புறம் பாப்பு, அந்தப் பாத்திரத்துல கேரட் சீவி வச்சிருக்கேன் பாரு, அதுல ரெண்டு மூடி எலுமிச்சம்பழத்தைப் பிழி...''

''.........''

''பிழிஞ்சிட்டியா? அந்தப் பாத்திரத்தை அப்படியே கொண்டுபோய் ஃப்ரிஜ்லே வையி.''

இதற்குள் மதுராவின் ஈரக் கூந்தல் முடிச்சு நெகிழ—அவள் இரு கைகளும் அப்பளம் பொரிப்பதில் ஈடுபட்டிருந்ததால் அதற்கும் அவள் பாப்புவின் உதவியையே நாட வேண்டியிருக்கிறது.

மதுராவுக்கு வயசு நாற்பத்திமூன்று ஆகிறது. ஆனாலும் பார்ப்பதற்கு முப்பத்தியைந்துக்குமேல் மதிப்பிட முடியாது. அப்படியொரு தேகவாகு. உடம்பு தான் கைக்கு அடக்கமாய் செப்புச் சிலை போல இருந்ததென்றால் கூந்தல் அடர்ந்து, இடுப்புக்கும் கீழே அலையெனப் புரளும்.

''எங்கம்மா கல்யாணம் கட்டி, எங்க அப்பா வீட்டுக்கு வர்றச்சே, தலை தேய்ச்சு விடறதுக்காகவே ஒரு வேலைக்காரியையும் கூட்டிட்டு வந்தாங்களாம்...''

மதுராவின் கடைக்குட்டிப் பெண் ரசிகா தன் சினேகிதிகளிடம் இப்பொழுதும் பெருமையாகச் சொல்வதுண்டு.

தனது அடர்ந்த கூந்தலே மதுராவுக்குப் பல சமயங்களில் இம்சையாகவும் இருப்பதுண்டு... தலைக்குக் குளித்தால் மாலை வரையில் ஈரம் காயவே காயாது. இரவானால் ஒற்றைத் தலைவலி வந்துவிடும்.

''என்னங்க...தலைவலி தைலத்தை எங்கே வச்சீங்க?''

''ஏன், இதோ இருக்கே.''

''கொடுங்க.''

''எங்கே?''

''த்ச்... இவர் வேற— சமயம் தெரியாம...வலியில மண்டை பொளக்கறதுங்கறேன்...''

மதுரா சிணுங்க—அவள் கணவர் தேவேந்திரன், தைலப் புட்டியை எடுத்துக்கொண்டு, மனைவியின் பக்கத்தில் உட்காருவார். ஐம்பதை நெருங்கிக் கொண்டிருக்கும்



அவருக்கு, தான் இன்னமும் சின்னப் பையன் என்றே நினைப்பு... அதுவும் பெண்டாட்டியிடம் கொஞ்ச, அவருக்கு நேரம் காலமே கிடையாது.

இத்தனைக்கும் பெரிய பிள்ளைகள் இருவருக்கும் திருமணமாகி விட்டது. ரசிகா எத்திராஜ்ஜில் படிக்கிறாள். பெரிய பங்களா. ஆளுக்கு ஒரு படுக்கையறை. வசதிகளுக்குக் குறைவில்லைதான் என்றாலும் வயசுக்கும் ஒரு மதிப்பு தர வேண்டாமா என்பது மதுராவின் வாதம்.

''நல்லாயிருக்கே...ஊரான் பெண்டாட்டி அழகா இருந்தாலும் பார்க்கறது தப்புங்கறே... தாலி கட்டின நீயோ—இப்பவே பிடிச்சு தொடக்கூடாதுன்னு சட்டம் போடறே! என் பெண்டாட்டிய நான் கொஞ்ச எவனை அனுமதி கேட்கணும்?''

இப்படி 'ஆய் ஊய்' என்று குதிப்பார்.

மதுராவுக்குத் தலைவலி என்றால் இவருக்கு இன்னமும் குஷி பிறந்துவிடும்.

''இந்தா... இப்படி வந்து என் மடியிலப் படு—எங்கே வலிக்குது? இப்படிக் காமி, நான் தேய்ச்சு விடறேன். மதுரா, நான் ஒண்ணு சொன்னா கோவிச்சுக்க மாட்டியே...''

''தயவுசெஞ்சு 'ஏ' ஜோக் வேண்டாம். வேற என்ன வேணுமானாலும் சொல்லுங்க.''

''இது 'ஏ' இல்லேம்மா... உனக்கு ஒத்தைத் தலைவலியின்னு சொன்னவுடனே—ஒரு பத்திரிகையிலப் படிச்சதுதான் ஞாபகம் வந்தது— இதுமாதிரி ஒத்தைத் தலை வர்றது எதனாலே தெரியுமா?''

''சொல்லுங்க—வயசாயிடுச்சுன்னு சொல்லுவீங்க...''

''அதான் இல்லே. சிலபேருககு 'மூட்' வந்து, தன்னோட ஜோடியோட என்ஜாய் பண்ணணும்னு தோணிடுச்சுன்னு வச்சுக்க...அந்த நினைப்பு—செயலாகற

வரைக்கும் இப்படித்தான் தலைய வலிக்குமாம். என் ஜாய் பண்ணி முடிச்சாச்சுன்னா தலைவலி 'போயிந்தி... இட்ஸ் கான்' ஆயிருமாம்.''

''அய்யோ...போதுமே. சத்தம் போடாதீங்க. பக்கத்து ரூம்லேதான் ரசிகா இருக்கா...''

''ஸோ வாட்? நம்ம ரூம் ஏ.சி பண்ணினதே மறந்து போச்சு உனக்கு. ஒரு முக்கல், முனகல் வெளிலக் கேட்காதுடா சுத்தம். அது சரி... தலைவலிபத்தி நான் சொன்ன மேட்டர் பொய்யின்னா சொல்றே? மறைந்த அமெரிக்க ஜனாதிபதி கென்னடிக்குகூட இந்தத் தலைவலி உண்டாம்...எல்லாம் முடிஞ்சு உடப்பு ரிலாக்ஸ்ஸானதும் தலைவலியும் போயிடுமாம்...''

''உக்கும்... உங்ககிட்ட வந்து சொன்னாராக்கும்...''

மதுரா—அவரிடமிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முயற்சிப்பாள். அவரோ, தன் பிடியை மேலும் இறுக்கிக் கொண்டு அவள் காதோடு சொல்வார்—

''மது... நான் நினைக்கறேன். உன் தலைவலியும் கென்னடி தலைவலி ரகத்தைச் சேர்ந்ததுதான்னு... வேணுமானா டிரை பண்ணிப் பாரேன். 'அந்த' சமாச்சாரத்துக்கு அப்புறம் தலைவலி போயே போச்சுன்னு நீ சொன்னாலும் சொல்லுவே... கமான்... லெட் அஸ் டிரை...''

ஒரு தலைவலி மறுநாள் முழுவதும் மதுராவற்கு 'அச்சு புச்'சென்று தும்மலில் கொண்டுபோய் விட்டுவிடும்.

''நேத்துதானே தலைக்குக் குளிச்சீங்க அத்தை... மறுபடியும் இன்னிக்கும் தலைக்குத் தண்ணி விட்டுட்டா ஏன் ஜலதோஷம் பிடிக்காது...''

திருமணமாகி வந்த புதிதில்—அந்த வீட்டின் மூத்த மருமகளான நந்தினி, வெகுளியாகக் கேட்டிருக்கிறாள்.



''ஷ்...இந்தா நந்து. அம்மாகிட்ட இதுமாதிரி இசகுப் பிசகா எதையும் கேட்டு வைக்காதே. நேத்திக்குத் தலைக்குக் குளிச்சு, இன்னிக்கும் தலையில தண்ணி ஊத்திட்டதுக்கே இப்படி கேட்கறியே சனி ஞாயிறுல பாரு... அம்மா காலையில, சாயந்திரம்னு எப்பவும ஈரத்தலையில டவலைச் சுத்திட்டுத்தான் அலைவாங்க.''

''ஐயோ...ஏன் அப்படி...''

''அதொண்ணுமில்லே. எங்க அப்பாவுக்கு அப்பா—அதான் எங்க தாத்தா—தன்னோட பாலியப் பருவத்துல—சிட்டுக்குருவி லேகியத்தை—அல்வாக் கணக்கா எடுத்து முழுங்கினதோடப் பலன்... அப்பாவுக்கு இன்னமும் இளமை முறுக்கு தளரல்லே...''

மதுரா, கையில் உள்ள அப்பளத்தை அடுப்பில் போடுவதற்குள்—காற்றில் கற்றைக் கற்றையாய் முடி பறக்க. அவள், பாப்புவுக்கு இரண்டாவது முறையாய் குரல் கொடுக்கிறாள்.

''பாப்பு ரெண்டு மூடி எலுமிச்சம் பழம் பிழிய இத்தனை நேரமா? ஃப்ரிஜ்ஜை ரொம்ப நேரம் திறந்து வைக்கக்தே. சீக்கிரம் வா. இந்தத் தலை முடிய இழுத்து ஒண்ணாச் சேர்த்து இறுக்க முடிச்சுப் போடு. கடவுளே, இத்தனை முடியில்லேயின்னு யார் இங்கே அழுதாங்க.''

அப்பளத்தை எண்ணெயில் போட்டவள், தனது இடுப்பில் குறுகுறுப்பாய் விரல்கள் படிய, ஒரு கணம் நெளிகிறாள்.

பாப்புவின் பிஞ்சு விரல்கள் இல்லை இது. பழக்கப் பட்ட விரல். ஆனாலும் பட்ட போதெல்லாம் அவளுள் வீணையின் தந்தியை இழுத்து முறுக்கினாற் போல, உணர்ச்சிகளைத் தூண்டச் செய்யும் விரல்.

'ஏய்! பாப்பு எங்கே போய் தொலைஞ்சே. ஏய்! அடுப்புல எண்ணெய். என்ன கண்ணராவி இது.''

மதுரா, 'படக்'கென காஸ் அடுப்பின் குமிழைத் திருப்பி அணைத்துவிட்டு, தன் கழுத்தைத் திருப்ப முயற்சிக்கிறாள்.

எங்கே! கூந்தலை முடிந்த தேவேந்திரன்— பசை போட்டாற்போல, அவளுடைய முதுகுக்குப் பின்னால் ஒட்டி நிற்கிறாரே!

''இவரை என்ன செய்தால் தேவலை.''

மதுராவிற்கு உடம்பு கூசிப்போகிறது. எந்த நேரத்திலும் கூடத்தில் அமர்ந்து அரட்டையடிக்கும் மூத்தவன் தீபக்கோ, இல்லை அவன் மனைவி நந்தினியோ உள்ளே வரலாம்.

சின்னவன் லலித், தன் மனைவி பவித்ராவுடன் கோவிலுக்குப் போயிருக்கிறான். ரசிகா, மாடியில் தன் சினேகிதிகளுடன்.

திடுதிப்பென்று, 'வாங்கடி எல்லாருமா கிச்சனுக்குப் போய் அஞ்சாறு வடையாவது சாப்பிட்டுட்டு வரலாம்.' இப்படிச் சொல்லி, சகல வால்களையும் இழுத்துக் கொண்டு முன் அறிவிப்பின்றி நுழையலாம்.

யார் கண்ணுலயாவது பட்டுத் தொலைச்சா— அப்புறம் நாக்கைப் பிடுங்கிட்டாலும் கப்பலேறின மானம் திரும்பி வருமா!

அவள் தனது பலம் முழுவதையும் பிரயோகித்து ஒரு உதறலில் கணவனை உதற—

அந்த நேரம் பார்த்து சமையலறை வாசலில் பழக்கப் பட்ட குரல்—

''டேய் தேவேந்திரா...சின்னப் புள்ளைங்க எல்லாம் கூடத்துல இருக்குங்க. நீ என்னடா சமையக்கட்டுல பெண்டாட்டி தலைப்பைப் பிடிச்சிட்டு இருக்கே. வெளியே வாடா...''

தேவேந்திரனின் உயிர் நண்பர் வையாபுரி வாத்தியார்!

''அம்மாடி...''

மதுராவிற்கு நெஞ்சப் பதைப்பு கொஞ்சம் அடங்குகிறது. ஆனாலும் கண்களை இருட்டிக் கொண்டு மயக்கம் வரும்போல் இருக்கிறது...

தேவேந்திரனின் முகத்திலும் அசடு வழிகிறதுதான் என்றாலும் உடனேயே சமாளித்துக் கொள்கிறார்.

''ஏண்டா, செருப்பைக் கழட்டிப் போட்டுட்டு, கழுகுக்கு மூக்குல வியர்க்கற மாதிரி—நேரே சமையலறைக்குத்தான் வரணுமா! ஹால்லே பசங்களோட உட்கார்ந்திருந்தா நான் வரமாட்டேனா? இங்கே மதுரா ஒண்டியாத் திண்டாடறா. நான் அவளுக்குக் கொஞ்சம் ஹெல்ப் பண்ணலாம்னு வந்தேன். பாரேன், ரெண்டு மருமக இருக்கா, உலக்கை மாதிரி. பொண்ணு இருக்கா. எல்லாத்தையும் விரட்டிட்டு இவளே எல்லாத்தையும் இழுத்து விட்டுட்டு, த்ச்...த்ச் எப்படி வியர்த்திருக்கு பாரு, துடைச்சு விடட்டுமா மது...''

''ஒண்ணும் வேண்டாம். தயவுசெஞ்சு வெளியிலப் போங்களேன். அண்ணா! இவரை மாடிக்கு அழைச்சிட்டுப் போங்க. ரெண்டு பேருக்குமா சேர்த்து காபி கொடுத்தனுப்பறேன். போங்க! ப்ளீஸ்...''

''வாடா! தங்கச்சிதான் இத்தனை சொல்லுது இல்லே...''

''...............''

''வாயேன்டா! தேரை வடம் கட்டி இழுக்கறாப்பல கயிறு கொண்டு வந்து கட்டி இழுக்கட்டுமா.''

**தே**வேந்திரன் முகத்தைத் தொங்கப் போட்டபடி நண்பரோடு, தனது அறைக்குள் அடியெடுத்து வைக்கிறார்...

வையாபுரிக்கு அழுவதா சிரிப்பதா என்று புரிய வில்லை...

என்ன மனுஷன் இவன்...

வயசாச்சே தவிர—இன்னும் டீனேஜ் பையன் மாதிரி இருக்கான்.

வீட்டு மருமகளுங்க கேலி செய்யறது கூடவா உறைக்காது ஒருத்தனுக்கு.

''சரி! பெண்டாட்டிகிட்ட தான் ஏதோ மயக்கம்னா—நியாயம்னு விட்டுடலாம். அம்பது வயசுக்கு பார்க்கற பொண்ணுங்ககிட்ட எல்லாம் வழியறானே... நேத்து இவன் பிள்ளை என்னடான்னா ஒரு பாட்டம் என் கிட்ட அழுதுட்டுப் போனான். 'அப்பாவுக்கு கொஞ்சம் கூடப் பொறுப்பே இல்லே அங்கிள்... ஆபீஸ்லே செகரட்டரி மாலதிக்கு— ஏரோபிக்ஸ் கிளாசுக்கு சேரச்சொல்லி, தானே காருல கூட்டிட்டுப் போய்—அதுக்கான ஃபீஸ்ஸை யும் கட்டிட்டு வந்திருக்காருங்கறான்... என்னத்தைச் செய்ய...''

வையாபுரியின் எண்ண ஓட்டத்தைப் புரிந்து கொள்ளாமலேயே—தேவேந்திரன் தனது தலையணைக்கு அடியிலிருந்து முறம் முறமாய்—கலர் கலராய்—இள வயசுக்காரிகளின் கவர்ச்சிப் புகைப்படங்கள் அடங்கிய ஆங்கிலப் பத்திரிகையை எடுத்துப் புரட்டுகிறார்.

''வையாபுரி... இந்தப் பொண்ணைப் பார்த்தியா... இடுப்பு எததனை 'சிக்'குனு ஒரு பிடிக்குள்ள அடங்கறாப் பல இருக்கு. ஏண்டா இந்த முழி முழிக்கறே. கண்ணைத் திறந்து பாரேன். ரசிக்கறதுனால குடி முழுகிப் போயிடாது. நான் ஒண்ணும் உன்னை மாதிரி சினேகிதன் பெண்டாட்டி கிட்டப் போய் வத்தி வைக்க மாட்டேன்.''

வையாபுரிக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வருகிறது.



''தேவா... நிஜம்மாவே கேட்கறேன். மறைக்காமச் சொல்லு... இந்த ஆபாசத்தை எல்லாம் ரசிக்கறியா நீ? இல்லே—ரசிக்கற மாதிரி நடிக்கிறியா?''

''நான் எதுக்குடா நடிக்கணும்? டேய், முதல்லே நீ. உன்னோட இமேஜ் எல்லாத்தையும் கழட்டி வச்சிட்டு, என் கையில அடிச்சு சொல்லு... இந்தப் படம் ஆபாசமா? ஏண்டா, இவ என்ன துணியில்லாமயா நிக்கறா? எங்கே யாவது ரசக்குறைவா போஸ் கொடுத்திருக்காளா... அந்த மொகத்தைப் பாரு... கழுத்து என்னமா நீண்டு, நிமிர்ந்து அவளோட தாபத்தை வெளிப்படுத்தறது பாரு... நம்ம சினிமாக்கள்லே வேணுமுன்னே உடம்பை எக்ஸ்போஸ் பண்ணறாங்களே... அதுதாண்டா ஆபாசம்... இது கடவுள் கொடுத்த வரப்பிரசாதம்டா... கண்ணு இருக்கற வரைக்கும் ரசியேன்.''

''அதான் மாலதியக் கொண்டுபோய் ஏரோபிக்ஸ்லே சேர்த்தியா?''

தேவேந்திரனின் முகத்தில் ஆயிரம் மெழுகுவர்த்தி களை ஏற்றி வைத்த பிரகாசம்.

''அட... யாருடா சொன்னாங்க?''

''யாரோ சொன்னாங்க. அவ வயசு என்ன?''

''ஏன்... இருபத்தஞ்சு.''

''உன் வயசுலப் பாதி— உனக்கு வெட்கமாயில்லே?''

''ஏண்டாப்பா... இதுல வெட்கம் எதுக்கு? மாலதி யோட உடலமைப்பை கவனிச்சிருக்கியோ நீ... இடுப்பு, முதுகுச் சரிவு எல்லாம் அம்சமா இருக்கும். முன்னாலே தொப்பை மட்டும் லேசா... இப்பவே கவனிக்கலை யின்னா அப்புறம் பார்க்க சகிக்காமப் போயிடும்.''

''அது அவ புருஷனோட கவலை... உனக்கு என்னடா தலையெழுத்து!''

''நல்லாயிருக்கே... நம்ம கண் முன்னாலே ஒரு அழகு தேவதை பலூன்மாதிரி உப்பி வீணாறதைப் பார்த்துட்டு சும்மாயிருக்கச் சொல்றியா...''

வையாபுரிக்குத் தலை முடியைப் பிய்த்துக்கொள்ளலாம் போலிருக்கிறது. அப்படிப் பிய்த்துக்கொள்கிற அளவுக்கு அங்கே சரக்கு இல்லாததால் சினேகிதனின் மடியில் விரிந்துகிடந்த பத்திரிகையை ஓங்கிக் குத்துகிறார்.

சட்டென மின்னலாய் ஒரு யோசனை.

இவனை இவன் வார்த்தையாலேயே வளைச்சுப் பிடிச்சா என்ன?

அவர் உடனே சாந்தமாகி, நண்பனின் தோளைத் தட்டிச் சிரிக்கிறார்.

''சரிடா... உனக்கு இருக்கறமாதிரி அதே நினைப்பு— இப்ப நந்தினி வேலைக்குப் போறாளே... அந்த கம்பெனி பாஸ்ஸுக்கோ, பவித்ரா வேலை பார்க்கற ஹாஸ்பிடல்லே சீஃப் டாக்டருக்கோ தோணிச்சுன்னு வச்சுக்க... நல்லா கவனி. ஆறு கம்பெனிக்கு சேர்மனா இருக்கற திரு. தேவேந்திரன் அவர்களோட மருமகள்களை எவனோ ஒரு ராஸ்கல்— இதுமாதிரி உடற்பயிற்சி நிலையத்துல கொண்டு விட்டு, அவளுக்காக அபர தண்டமா சம்பளமும் கட்டினான்னா... நீ சும்மா இருப்பியா... கொதிச்சு போக மாட்டியா?''

தேவேந்திரன் பெரிய சிகரெட் ஒன்றை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டு நிதானமாகச் சொல்கிறார்.

''இதுல நான் கோவிச்சுக்கறதுக்கு என்னடா இருக்கு. என் பசங்களுக்குத்தான் பெண்டாட்டியோட உடம்பைப் போற்றிப் பாதுகாக்கத் தெரியல்லே.., எவனோ நம்மளை மாதிரி ஒரு ரசிகனுக்கு இந்த உபயோகமான எண்ணம் தோணியிருக்கேயின்னு ஓடிப்போய் அவனுக்கு கை கொடுப்பேன்டா.''

வையாபுரி, தேவேந்திரனையே உற்றுப் பார்க்க— அவர், கட்டிலில் வாகாய் கால் நீட்டி சாய்ந்தபடிச் சொல்கிறார்.

''வையூ... எதையும் கலைக் கண்ணோடு ரசிக்கணும்பா. நான் பொண்ணைப் பார்த்து மட்டும்தானா பிரமிக்கிறேன்? பூ, செடி, நாய்க்குட்டி, குழந்தை... காத்து, மழை... இப்படி எல்லாத்தையும் ரசிக்கிறேன். நேசிக்கிறேன்டா... அதுக்கு என்ன செய்ய... பொம்பிளைங்க மட்டும் இந்த நேசிப்பைத் தப்பா எடுத்துக்கறாங்க... ஒரு குழந்தையப் பார்த்து 'ஐ லவ் யூ'ன்னு சொன்னா குத்தமாத் தோணாத நம்ம நாட்டுல, ஒரு பொண்ணைப் பார்த்துச் சொன்னா மட்டும் பெரிய ரவுடித்தனமாத் தோணறது ஏன்னு தெரியல்லே... என்னோடத் தப்பு— அழகைப் பார்த்தா கொஞ்சம் தடுமாறிடறேன்.''

அவர் சொல்லிக்கொண்டிருக்கும் போதே அறைக் கதவைத் திறந்தபடி ஒரு கையில் டிரேயுடன் பாப்பு வருகிறாள்.

''ஹாய் பாப்பு... இந்த வருஷம் என்ன ஏழாவது போறியா?''

''ஆமா.''

''குட்... பாப்பு, நீ என்ன செய்யறே, தினமும் காலையில எழுந்தவுடனே உங்க வீட்டு வாசல் நிலையைப் பிடிச்சிட்டு, ஊஞ்சலாடு... அப்பத்தான் ஒசரமாவே. இல்லையின்னா உங்கம்மா மாதிரியே குட்டையாவே ஆயுசுக்கும் இருப்பே...''

அவர், பாப்புவின் சின்னக் கன்னத்தில் செல்லமாய் தட்டிவிட்டு, வையாபுரியைப் பார்த்து சிரிக்கிறார்.

''இங்கே பாருடா... இந்தப் பொண்ணு எக்ஸர்ஸைஸ் கிளாஸ்லே சேரணும்னு சொன்னாலோ... இல்லே ஒரு

பவுடர் டப்பா வாங்கித் தாங்கன்னு கேட்டாலோ கூட நான் செய்வேன்டா... இதெல்லாம் உனக்குப் புரியாது.''

வையாபுரிக்கு புரியத்தான் இல்லை. ஆனாலும் நண்பனின் போக்கு, இவனை பெரிய விபரீதத்தில் சிக்க வைத்தாலும் வியப்பில்லை என்பது மட்டும் புரிகிறது அவருக்கு.

'மனுஷன் எங்கேயாவது ஒரு அடி வாங்கினாத்தான் உருப்படுவான்.'

அவர் நினைத்த அந்த 'அடி' —இதோ இப்பொழுது தான் பொது தொலைபேசியில்—தேவேந்திரனின் தொலை பேசி எண்களை தனது மெல்லிய விரல்களால் சுழற்றிக் கொண்டிருக்கிறது.

''ஹலோ தேவேந்தர் சாரா... சார் நான் மகிமா பேசறேன்... ஆமா சார்... உங்க பழைய மகிமாவேதான்!

# 2

**இரண்டு கண்களும்**
**இரண்டு கண்களும்**
**எதிர் பட்டுக் கொள்ள—**
**நான்கும் குருடான பின்**
**நடக்கின்ற நாடகம்—**
**காதல்!**

மதுராவிற்குக் கவலையாக இருக்கிறது. தாலி கட்டின கணவனைச் சமாளிப்பதைவிட—நூறு குழந்தை களைக் கட்டி மேய்த்துவிடலாம்போல் தோன்றும் அவளுக்கு.

இன்று நேற்றில்லை... என்றைக்கு இந்த மனிதரிடம் மனசைப் பறி கொடுத்தாளோ—அன்றைக்கே இவரது இந்த சுபாவமும் அவளுக்குப் பரிச்சயமாகிவிட்டது.

இன்னமும் அவள் நெஞ்சில் பசுமையாக அந்தகாலச் சம்பவங்கள்...

மதுராவின் தந்தையும், தேவேந்திரனின் தந்தையும் பால்ய சினேகிதர்கள். ஒரே ஊர், ஒரே மாதிரியான அந்தஸ்து—செல்வாக்கு. இப்படி எல்லாம் இருந்தும் மதுராவின் குடும்பம் இனிமையானத் தென்றலாக இருக்க, தேவேந்திரனின் வீட்டில் எப்பொழுதும் ரகளையும், ஆர்ப்பாட்டமும் அலையாய் கொந்தளிக்கும்

காரணம் சொல்ல வேண்டியதே இல்லை. தேவேந்திரனின் தந்தைக்கு அந்த கிராமத்தைச் சுற்றி உள்ள ஊர்களில் எல்லாம் சின்ன வீடு இருந்ததுதான்.

அவர் வரையில் அது ஒரு கௌரவம். தன் அந்தஸ்த்தையும், பௌருஷத்தையும் எடுத்துக் காட்டும் அளவுகோல். மதுராவின் தந்தையையே அவர்—'உபயோகமில்லாதப் பய' என்று கேலி செய்வார்...

மதுரா தந்தையோடு அடிக்கடி அந்த வீட்டுக்குப் போயிருக்கிறாள். அவளின் பதின்மூன்று வயது வரையில் இரு வீட்டாரும். 'என் பிள்ளை உனக்குத்தான்...உன் பெண் என் மருமகள்தான்', என்று பேசக் கேட்டிருக்கிறாள். தெரிந்தோ தெரியாமலோ—தேவேந்திரனுடன் விளையாடும் போதெல்லாம் அவனுக்காக விட்டுக் கொடுத்திருக்கிறாள். எல்லோருமாய் சாப்பிட உட்காரும்போது கூட, அவன் பக்கத்தில் அவளுக்கு இடம் கிடைத்தால் நவநிதியே கிடைத்தாற்போல சந்தோஷித்திருக்கிறாள்.

பதின்மூன்று வயதில்—அவள் பெரிய மனுஷியாகி கூட்டுக்குள் அடைபட, கிராமத்திலிருந்து டவுனுக்கு தினமும் கல்லூரிப் படிப்புக்காகப் போய்வந்த தேவேந்திரன்—மேற்படிப்புக்காக சென்னை பல்கலைக்கழகத்தில் சேர—

இவள் ஏதோ பண்டிகை நாட்களில் பெற்றோருடன் போய்—கடவுள் இல்லாதக் கோவிலை தரிசித்துவிட்டு வருவதுபோல, தேவேந்திரனின் வீட்டுக்குப் போய் வந்து கொண்டிருக்க—

விடுமுறை நாட்களில் ஊருக்கு வரும் தேவேந்திரன்—மதுராவைப் பார்க்கும்சாக்கில், அவளது கிராமம் தேடி வந்து போக—



'திடுதிப்'பென ஒருநாள் மதுராவின் தந்தை விடிகாலையிலேயே புறப்பட்டு, தேவேந்திரனின் கிராமமான முல்லைவாசலுக்குப் போனவர்—இரவு வெகு நாழிகைக்குப் பின் வீடு திரும்பினார்.

மதுராவுக்கும் தூக்கம் வரவில்லை. ஆனாலும் எழுந்து வந்து, 'என்ன விஷயம், எதற்காகக் கூப்பிட்டனுப்பினார்கள்' என்று விசாரிக்கக் கூச்சம்.

படுக்கையில் மரவட்டை மாதிரி சுருண்டு கிடந்தாலும், செவிகள் மட்டும், ஊஞ்சலில் களைப்புடன் வந்தமர்ந்த அப்பாவின் வார்த்தைகளுக்காகக் காத்திருந்தன...

அம்மாவுக்கு அவளை விடவும் கவலை. கணவருக்குக் குடிக்க மோரைக் கொண்டுவந்து வைத்தபடியே விசாரித்தாள்:

''என்னவாம்? எதுக்காக அத்தனைக் கருக்கல்லே ஆளை விட்டனுப்பிச்சாங்களாம்...''

''ப்ச்...எதுவுமே சொல்லும்படியா இல்லே லட்சுமி!''

''ஏன்...உங்க சினேகிதர் புதுசா எந்த ஊர்லே வீடு பார்த்திருக்கார்?''

''அட, அவன் சங்கதிதான் தெரிஞ்ச கதையாச்சே... இப்ப அடுத்த கிளையில்லே ஆரம்பிச்சிருக்கு?''

''நீங்க யாரைச் சொல்றீங்க?''

''வேற யாரு? முல்லைவாசல் ஜமீன் பெத்து வச்சிருக்கறது கருவேப்பிலைக் கொழுந்து மாதிரி ஒரே வாரிசு, எல்லாம் அவன்தான்!''

''யாரு...நம்ம தேவாவா?''

''நம்ம என்னடீ நம்ம? அப்பனுக்குப் பிள்ளை தப்பாமப் பொறந்திருக்கான். பட்டணத்துக்குப் படிக்க அனுப்பினா—அங்கே, கூடப் படிக்கற பொண்ணுகூட

ஒரு பார்க் விடாம, ஒரு சினிமா விடாமச் சுத்தியிருக்கான். காலேஜுக்கு 'கட்' அடிச்சிட்டு இன்னும் நாலஞ்சு சினேகிதப் பசங்களையும் கூட்டிட்டு, பெங்களூர் போயிட்டு வந்திருக்கான்...பிரின்ஸ்பால் தந்தி ஒரு பக்கம். இந்தப் பய, சினேகிதப் பட்டாளத்தோட .அந்தக் குட்டியையும் அழைச்சிட்டு முல்லைவாசலுக்கே வந்துட்டான். ஏற்கனவே என் சினேகிதன் வீட்டுல தங்கமாட்டான். இப்ப சேதி கேட்டதுல இருந்து, எங்கே போய் ஒளிஞ்சானோ? எட்டிப் பார்க்கலே...தேவாவைப் பெத்தவ வயித்துலயும், வாயிலயும் அடிச்சிட்டு அழறா... கண்ணைராவி...''

''ஐயோ!!''

மதுரா படபடக்கும் இதயத்தை, தலையணையில் புதைத்தபடி அப்படியே கிடந்தாள். அவளால் தந்தையின் வார்த்தைகளை நம்பவும் முடியவில்லை; நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

சென்ற வருடம் கிறிஸ்துமஸ் லீவுக்கு வந்திருந்த போதுகூட, தேவேந்திரன், அவள் கையில் அடித்து சத்தியம் செய்யாதக் குறை...

''மது! இப்ப உனக்கு என்ன வயசு?''

''ஏன்? பதினஞ்சு முடியப் போகுது...''

''அடுத்தாப்பல ஸ்வீட் ஸிக்ஸ்டீன்னா...நம்ப ரெண்டு பேரோட அப்பா அம்மாக்களும் பெரிய மனசு வச்சு, நம்ம கல்யாணத்தை இப்பவே முடிச்சிட்டா எவ்வளவு நல்லாயிருக்கும்?''

''ஐய்யே...ஆசையப் பாரு...நீங்க மட்டும் படிச்சாப் போதுமா? நான் காலேஜ்லே படிக்க வேண்டாமா? அசட்டுப் பிசட்டுன்னு பேசாம, படிப்பை முடிக்கப் பாருங்க. இந்த வயசுக்குள்ளே கல்யாணம் செஞ்சுக்க எனக்குப் பிடிக்கலேப்பா!''



''ஏய், நிஜம்மாத்தான் சொல்றியா?''

''சத்தியமா''...

''உனக்கு கொஞ்சமாவது ரசனை இருக்கா? காலேஜ்லே படிச்சு, கண்ட நேரத்துல கண் முழிச்சுப் படிச்சு, கண்ணாடி மாட்டிட்டு, முத்தின முருங்கக்காயா ஆனதுக்கு அப்புறம்தான் பந்தல்லே உட்காருவியா?''

''அதுல என்ன தப்பு? நிஜம்மாவே உங்களுக்கு என் மேலப் பிரியம் இருந்தா, அதுவரைக்கும் காத்துட்டிருக்க வேண்டியதுதான். நான் என்ன, உங்களை மாதிரி ரெண்டு மூணு டிகிரியா வாங்கப்போறேன். ஒண்ணே ஒண்ணு... எங்க குடும்பத்துலேயே யாருமே காலேஜிலே போய் படிச்சதில்லே! நானாவது இந்த அவமானத்தைத் துடைக்கணும்னு இருக்கேன்.''

''மது! நான் சொல்றேனேயின்னு தப்பா எடுத்துக்காதே. இப்ப என்ன, படிச்சுட்டு கல்யாணம் செஞ்சுக்கறதைவிட, தாலியக் கட்டி என் வீட்டுக்கு மருமகனா வந்துட்டுப் படிக்கக்கூடாதா? என் வீட்டுல எங்கம்மாவுக்கே அடுப்பங்கரையில வேலை இலலே. நீ வந்தா— மேலே படிக்க நானே உனக்கு தினமும் பாடம் சொல்லித் தருவேனில்லே... காலேஜ்லே இதுமாதிரி குரூப்பா சேர்ந்து படிக்கறதை 'கம்பைன் ஸ்டடி'யின்னு சொல்லுவாங்க.''

மதுராவிற்கு அந்த யோசனை பிடித்திருந்தது. ஆனாலும், தன் வீட்டில் இம்மாதிரி பேச்சுக்கள் எல்லாம் எடுபடாது என்பதும் அவளுக்குப் புரியும்.

மேலும், அவள் எப்படி வலியப்போய் 'நான் படிச்சது போதும்! சீக்கிரம் எனக்குக் கல்யாணம செஞ்சு வையுங்க' என்றா கேட்பாள்.

முதலில் பெற்ற தாயாரே சிரிக்கமாட்டாளா?

"முழுசா இன்னும் பதினஞ்சே முடியல்லே. அதுக்குள்ள என்ன அவசரம்"—என்று கேட்கமாட்டார் களா?

"இல்லே தேவா... எப்படியும் என் கல்யாணத்துக்கு குறைஞ்சது மூணு வருஷமாவது ஆகும்னு நினைக்கறேன். நாம அவசரப்பட்டாப்பல காரியம் முடியாது!"

"முடியும்!"

"எப்படி?"

"நீ வேணாப் பாரேன்... இந்த வியாழக்கிழமையில இருந்து நான் ஆஞ்சநேய விரதம் இருக்கப்போறேன்—பச்சைத் தண்ணி பல்லுலப் படாம!"

"ஐய்யய்யோ! அப்ப பல்லுகூட விளக்கமாட்டீங் களா?"

"மக்கு... தண்ணிகூடக் குடிக்காம சுத்த விரதம் இருக்கறதை அப்படித்தான் சொல்லுவாங்க. இந்தா, சிரிக்காதே... ஏதுடா இவனாவது விரதம் இருக்கறதா வதுங்கறியா? நீ வேணாப் பார்த்துட்டே இரு... என் விரதம் கண்டிப்பா பலன் கொடுக்கும்."

"அது சரி, விரதம் இங்கே மட்டும்தானா? மெட்ராஸ் போய், ஹாஸ்டல்லே தங்கிப் படிக்கறப்பவும் கூடவா..."

"விரதம்னா எங்கேயிருந்தாலும் விரதம்தான். அந்த மாதிரி விரத நாள்லே ஃபிரண்ட்ஸ் காபி குடிக்க கூப்பிட்டாக்கூடப் போகமாட்டேன். இது உன் மேல சத்தியம்..."

இப்படி, அவளிடம் கூறிவிட்டுச் சென்றவனா, இந்த மாதிரி ஒரு கெட்ட பெயருடன் ஊர் திரும்பியிருக்கிறான்? அதுவும் இந்தப் பழிச் சொல்லுக்கு யார் காரணமோ அவளையும் அழைத்துக்கொண்டு...



அவளது கண்ணீர், தலையணையை நனைக்க, அவள் தந்தையோ—சலிப்புடன் கூறுகிறார்:

"சரி...சனியனை விடு. நல்ல வேளை, பிள்ளையாண் டான் குணம், நம்ம பொண்ணைக் கொடுக்கறதுக்கு முன்னாலேயே தெரிஞ்சுதே. அந்தமட்டும் தெய்வத்துக்கு நன்றி சொல்லணும்."

"அதில்லே வந்து...குழந்தை மதுராவுக்கு தேவாமேல கொள்ளைப் பிரியம்... இந்த செய்தியக் கேட்டா மனசு ஒடிஞ்சுப் போயிடுவா."

"இந்தா... அவ குழந்தை. ஏதோ சினேகிதமாப் பழகினா. அவ்வளவுதான். பெரிசுகளாச் சேர்ந்து, ஒண்ணுமில்லாத விஷயத்துக்கு—வெள்ளைப் பூசணியில மொகம் வரைஞ்சுப் பார்க்கற மாதிரிப் பார்க்காதீங்க. ஆமா, இப்பவே சொல்லிட்டேன். அவளுக்கென்னடி... பணமில்லையா? அழகில்லையா? விரலைச் சொடுக்கற நேரத்துல நூறு மாப்பிள்ளைங்களைக் கொண்டு வருவேன்டீ நான்..."

அப்பாவின் வார்த்தைகளில் மதுரா ஆடிப்போய் விட்டாள்.

இதற்கு மேலும் வாயைத் திறக்காமல் இருந்தால்—தேவாவை அவள் இழக்கவேண்டி வரும்.

'அது சரி... அவன் தான் வேறு எவளுடனோ சுற்றுகிறானாமே...அப்புறம் எதற்காக நான் உருகி வழிய வேண்டும்?'

மனசு ஒரு பக்கம் அடித்துக்கொண்டாலும் அவள் நம்பிக்கையை இழக்கத் தயாராக இல்லை.

அதே சமயம் இதுபற்றி அம்மாவிடம் பேசிவிடுவது என்கிற முடிவுக்கு வந்துவிட்டாள்.

மறுநாள்—

காலையில் எழுந்தவுடன் அம்மாவைத் தேடித்தான் போனாள்.

''அம்மா... தேவா வந்திருக்காப்பலயா?''

''ராத்திரி முழிச்சிட்டிருந்தியா?''

''.........''

அவள், கையிலெடுத்த காபியைக் குடிக்காது தாயையே வெறித்துப் பார்த்தாள்.

''அப்பா எனக்கு மாப்பிள்ளை பார்க்கறாரா?''

''போதுமே...அதுக்கு இப்ப என்ன அவசரம்...இந்தத் தை வந்தாத்தானே உனக்கு பதினஞ்சே முடியுது. கவலைப்படாதே! உன்னை காலேஜுக்கு அனுப்பி படிக்க வைக்க நானாச்சு...''

மதுரா கொஞ்சம் தயங்கினாள்.

'பிறகு, 'வெடுக்'கெனக் கேட்டாள்:

''ஏம்மா, உனக்கு எத்தனை வயசுலக் கல்யாணமாச்சு?''

''பதினாலு முடியறதுக்குள்ள... பதினாறுல நீ பொறந்துட்டே...அதெல்லாம் அந்த நாளுலே பெரியவங்களுக்குப் படிப்பு வாசனை கிடையாது. பொண்ணு திரண்டதுக்கு அப்புறம் கட்டிக் கொடுக்கறதே பெரிய தப்புன்னு நினைக்கற பத்தாம்பசலிங்க கல்யாணத்துக்கு முன்னே, பொண்ணு வயசுக்கு வந்துட்டா குளுர் காய்ச்சல்னு சொல்லி, அறைக்குள்ளேயே படுக்க வச்சு போர்த்தி வைப்பாங்க. அப்படியும் அக்கம்பக்கத்துல இருக்கற வம்புக்காரப் பொம்பிளைங்க இதைக் கண்டு பிடிச்சிட்டு, 'என்ன, முறைக்காய்ச்சல் வந்துடுச்சா'ன்னு கிண்டல் பண்ணுவாங்க... நான் அப்பவே தீர்மானிச்சிட்டேன். என் பொண்ணை காலேஜ்லே சேர்த்துப் படிக்க வைக்கணும்னு...''



மதுராவுக்கு அழுகை பொங்கியது. அவள் அம்மாவின் இரு கரங்களையும் சேர்த்து, கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

''அம்மா, கண்டிப்பா நான் காலேஜ்லே சேர்ந்து படிக்கத்தான் போறேன். ஆனா... ஆனா...அதுக்குள்ள எனக்கும் தேவாவுக்கும் கல்யாணத்தைப் பண்ணி வச்சிடு.''

''என்னடீ உளர்றே?''

''நான் ஒண்ணும் உளறலே... நீ செய்யறது உனக்கே நியாயமான்னு கொஞ்சம் யோசிச்சுப் பாரு. நீ மட்டும் பதினாலு வயசுலேயே கல்யாணத்தை பண்ணிட்டு, பதினாறு வயசுல என்னைப் பெத்தே. எனக்கு மட்டும் ஏன் பத்தொம்பது வயசு வரைக்கும் காத்திருக்கணும்கறே. அப்பாகிட்டச் சொல்லு. உடனே ஒரு முகூர்த்தம் பார்க்கச் சொல்லு!''

மதுரா 'ஓ'வென அழுதாள். அப்பா, விக்கித்துப்போய் நின்றுவிட்டார்.

ஆரம்பத்தில் ஏதோ அறியாக் குழந்தையின் பிடிவாதம் என்றே பெற்றவர்கள் நினைத்தார்கள். அவள் பேச்சைப் புறக்கணித்தார்கள்; அதட்டினார்கள்; அவ்வளவு ஏன்—ஒருமுறை சாந்தமே மொத்த உருவான அவள் அப்பா, கை நீட்டி அவளை அடிக்கக்கூடச் செய்தார்.

எதற்கும், மசியவில்லை மதுரா...பள்ளிக்குப் போகாமல் வீட்டுக்குள் முடங்கினாள். வேளாவேளைக்கு சாப்பாடு இல்லாமல் சுருண்டு படுத்தாள். பத்து வார்த்தை கேட்டால் ஒரு வார்த்தையில் பதில்.

'இத்தனூண்டுப் பெண்ணுக்கு இத்தனை ஆகாத்தியமா' என்று பெற்றவள் எரிந்து விழுந்தாள்.

''உன்னாலே உங்கப்பாவோட மானமே போகப் போறது! கொஞ்ச நாளா பார்த்தியா? அவர் பைத்தியம் பிடிச்சாப்பல இருக்கார்...''

இப்படிச் சொல்லி மிரட்டிப் பார்த்தாள்.

கேட்கவில்லையே...

கடைசியில், அப்பா ஒரு படி இறங்கி வந்தார்.

''இதோ பாரு... உனக்கு கல்யாணம்தானே வேணும். முடிச்சுடறேன். ஆனா ஒரு கண்டிஷன்; அந்த தத்தாரி தேவேந்திரன் இந்த வீட்டுக்கு மருமகனா வரக்கூடாது! வேற நல்ல மாப்பிள்ளையா நானே பார்த்து...''

''அவரைத் தத்தாரியின்னு எப்படிச் சொல்றீங்க? எதை வச்சு சொல்றீங்க! தன்னோட ஒண்ணாப் படிக்கறப் பொண்ணை அழைச்சிட்டு ஊரைச் சுத்தினா இவரை தப்பா எடை போட்டுடணுமா? நாலு ஆம்பிளைப் பசங்களும் கூடச் சேர்ந்துதானே சுத்தனாங்க? இவங்க மட்டும் தனியாச் சுத்தலையே! அப்படியே இருந்தாலும் நாலு ஆம்பிளைப் பசங்களோடச் சேர்ந்து கொட்டமடிக்கற அவளை இல்லே கேட்கணும் நீங்க...''

''..............''

''இங்கே பாருங்க. நாளைக்கு வியாழக்கிழமை. அம்மா செய்யற திரட்டுப்பால்னா தேவாவுக்கு உசிர். அம்மாவைவிட்டு செஞ்சுத் தரச்சொல்றேன். எடுத்துட்டுப் போங்க! உங்க கையாலேயே ஒரு ஸ்பூன் திரட்டுப்பாலை எடுத்து அவர் கையிலக் கொடுங்க. அவர் அதைச் சாப்பிடறாரா—இல்லையான்னு என்கிட்ட வந்து சொல்லுங்க! அப்புறம் நான் என் முடிவைச் சொல்றேன்...''

அந்தச் சின்னப் பெண்ணின் விவரமானப் பேச்சில் கல்லாய் சமைந்துவிட்டார் அப்பாக்காரர்.



அந்த வியாழக்கிழமையை மறக்க முடியுமா மதுராவினால்?

தேவேந்திரன் இப்பொது கூடச்சொல்வாரே—

''நல்ல வேளை... சபலப்பட்டு ஒரு ஸ்பூன்தானே என்று சாப்பிடாம இருந்தேனே. என்னை அந்த ஆஞ்சனேயர்தான் காப்பாத்தினார். ஒரு வக்கீல் மாதிரி வாதாடினியாமே! எப்ப அவர் வியாழக்கிழமை விரதத்தை விடல்லையோ— அப்ப, அவர் என்னைவிட்டு வேற ஒருத்தியோடப் போயிருக்க மாட்டார்னு...''

நிஜமாகவே அன்றைக்கு ஆரம்பித்த வியாழக் கிழமை விரதத்தை தேவேந்திரனும் விடவில்லை. மதுராவும் கூடச் சேர்ந்து இத்தனை வருடமாய் நன்றிக் கடனைச் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறாள்.

மகனின் நிச்சயதார்த்தத்தின் போதுகூட தம்பதியர் இருவரும், வியாழக்கிழமையன்று இந்த வைபவம் நடந்ததால் பச்சைத் தண்ணீர்கூடப் பருகவில்லையே.

பெரியவன்கூடச் சொன்னான்:

'அப்பா வியாழக்கிழமையில டைனிங் டேபிளைக் கண்ணாலப் பார்க்காம இருக்கற மாதிரி—இந்தப் பொம்பிளைங்க விஷயத்துலேயும் வாரத்துல ஒரு நாள் விரதமிருக்கக் கூடாதா?''

# 3

வாசிக்கத் தெரிந்த கரங்களுக்குத்தான்
ராகம் பிடிபடுகிறது.
நேசிக்கத் தெரிந்த மனிதர்களுக்குத்தான்
என் நெஞ்சம் புரிகிறது
உனக் கெங்கே
புரியப் போகிறது?

ஷவரின் குமிழைத் திருகினாள் மகிமா. குற்றாலச் சாரலாய் இறங்கிய நீரின் அடியில் சிலிர்ப்புடன் நின்றாள். உதட்டுக்குள் மெல்லிசாய் இந்திப் பாட்டு.

சோப்பைக் குழைத்துப் பூசும்போதே, மனசுக்குள் தேவேந்திரன்தான் வந்து நின்றார். மனுஷன்னா அவர் தான் மனுஷன். ஜென்டில்மேன். அவர் மட்டும் ஓ.கே. பின்னா இங்கேயே செட்டிலாயிடணும். மறுபடியும் எவன் பின்னாலேயும் காவடி எடுத்துட்டு ஓடக்கூடாது...

மகிமா, தன்னைத்தானே நொந்து கொள்கிறாள்.

இன்றைக்கு சரியாய் ஐந்து வருடங்களுக்கு முன். மகிமா, தேவேந்திரனின் அந்தரங்கக் காரியதரிசியாய் இருந்தவள்.

இப்போது அவளது லாக்கரில் இருக்கும் அத்தனை நகைகளும் தேவேந்திரன் வாங்கிக் கொடுத்ததுதான்.



என்னவெல்லாம் செய்தார் மனிதர்?

கல்லூரிப் படிப்பை முடித்த கையோடு மகிமாவுக்கு அவளதுத் தாய்—தனது உறவிலேயே ஒருவனைப் பேசி, கல்யாணத்தையும் முடித்துவிட்டாள்.

மகிமாவுக்கு இதில் வருத்தம் எதுவும் இல்லை.

எல்லாம் காலா காலத்தில் ஆக வேண்டியதுதானே என்றிருந்தாள். மேலும் சத்யன், அவன்தான் மகிமாவை மணந்த அதிருஷ்டசாலி. சொந்தமாய் இறால் பண்ணை வைத்து ஓரளவுக்கு வசதியாகவும் இருந்தான்.

ஆரம்ப காலத்தில் எல்லாமே சுகமாகத்தான் போய்க் கொண்டிருந்தது.

கணவனை வேலைக்கு அனுப்பிவிட்டு, வீட்டில் அடைந்து கிடக்க மகிமாவினால் முடியவில்லை. அதுவும் சொந்தத் தொழிலானதினால் அவன், பல நாட்கள் ஊர் விட்டு ஊர் போய் இருக்க வேண்டிய கட்டாயம்...அந்த சமயத்தில்தான் மகிமாவின் சிநேகிதிகள் அவளை வேலைக்குப் போகச் சொல்லி ஊக்குவித்தார்கள்.

''எம். எஸ். ஸி, எம். பி. ஏக்கெல்லாமே வேலை கிடைக்காத இந்தக் காலத்தில—வெறும் பி.ஏ படிச்ச எனக்கு யார் வேலை கொடுப்பாங்க?''

''அதைப்பத்திக் கவலைப்படாதே! நான் வேலை பார்க்கற கம்பெனி முதலாளி இருக்காரே சும்மா சொல்லக்கூடாது. அழகான பொண்ணு போய் வேலை வேணும்னு கேட்டா—இல்லையின்னு சொல்லவே மாட்டாரு! நீ வா, நான் அழைச்சிட்டுப் போறேன்.

சத்தியமாய்—தேவேந்திரனைச் சந்திக்கும் வரையில்; மகிமாவிற்கு தன் அழகைப்பற்றி அப்படியொன்றும்

பிரயாத நினைப்பு இல்லை. போதாக்குறைக்கு, அழகு நிலையம் போவதோ, வேறு பல அழகுச்சாதனங்களை உபயோகிப்பதோ அவளுக்குத் தெரியாமலேயே இருந்தது.

சத்யனிடம்—தான் வேலைக்குப் போவதுபற்றி அவள் பேசிய போதெல்லாம் அவன், அதை ஒரு குழந்தையின் பேச்சாகவே கருதினான்.

''வேலைக்குப் போகப்போறியா... நீயா! ஏன்டா, உனக்கு என்ன குறை வச்சிருக்கேன்? கைச்செலவுக்குப் பணம் போதல்லையின்னா சொல்லு...''

''உங்களுக்கென்ன. சுலபமாச் சொல்லிடுவீங்க. மாசத்துல இருபது நாள் நீங்க ஊருலயே இருக்கறதில்லே. உங்க அம்மாவோடக் குடித்தனம் நடத்தறதுக்காகவா—என்னை இத்தனை செலவழிச்சு எங்க வீட்டுலக் கல்யாணம் செஞ்சுக் கொடுத்தாங்க...''

இதைச் சொன்னால் மட்டும், சத்யன் நெகிழ்ந்து போய் விடுவான். சாதாரணமாக அவனாலேயே அவள் அம்மாவின் வாயைச் சமாளிக்க முடியாது.

பெற்றவளுக்கு மகனிடம் பாசம் அதிகம். அதே சமயத்தில் ஒரே மகனானதினால்—எங்கே பெண்டாட்டி சொல்லைக் கேட்டு, நம்மைக் கைகழுவி விடுவானோ என்கிற பயமும் அதிகம்.

சதா மகிமாவைப்பற்றி ஏதாவது சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். அவளுக்கு அதுவும், மகன் இருபது நாள் போல வெளியூர் போய் வந்தால்—மருமகளைப் பற்றி ஒரு மூட்டை புகார்களை அவிழ்த்து விடுவாள் அவள்.

சத்யனுக்கும், மனைவியை இப்படி நிராதரவாய் மாமியாரை கவனித்துக் கொண்டிரு என்று தனியே விட்டுப் போவது பிடிக்கவில்லைதான். ஆனால், அதற்காக அவள் உத்தியோகத்துக்குப் போவதாவது...



ஊரில் உள்ளவர்கள் எல்லாம் கேலியாய் பேச மாட்டார்களா?

சத்யனின் ஊர் பாலக்காடு பக்கத்தில் சிறு கிராமம். ஊரில் உள்ளவர்கள் அத்தனைப் பேருமே அவனது உறவினர்கள் தான்.

அவர்களில் மிகச் சாதாரண ஏழைக் குடியானவன் கூட தன் மனைவியை வேலைக்கு அனுப்புவதை—தனது கௌரவத்துக்கு இழுக்காய் நினைப்பான்.

''அதென்னத்துக்கு...அவ சம்பாதிச்சு, குடும்பம் நடக்கணும்னு என்ன தலையெழுத்து? வீட்டுல ஆம்பிளைங்கன்னு பேர் சொல்லிட்டு, நாம என்னத்துக்கு இருக்கோம்...''

இப்படி ரோஷமாய் கேட்பார்கள்.

சத்யனின் குடும்பமோ—பரம்பரையாய் வசதி மிக்க குடும்பம். சத்யனின் அப்பா காலத்திலிருந்து நிலைமையில் கொஞ்சம் சரிவே தவிர, மற்றபடி வசதிகளுக்கு எந்தக் குறையும் இல்லை.

அதற்கென்ன...அப்பா காலத்தில் ஐநூறு ஏகரா பூமி. நூறு ஏகராவாக மாறியிருந்தது மற்றபடி பத்து கிரவுண்டு பங்களாவை விற்று, இரண்டு கிரவுண்டில் ஒரு வீட்டை வாங்கிக்கொண்ட சத்தியன், மனைவியுடன் சந்தோஷமாகத்தான் வாழ்ந்து வந்தான். மகிமா வேலைக்குப் போக ஆரம்பிக்கும் வரையில் இந்த சந்தோஷம் நீடித்தது என்றும் கூடச் சொல்லலாம்.

அவள், கெஞ்சி, கொஞ்சி, கணவனின் அனுமதியை வாங்கி, வேலையில் சேர்ந்தபோது அவன் மிருதுவான குரலில் சொன்னான்,

''மகிமா... வீட்டுல இருந்தா, எங்க அம்மாவோட தினமும் ஏதாவது ஒரு பிரச்னை வந்துட்டே இருக்கேங்

கறதுக்காகத்தான், நான் உன்னை வேலைக்கு அனுப்பறேன். மத்தபடி நீ சம்பாதிச்சு எனக்கு ஒண்ணும் ஆக வேண்டியதில்லே, புரிஞ்சுதா...''

''அய்யோ... இதுகூட எனக்குப் புரியாதா... உங்களுக்குத்தான் என் மேல எவ்வளவு பிரியங்க...''

அவன், மனைவியின் இந்த ஒரு வார்த்தையிலேயே உருகிப்போனான்

''ஆனா, ஆபீஸ்லே ஓவர்டைம் அது இதுன்னு அவங்க நிறுத்திவச்சா முடியாதுன்னு சொல்லிடணும். வீட்டு வேலையையும் கவனிச்சிட்டு, ஆபீஸ்லேயும் போய் உழைச்சிட்டு, நீ களைச்சுப்போய் உட்கார்ந்தா அப்புறம் எனக்குக் கோபம் வரும். மகி... அப்படியொண்ணும் நீ வேலை பார்க்கணும்னு அவசியமில்லே!''

''எனக்கும்தான் அவசியமில்லே. பேசாம நீங்களே, உங்களோடக் கம்பெனியிலேயே எனக்கும் ஒரு வேலை போட்டுக் கொடுத்திருங்களேன். உங்க கூடவே ஆபீஸ் வந்துட்டு, அப்புறம் உங்க கூடவே டூர் வந்துட்டு—உங்க கூடவே வீடு திரும்பறேன். ஜாலியா இருக்கும்.''

சத்யனின் இறால் பண்ணையில் அவனைத் தவிர, இன்னும் இரண்டு பங்குதாரர்கள். ஆரம்பத்தில் பெண்களை வேலைக்கு எடுப்பதுபற்றி பேச்சு வந்தபோது— சத்யன்தான் தீவிரமாக மறுத்துப் பேசினான்.

''வேணாம்பா. லேடீஸ் வேலைக்கு வந்தா, பின்னாலேயே ஏதாவது விவகாரமும் வரும்...மேலும், நம்ம ஆபீஸ்லே லேடீஸ் செய்யற மாதிரி வேலை எதுவுமில்லே. என்ன... கம்ப்யூட்டர், கணக்கு வழக்கு! டெஸ்பாட்ச்... இதையெல்லாம் ஆம்பிளைங்களே பார்த்துக்கட்டும். எதுக்கு சொல்றேன்னா! ஆயிரம், ரெண்டாயிரம் சம்பளம் ஒரு பொம்பிளைக்குப்



போச்சுன்னா பவுடரும், புடவையுமாத்தான் கரையும். இதுவே ஆம்பிளைக்குன்னா அந்த மாச மளிகை, வாடகைக்குப் போகும்...''

சத்யன் மிகவும் பழமையான குடும்பத்திலிருந்து வந்தவன். மனைவியின் அழகைத் தான் மட்டுமே ரசிக்க வேண்டும் என்று நினைப்பவன். இயற்கையிலேயே ஒவ்வொரு பெண்ணுக்கும் கடவுள் அழகைக் கொடுத்திருக்கையில் செயற்கைப் பூச்சு எதற்கு என்று விவாதிப்பவன்.

வேலைக்கு அனுப்புகிற வரையில். மகிமாவை நாகரீகம் என்கிற பெயரில், புருவத்தை சீர் செய்வதற்குக் கூட பியூட்டி பார்லருக்கு அனுப்பாதவன்.

என்னவோ காலம் காலமாய் இரும்புப் பெட்டகத்திலேயே வைத்து பாதுகாக்கப்பட்ட பரம்பரை வைரத்தைப்போல—அவன், தன் மனைவியைப் பத்திரப் படுத்தியது போக—

காலையில் சமைத்து, மாமியாருக்கு எடுத்து வைத்து விட்டுக் கிளம்பும் மகிமா, கணவனின் மோட்டார் சைக்கிளிலேயே தனது அலுவலகத்துக்குச் செல்வாள். மாலையில் பஸ் பிடித்து, திரும்பிவிடுவாள்.

ஆனால்—

புதுசாய் வேலைக்குச் சேர்ந்த மகிமாவின் அழகைப் பார்த்து—அந்த நிறுவனத்திலுள்ள பெண்களனைவருமே பிரமித்துப் போனார்கள் என்றால்—ஆண்கள் ஐயோ, இத்தனையும் அந்தப் பாவி தேவேந்திரனுக்கா!—என்று வயிறெரிந்துபோனார்கள்.

தேவேந்திரனோ—இப்படியொரு அழகியை தன் கண்ணில் காட்டியதற்காகவே—தனது ஆபீஸில் வேலை பார்த்த மகிமாவின் சிநேகிதியான லீலாவுக்கு பிரமோஷன் கொடுத்து, சம்பளத்தையும் அதிகரித்தார்.

முதலில் அவரது ரசனையும், பார்வையும், பேச்சும் மகிமாவுக்கு என்னவோ போலிருந்தாலும்—தினமும் அவரது புகழாரத்தைக் கேட்டுக் கேட்டு—தன்மீதே அவளுக்கு ஒருவித காதல் பிறந்துவிட்டது.

அட...நாம இவ்வளவு அழகாவா இருக்கோம்...'

''சம்பளத்தைக் கொடுத்து வேலை வாங்கற பாஸ்—என்னை அணு அணுவா ரசிச்சு இத்தனை வார்த்தைகளைச் செலவழிக்கறாரே... தாலி கட்டி, என்னை தினமும் அனுபவிக்கற இந்த மனுஷர் என்னைத் தலையிலத் தூக்கிக் கொண்டாடலையின்னாலும் போறது—அட்லீஸ்ட் 'நீ அழகா இருக்கே மகி'—என்று ஒரு தடவை—ஒரேயொரு தடவை சொன்னா என்ன...''

இந்த எண்ணம் தோன்றும் போதெல்லாம், கணவனின் மீது அனாவசிய எரிச்சலும், கோபமும் உண்மைதான்.

தேவேந்திரன் சொன்ன யோசனையின் பேரில் மகிமா—ஒரு அழகு நிலையத்துக்குப் போய் வழித்துச் சீவியிருந்த முன் நெற்றிக் கூந்தலை காதோரம் கற்றையாய் புரளும்படியாகக் கத்தரித்துக்கொண்டாள். புருவத்தை வில்லாய் திருத்திக்கொண்டாள். அது மட்டுமின்றி உதட்டுக்கு மேல் மெலிதாய் படர்ந்திருந்த பூனை ரோமத்தையும் எடுத்து பளீரென வெண்ணெயால் செய்த சிற்பம் மாதிரி வந்து நின்றபோது...

''மார்வலெஸ்!'' என்றார் தேவேந்திரன்.

''மடச்சி!'' என்றான் சத்யன்.

''உன்னை யாரு இதுமாதிரி கோரம் பண்ணிக்கச் சொன்னது. நீ என்ன, சினிமாவுலயா நடிக்கப்போறே. இதெல்லாம் குடும்பப் பொண்ணுக்கு சரிப்பட்டு வரக் கூடிய விஷயமா... இந்த ஒரு தடவை போயிட்டு வந்தாப்



பல தீர்ந்துதா... ஆம்பிளைங்க கிராப்பு வெட்டிக்க பதினஞ்சு நாளைக்கொரு தரம் போற மாதிரி... நீயும் விடாமப் போயிட்டே இருக்கணும். நடக்கற காரியமா இதெல்லாம்?''

சத்யன், அன்றிரவு முழுக்க மனைவியைத் தொடவே யில்லை.

''பார்... பரண்லே கிடந்த வெங்கலக் குத்துவிளக்கைத் தேய்ச்சு, பாலீஷ் போட்டமாதிரி இருக்கே. நீ... இதுதான் பார்க்க நல்லாயிருக்கு... மகிமா, உனக்கு இருக்கற அழகுக்கு— நீ இந்த வருஷம் அழகிப் போட்டியிலேயே சேரலாம். ப்ச்... என்ன பண்ணறது. நீ மிஸஸ் ஆயிட்டே! நம்ம இந்தியா ஒரு மாபெரும் அழகிய மிஸ் பண்ணிடுச்சு.''

மகிமாவுக்கு தேவேந்திரனின் வார்த்தைகள் தேனில் தோய்த்த பலாச்சுளை போல இனித்தன.

''சரி... விடு. இப்பத்தான் என்ன மோசம்... மகிமா! இப்ப நீ வெறும் டைப், ஷார்ட்ஹாண்ட்தானே கத்துட்டிருக்கே. கம்ப்யூட்டர் கோர்ஸ்லே சேரு. மளமளன்னு உன்னோடப் பொஸிஷனை ஒசத்திக்க... என்னோட பிஸினஸ் விஷயமா—வெளிநாடுகள்லேயிருந்து இந்தியாவுக்கு வர்ற பெரிய புள்ளிங்களை எல்லாம் நீதான் வரவேற்று, ஹோட்டல்லே தங்க வச்சு, அவங்க இங்கே இருக்கறவரைக்கும் கவனிச்சுக்கணும் சரியா... எதுக்கும் பிரைவேட் செகரட்டரியல் கோர்ஸ்லே ஜாய்ன் பண்ணிக்க...''

''அது... அதுல வந்து சார்... சாயந்திரம் அஞ்சரை தப்பினா ஆறு மணிக்கெல்லாம் நான் வீட்டுல இருக்கணும். இல்லையின்னா என் மாமியார், என் ஹஸ்பெண்ட்கிட்ட வத்தி வச்சுடுவாங்க.''

உண்மையிலேயே அவளுக்காக மிகவும் வருத்தப்பட்டார் தேவேந்திரன்.

''என்ன மகிமா... உன்னைப் பார்த்து திட்டறதுக்குக் கூட ஒருத்தருக்கு மனசு வருமா? இந்தா, இந்தா... அழாதே! எனக்கு லேடீஸ் அழுதாலே தாங்காது. இப்ப என்ன, சாயந்திரம் அஞ்சரை மணிக்கு நீ வீட்டுல இருக்கணும், அவ்வளவுதானே...''

''ஆமா சார்.''

''வாரத்துல மூணு நாள் கம்ப்யூட்டர் புரோக்ராமிங், மூணு நாள் பிரைவேட் செகரட்டரியல் கோர்ஸ். நீ என்ன பண்ணறே? திங்கள், புதன், வெள்ளி மூணு நாள் காலையில எட்டு மணிக்கெல்லாம் வீட்டை விட்டுப் புறப்படு.''

''ஐயோ... என் ஹஸ்பெண்ட் ஒம்பதரை மணிக்குத்தான் மோட்டார் சைக்கிளையே வெளியே எடுத்து வச்சு துடைப்பார். ஆபீசுக்கு அவசியமில்லாம சுருக்கப் போனா... அனாவசியமா வம்பு பேச வேண்டியிருக்கும்னு சொல்லுவார்.''

''நல்ல மனுஷன் போ... சரி, டோண்ட் ஒர்ரீ. காலையில எட்டு மணிக்கு காரோட நான் உங்க வீட்டு வாசல்லே மூணு நாள் ஆஜராயிடறேன். அதேமாதிரி செவ்வாய்—வியாழன்—சனி... மதியானம் மூணு மணிக்கே நீ ஆபீஸ்லேயிருந்து நேரே கிளாஸ் போயிட்டு, வீட்டுக்குப் போயிடலாம். அதுக்கும் நான் பர்மிஷன் தர்றேன்... அவசியம்னா காரும் தர்றேன்.''

''சார்... நீங்க மனுஷரே இல்லே—தெய்வம்!''

''நோ, நோ... அப்படியெல்லாம் சொல்லி என்னை ஒரு பீடத்துல ஏத்தி வச்சிடாதே... நான் சாதாரண மனுஷன். என்ன... எங்கே அழகும், திறமையும் இருந்தாலும் அதுக்கு நான் அடிபணிஞ்சு போயிடறேன். சொல்லு. எல்லா கிளாஸ்ஸஸுக்கும் நான் ஃபீஸ் கட்டிடறேன். எப்பலேயிருந்து ஆரம்பிச்சுக்கறே?''



''அவரை ஒரு வார்த்தை!''

''தாராளமா.''

இப்படிச் சொன்னதுடன் மட்டுமில்லாமல், தானே நேரில் சென்று, சத்யனைப் பார்த்து, கை குலுக்கி—பேசினார்.

''இன்னிக்கு காலம் இருக்கற இருப்புல—பழைய பஞ்சாங்கமாவே இருந்தா எப்படி? கம்ப்யூட்டர், பெர்சனல் செகரட்டரியல் கோர்ஸ், இந்தி, இங்கிலீஷ், ஃப்ரெஞ்ச் என்று நாலும் தெரிஞ்சிருக்கறது நல்லதுதானே அதான் நான் சொன்னேன் உங்க ஒய்ஃப்கிட்ட. ஆனாலும் சும்மா சொல்லக்கூடாது சத்யன்... உங்ககிட்ட அவளுக்கு ரொம்பவும் மரியாதை. அவர் சம்மதிச்சாத்தான் சார் சுத்துப்பேன். இல்லையின்னா எனக்கு இதெல்லாம் வேணாம்னு சொல்லிட்டா.''

சத்யன் மறுத்துப் பேச இயலாமல் தவித்தான்.

எத்தனைப் பெரிய மனிதர்? வயதிலாகட்டும், அனுபவத்திலாகட்டும், அவருக்குமுன் நாம் எம்மாத்திரம்?

அப்பேர்ப்பட்டவர், தனது கௌரவத்தை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, தன் வீட்டு வாசற்படி ஏறி வந்து கேட்கிறார் என்றால்...

ஆனாலும் இதற்கு தன் தாய் ஒத்துக்கொள்வார் என்று தோன்றவில்லை.

அதனால் மெள்ள இழுத்தான்.

''அது வந்து... அவ எதைக் கத்துட்டாலும் எனக்கு சந்தோஷம்தான் சார்! ஆனா, எங்கம்மாவுக்குத்தான் இதெல்லாம் பிடிக்காது. ஏற்கனவே இவ வேலைக்குப் போறதே அவங்களுக்குப் பிடிக்கலே...''

தேவேந்திரன், சத்யனின் தோள்மீது கை போட்டு, சினேகிதமாய் சொன்னார்:

வயசானவங்க அப்படித்தான் கத்துவாங்க. இப்ப உங்க ஒய்ஃப், இதையெல்லாம் கத்துகிட்டா, ஒருநாள் இல்லையின்னா ஒருநாள் உங்களுக்கே உதவியா இருப்பா. நீங்கவேணா பாருங்க...அவளை பத்திரமா அழைச்சிட்டுப் போய், திருப்பிக் கொண்டு விடறது என் பொறுப்பு. என்னை நம்பறீங்களா—இல்லையா?''

அத்தனைப் பெரியவர் கேட்கும்போது, மறுத்துப் பேச முடியாமல் அசட்டுச் சிரிப்புடன் நின்றான் சத்யன்.

ஆனால்—

அடுத்த ஆறாவது மாதமே, மகிமா—இரவு பத்து மணிக்கு ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலிலிருந்து போன் செய்தாள்:

''இங்கே ஜெர்மன்லேயிருந்து டெலிகேட்ஸ் எல்லாம் வந்திருக்காங்க. கான்ஃபரன்ஸ் நடந்திட்டிருக்கு... நான் வீட்டுக்கு வர ராத்திரி ஒரு மணிக்குமேல ஆகும். நீங்க சாப்பிட்டுடுங்க டியர்...''

''ஏய்...உடனே கிளப்பி வா! இல்லே, நான் அங்கே வந்து அந்தக் கிழவனை நாலுபேருக்கு முன்னாலே கிழிச்சு தோரணம் கட்டிடுவேன்...''

அவன், கழுத்து நரம்பு புடைக்கக் கத்தினான்.

# 4

காதல்—
நான் இளமைத் திமிருடன்
நடந்த போது—
என் காலடியில் சிக்கிய
வாழைப் பழத் தோல்!

அரிசியில் கலந்து கிடக்கும் கற்களைப் பொறுக்கிப் போடுவதுபோல மதுராவும், தன் கணவரின் வாழ்க்கையில் குறுக்கிட்டப் பெண்களை எல்லாம் வெகு நாசூக்காக நகர்த்தியிருக்கிறாள்.

இன்று நேற்றில்லை—

திருமணமானதிலிருந்தே, தம்பதியருக்குள் கருத்து வேறுபாட்டுக்குக் காரணமே—இந்த ஒரு பிரச்னைதான். மற்றபடி மதுரா என் என்றால் எண்ணெயாக நிற்பவர் தான் தேவேந்திரன்.

''அது ஏன் எத்தனை சொன்னாலும் உங்களுக்குப் புரியவே மாட்டேங்கறது! இப்பத்தானே அஞ்சாறு மாசம் முன்னாலே, எங்க அப்பா ஊருல இருந்து வந்திருக்கறதைக்கூடப் பொருட்படுத்தாம அந்த கருணாவா— கருணாவா...அவகூட ராத்திரி பதினொரு மணிக்கு போன்லே பேச ஆரம்பிச்சு, விடிய விடியப் பேசிட்டிருந் தீங்க. எங்க அப்பா, என்கிட்ட நாக்கைப் பிடுங்கிக்கற

மாதிரி சொல்லிட்டுப் போனாரு. இந்த மாதிரி ஒரு புருஷன் வேணும்னு எந்தக் கோவில்லேம்மா நேர்ந்துகிட்டேயின்னு...''

''மது! உங்க அப்பா ஒரு பத்தாம்பசலி! கல்யாணம் கட்டிட்டு, ஒரு பொண்ணைப் பெத்திருக்காரே தவிர, தாலி கட்டின பெண்டாட்டிய—அதான், எங்க அத்தைய ஒரு தடவையாவது தலையோடக் கால் பூரணமாப் பார்த்து ரசிச்சிருப்பாரான்னு தெரியலே... சிலபேருங்க இப்படித்தான். தானும் அனுபவிக்க மாட்டாங்க... மத்தவங்களையும் அனுபவிக்க விடமாட்டாங்க!''

''அந்த கருணா விஷயத்துலகூட அன்னிக்கு ரொம்பத்தான் அனுபவிச்சுப் பேசிட்டிருந்தீங்களோ...''

''என்ன மது... என்னைப்பத்தி நல்லாத் தெரிஞ்சிட்டிருக்கற நீயே இப்படிப் பேசறே? அவ கருணா இல்லே, தருணா. அன்னிக்கு அவ வீட்டுல ஏகப்பட்ட தகராறு. அவ அப்பா, வளர்ந்த பொண்ணாச்சேயின்னுகூடப் பார்க்காம கைநீட்டி அடிச்சிருக்காரு. நீயே சொல்லு... இருபது வயசுப் பொண்ணு, இந்த மாப்பிள்ளை வேணாம்னு சொன்னா, சரிதான், அவளுக்குப் பிடிக்கலை போல இருக்குன்னு விடவேண்டியதுதானே... இந்த காலத்துல ஒரு அப்பன் செய்யற காரியமா இது?''

''அது சரி...அவ ஏன் கல்யாணம் வேண்டாங்கறா?''

''அவ எங்கே கல்யாணம் வேண்டாங்கறா! இந்த மாப்பிள்ளை வேண்டாங்கறா. அவ்வளவுதான். அவ மனசுக்குள்ளே யாரையாவது வச்சிட்டிருக்கலாம்.''

''அப்படி அவ மனசுல இருக்கறது நீங்கதான்னு சொல்லுவேன்...''



''ஐய்யோ...ஐய்யோ! அபாண்டம் மதுரா! எனக்கு என்ன வயசு? முப்பத்தஞ்சு. அவளுக்கு இருபதுதான் ஆறது. பதினஞ்சு வயசு சின்னவ! மேலும், அதெப்படி நீ, என்னைப்பத்தி இத்தனை மோசமா ஒரு ஸ்டேட்மெண்ட் தரலாம்.''

''வேற வழியில்லே. பதினஞ்சு வயசு வித்தியாசம், சின்னவ, பெரியவங்கற பாகுபாடெல்லாம் உங்களுக்குக் கிடையாது. யாராவது கண்ணும், மூக்கும் அம்சமா சித்தப் பார்க்கற மாதிரி இருந்துட்டாப் போதும்—கண்ணை மறைச்சிடும் உங்களுக்கு!''

''மது, நான் எங்கே அடிச்சு சத்தியம் செய்யட்டும், சொல்லு. ஏதோ, அழகா இருந்தா, என்னை மறந்து ரசிப்பேனே தவிர, வேற எந்தவொரு தப்பான பழக்கமும் என்கிட்ட கிடையாது. இன்னும் வெளிப்படையாச் சொல்லப்போனா, உன்னைத்தவிர, வேற எந்தப் பொண்ணோடயும் நான் படுக்கையைப் பகிர்ந்துட்டதே இல்லே. என்னை நம்பு''

மதுராவிற்கு அவரது வார்த்தைகளைப் பொய் என்று ஒதுக்க மனசு வரவில்லை. ஆனாலும் ஒரு விஷயம்தான் அவளுள், கண்ணுக்குத் தெரியாத ஊசா முள்ளாய் உறுத்திக்கொண்டேயிருக்கும்.

எந்தப் பெண்ணுடனும் தகாத உறவில்லை என்று அடித்துக் கூறுகிற மனிதர்—எதற்காக, இவர்களிடம் ஆயிரக்கணக்கில் பணத்தைக் கொட்ட வேண்டும்?

ஒவ்வொருத்திக்கும் நகைக்காகவும், புடவைக்காகவும், வைத்தியர் செலவுக்காகவும் எத்தனை வாரி விட்டிருக்கிறார்.

தருணாவுக்கு விருப்பமில்லாதத் திருமணம். இந்தக் கஷ்டத்துக்கு சிவனேயென்று கழுத்தில் சுருக்கு மாட்டிக் கொள்ளலாம் என்று மனசு வெறுத்துப்போய், அப்படிப்

போவதற்கு முன் தேவேந்திரன் சாரிடம் ஒரு வார்த்தை சொல்லி, விடை பெறலாம் என்று தோன்றியதாம். போன் செய்திருக்கிறாள்.

அதற்கு இவர், இரவு முழுக்க அவளுக்கு சமாதானம் சொல்லியிருக்கிறார்.

''யாராயிருந்தா என்ன, உசிர் என்ன அத்தனை மலிவாப் போயிடுச்சா? கிழங்கட்டைங்க எல்லாம்கூட எப்படியாவது உயிர் வாழணும்னு நினைக்கறப்ப, இவளை மாதிரி சின்னப் பொண்ணுங்க, அவ்வளவு சுலபத்துல மனசு வெறுத்துடறதா... அதைத்தான் சொன்னேன். இதுல என்ன தப்பு இருக்கு மது?''

தப்பே இல்லைதான். ஆனால், இதே தருணாவுக்கு தீபாவளிக்கும், பொங்கலுக்கும் இவர் ஏன் பட்டுப் புடவை எடுக்க வேண்டும்?

புடவை அவளது வீட்டுக்கும், புடவைக் கடையிலிருந்து பில் தன் வீட்டுக்கும் வரும்போதெல்லாம் பழிச் சண்டை போட்டிருக்கிறாள் மதுரா.

இவளாவது சின்ன வயது...ஏதோ சபலம்... நாற்பது வயதில் ஒரு அக்கவுண்ட்டண்ட் இருந்தாள் தேவேந்திரனின் அலுவலகத்தில்.

அவளுக்குப் பிடிக்கும் என்று ஜாடி ஜாடியாக வடுமாங்காயும், ஆவக்காயும் போட்டுத் தரச் சொல்லி எடுத்துப் போவார்.

''பாவம் மது, ரொம்பவும் நல்ல லேடி. குனிஞ்ச தலை நிமிரமாட்டா. புருஷன்காரன் இவளை விட்டுட்டு, வேற எவ கூடவோ செட்டிலாயிட்டான். நல்லா வாழ்ந்த குடும்பம். இப்ப நம்ம ஆபீசுல வாங்கற சம்பளத்துலதான் ரெண்டு குழந்தைங்களையும் படிக்க வச்சு...''



''இப்படியே, நீங்க கேட்கறப்ப எல்லாம் ஊறுகாயும், வத்தல் வடாமும் போட்டுக் கொடுத்திட்டே இருக்கேன். அவளுக்காவது ரெண்டு குழந்தைகள் தான். எனக்கு மூணு. நாளைக்கு எனக்கு எந்த கம்பெனி முதலாளி ஊறுகாயும், உப்புக் கண்டமும் போட்டுக் கொடுக்கப் போறார்னு தெரியல்லே.''

மதுரா நொடிப்பாள். ஆனாலும், கணவனின் மனசு வருத்தப்படக் கூடாதே என்பதற்காக செய்தும் கொடுப்பாள். அதுபோன்ற சமயங்களில் எல்லாம் தேவேந்திரனின் முகத்தைப் பார்க்க வேண்டுமே... ஆயிரம் மெழுகுவர்த்திகளை ஏற்றி வைத்தாற்போல ஒரே பிரகாசமாகிவிடும். ஏற்கனவே, மனைவியின் புடவைத் தலைப்பைப் பிடித்துக்கொண்டு அலைபவர், இதுபோன்ற சமயங்களில் தலையில் தூக்கி வைத்துக்கொள்ளாதக் குறையாகக் குதிப்பார்.

பிள்ளைகளுக்கு ஓரளவுக்கு விவரம் தெரிய ஆரம்பித்த பின்—மதுராவைப்போல—அவர்கள் இதைக் கண்டுகொள்ளாமல விடத் தயாராக இல்லை.

''அம்மா, நேத்திக்கு என் கிளாஸ்மேட் பிரபு கேட்கறான், 'உங்கஅப்பாவை சாந்தா நர்சிங்ஹோம்லே பார்த்தேன்—சாத்துக்குடி, ஹார்லிக்ஸ் எல்லாம் வாங்கிட்டுப் போயிட்டிருந்தாரு. உங்கம்மாவுக்கு என்னடா உடம்புக்குன்னு... எங்கம்மா வீட்டுல இருக்காங்கன்னு சொன்னா நம்ப மாட்டேங்கறான். அப்ப, ஆஸ்பிடல்லே ஒரு லேடியக் கொண்டுவந்து அட்மிட் பண்ணினாரே. அது யாருங்கறான்...''

மதுரா, கணவன் பக்கம் திரும்ப, அவரோ, பதினஞ்சு வயது மகனின் கழுத்தை நெறிக்காதக் குறையாக முறைத்துக்கொண்டே படபடப்பாக—

''ஏண்டா, இந்த வயசுலேயிருந்தே வம்புக்கு அலையறீங்க? கனகா யார் தெரியுமா? எங்க டெஸ்பாட்ச் கிளார்க். திடீர்னு ஆபீஸ்லேயே வயித்து வலி வந்துடுத்து. உடனே நமக்குத் தெரிஞ்ச ஆஸ்பிடலாச்சேயின்னு அங்கே கொண்டுபோய் சேர்த்தேன். அவ புருஷன் ஆபீஸ் விஷயமா டூர் போயிருக்காறாம். அதனாலே தேவையான பழம், ஹார்லிக்ஸ் எல்லாம் வாங்கிக் கொடுத்துட்டு வந்தேன். அது ஒரு பெரிய நியூஸாப் போயிடுத்தா உங்களுக்கு?''

''அவனை ஏன் காயறீங்க? ஏதோ சினேகிதன் கேட்டான்—இவனும் அப்படியே வந்து நம்பளைக் கேட்கறான். கண்ணா தீபக்! மத்தவங்க மாதிரி உங்க அப்பா—யார் எப்படிப் போனா என்னன்னு விட்டேத்தியா இருக்கற மனுசர் இல்லே. யாருக்கு எதுவானாலும் இழுத்துப் போட்டுட்டுச் செய்வார். அதனாலத்தான் இப்படி உன் சினேகிதனுக்கே முதற்கொண்டு ஆச்சர்யமா இருக்கு. இதுக்கே இப்படிச் சொல்றியே...ஒரு தடவை வடக்கே போயிருக்கறச்சே, கங்கையில ஒரு பொம்பிளை மூழ்கிட்டாப் பார்த்துக்க...ஐயோ, ஐயோன்னு அலர்றா.. எல்லாருமே பிரமை பிடிச்சுப் போய் பார்த்துட்டிருந்தாங்க. உங்க அப்பாதான் 'தொபுகடீர்'னு படகுலேயிருந்து தண்ணியிலக் குதிச்சு, அலையோடவே நீஞ்சி, போராடி, அந்தப் பொம்பிளையைக் காப்பாத்தினார்...''

தீபக். தந்தையை உற்றுப் பார்த்துவிட்டுக் கேட்டானே ஒரு கேள்வி!

''ஆமா...அந்தப் பொம்பிளைக்கு என்ன வயசு?''

மகனிடமிருந்து இப்படியொரு கேள்வியை எதிர்பார்க்காத தேவேந்திரன், மனைவியைப் பார்த்து பரபரவென விழிக்க, மதுராதான் புத்திசாலித்தனமாய் சமாளித்தாள்:



''என்ன, எழுபது, எழுபத்திரண்டு வயசு இருக்கும்.''

''அப்படியா? நம்ப முடியலையே...''

மகன், தந்தையை கோணல் பார்வை பார்த்துவிட்டு, முன் நெற்றியில் வந்து விழுந்த கிராப்பை, ஒரு கையால் அலட்சியமாய் ஒதுக்கிக்கொண்டு நகர—

தேவேந்திரன் ஓடிச்சென்று மதுராவின் கன்னத்தில் முத்தமிட்டார்

''என்னவொரு முன்யோசனை உனக்கு?''

''பின்னே...இருபத்தியேழு வயசுப் பொண்ணை நீங்க காப்பாத்தினதைச் சொன்னா—இந்த வயசுலேயிருந்தே அவனுக்கு உங்ககிட்ட இருக்கற மரியாதை போயிடும்!''

''அய்யோ...என் சமத்து...சர்க்கரைக் கட்டி...''

''போதும்—ரசிகாவுக்கு விவரம் புரிய ஆரம்பிச்சிருச்சு. அன்னிக்கு அவளை ஸ்கூல்லேயிருந்து அழைச்சிட்டு வரப் போனீங்களே, முன் ஸீட்டுலே யாரோ ஒருத்தி உட்கார்ந்திருந்தாளாமே... யாரவ?''

''உன் பொண்ணு சொன்னாளா... எட்டு வயசுக்கு இத்தனை வினையா? ஏன் மதுரா, ஒரு ஆம்பிளையின்னா கடிவாளம் போட்ட குதிரை மாதிரி—பெண்டாட்டியைத் தவிர வேற எவளையும் ஏறெடுத்தும் பார்க்காம, ஆபீசுக்குப் போயிட்டு வரணும்னா எப்படி! நீயும், உன் பொண்ணும் எந்த நூற்றாண்டுல இருக்கீங்க?''

மதுரா முகம் சிவந்தாள். ஆனாலும் குரலை உயர்த்தாமல், அதேசமயம் மிக உறுதியாகச் சொன்னாள்.

''இங்கே பாருங்க! குழந்தைங்களானாலும் அதுங்களுக்கும் மிக நுண்ணிய உணர்வு இருக்குது. தப்பான விஷயங்களை அதுங்க ரொம்பவும் சுலபமாப் புரிஞ்சுக்கும். அதே மாதிரி உங்ககிட்ட எனக்கு இருக்கற உரிமைங்களை

மத்தவங்க பிடுங்கிட்டா அதுங்களாலே தாங்கவே முடியாது. அப்பா கார் ஓட்டறச்சே பக்கத்து சீட்டுல அம்மாதான் உட்காரணும், அப்பா பூ வாங்கினா அது அம்மாவுக்காகத்தான், அப்பாவோட ஹோட்டலுக்குப் போனா—அம்மாதான் அவரை ஒட்டினாப்பல நடக்க ணும். அப்பா சாப்பிட்டு வச்ச மீதி, அம்மாவுக்குத்தான். அப்பா பார்த்து ஃபியூட்டிபுல்னு அம்மாவை மட்டும்தான் சொல்லணும். இப்படி அதுங்க மனசுக்குள்ள ஒரு சட்டப் புத்தகமே இருக்கு. அந்தப் புத்தகத்தை நீங்க படிச்சுப் புரிஞ்சுக்கலையின்னாலும் பரவாயில்லே! படிக்காமலேயே எரிச்சிடாதீங்க...''

இப்படியொரு சண்டை நடந்து, அதற்காக தேவேந்திரன் மனசார வருத்தப் பட்டிருக்கிறார்.

ஆனாலும் என்ன செய்வது...

இதோ... இந்த வேலைக்காரச் சிறுமி பாப்புவின் அம்மா, இவளுக்கு முன் இங்கே வேலை செய்துகொண் டிருந்தாள். கறுப்பாக இருந்தாலும் நல்ல களையாக, கொடி மாதிரி இருந்தாள்.

பாப்புவைப் பெற்றபின் அவள் ஏழெட்டு மாதம் வேலைக்கு வரவேயில்லை.

சும்மாயிராமல் தேவேந்திரன் தானே காரை எடுத்துக் கொண்டு போய் குப்பத்தில் நிறுத்தினார்.

பாப்புவை மடியில் போட்டுக்கொண்டு, எண்ணெய் குளியல் முடிந்த கூந்தலை முதுகு முழுக்கப் பரவவிட்டு, மஞ்சள் பூசிய முகம்—மாலை வெய்யிலில் பளபளக்க— குடிசை வாசலில் கால் நீட்டி உட்கார்ந்திருந்தவள், எசமானரைக் கண்டதும் விதிர் விதிர்த்து எழுந்து நின்றாள். கூடவே அவளது அம்மா, புருஷன்.

திடீரென ஒரு பெரிய மனுஷனைக் கண்டதும் சேரியே கூடிவிட்டது.



''எசமான்! எங்கே வந்தீங்க?''

''உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். எப்படியிருக்கே முனிம்மா?''

''நல்லாயிருக்கேனுங்க... அம்மா எப்படியிருக்காங்க!''

''உம். அவளுக்கென்ன... அது சரி. இதான் உன் மகளா...''

''ஆமாங்க.''

அவள் தயக்கத்துடன் குழந்தையைத் தூக்கிக் காட்ட, தேவேந்திரன் கொஞ்சம்கூட யோசிக்காமல், ஐந்தாறு நூறுரூபாய் நோட்டுக்களை எடுத்து குழந்தையின் கைகளில் திணித்தார். கூட்டமே வாய் பிளந்து நின்றது.

'அது சரி, நீ ஏன் அப்புறம் வேலைக்கே வரல்லே?''

''அது எப்படீங்க... புள்ள பெத்த உடம்பு— பச்சை உடம்புக்காரி— பாலுக்கு அழுற புள்ள...''

முனிம்மாவின் தாய் நீட்டி முழக்கினாள்.

''நோ, நோ... அங்கேதான் நீங்க தப்பு பண்றீங்க. முனிம்மாவுக்கு நல்ல ஃபிகர். ஃபிகர்னா தெரியுமா! நல்ல உடம்பு. ஆனாப் பாருங்க கொஞ்சம் குள்ளம். கொஞ்சம் சதை போட்டாலும், இப்ப இருக்கற அழகு போயிடும்...''

''அடப் பாவி மனுஷா...''

கும்பலில் ஒரு கிழவி சத்தமாய் சாபமிட்டாள். முனிம்மாவுக்கு ஒரு நொடியில் நிலைமையின் விபரீதம் புரிந்துபோயிற்று. முகம் வெளுத்துப் போனாள்.

''நீ மறுபடியும் வேலைக்கு வா முனிம்மா... யூ மஸ்ட் டு யுவர் ஒர்க்... அது ஒண்ணுதான் உன்னை வெயிட் போடாமக் காப்பாத்தும்.''

முனிம்மா, 'சட்'டெனக் குழந்தையை அவரது காலடியில் கிடத்தி, தானும் விழுந்து கும்பிட்டாள்.

''அண்ணா! உங்களுக்குத்தான் எவ்வளவு பெரிய மனசு... வீட்டுலேயே அம்மாகிட்ட சொல்லுவீங்க—

முனிம்மா மாதிரி எனக்கு ஒரு தங்கச்சி இல்லையேன்னு குறையா இருக்குதுன்னு... ஆனா, அதுக்காக இம்புட்டு தூரம் காரைப் போட்டுட்டு வந்து, என்னையும், பிள்ளையையும் பார்த்து, பணம் கொடுக்கணும்னு என்ன தலையெழுத்து... அண்ணே! சத்தியமா என் உசிர் இருக்கற மட்டும் இதை நான் மறக்கவே மாட்டேன்.''

வீட்டுக்கு வந்ததும், மதுராவிடம் இது பற்றி சொன்ன தேவேந்திரன் மறக்காமல் இதையும் அவளிடம் கேட்டார்:

''மது... முனிம்மா திடீர்னு அண்ணான்னு சொல்லி, என் கால்லே விழுந்தாப் பாரு! அதான் எனக்குப் புரியலே இல்லே... நம்ம வீட்டுல வேலை செஞ்சிட்டிருக்கறப்ப எல்லாம் என்னை 'அய்யா'ன்னு தானே கூப்பிடுவா!''

'அது சரி. நீங்க போய் பேசின பேச்சுக்கு அவ மட்டும் அப்படிக் கூப்பிடலையின்னா, அவ புருஷனும் சேரி ஆம்பிளைங்களுமாச் சேர்ந்து, உங்களை மாறு கால், மாறு கை வாங்கியிருப்பாங்க!''

''ஓ...!''

''ஏங்க! உங்களுக்கு ஏங்க இந்தத் தலைவலி? எவ எப்படிப் போனா உங்களுக்கென்ன! அது அவ புருஷனோடக் கவலை இங்கே பாருங்க! இனிமே நீங்க இது மாதிரி வம்பை விலைக்கு வாங்கிட்டு வந்தீங்கன்னா, நான் சொல்லாமக் கொள்ளாமப் பொறந்த வீட்டுக்குப் போயிடுவேன்!''

என்றுமே அப்படிச் சொல்லாதவள் அன்று சொன்னாள். அந்த வார்த்தையை அவள் செயலாக்கினதும் உண்டு!

அதுதான்—

மகிமாவின் விவகாரம் பூதாகாரமாய் விசுவரூபமெடுத்து—அவள் கணவன் சத்யன் நேரே வீடு தேடி வந்து கத்திய போது.

# 5

அன்பே,
அடிக்கடி நான்
என் வார்த்தைகளால்
குத்துகிறேனா!
மன்னித்து விடு...
குண்டூசி குத்துவது
தாள்களை இணைப்பதற்காகவே
அது போல நான்............

அந்த நாளை இன்றளவும் மறக்க முடியாது மதுராவுக்கு.

வீட்டில் பெரியவன் தீபக்கிற்கு நிச்சயதார்த்தம். மதுராவின் பிறந்த வீட்டு மனிதர்கள் எல்லாரும் வந்திருந்தார்கள்.

தேவேந்திரனைச் சேர்ந்த ஒரே மனிதர் வையாபுரி வாத்தியார் மட்டும்தான்.

மாலையில் நிச்சயதார்த்தம். டிபன், காபி...இரவு விருந்து... புழக்கடையில் பந்தல் போட்டு நாலைந்து சமையற்காரர்கள் வந்து சமைத்துக் கொண்டிருந்தார்கள்.

மதுராவின் தாய், தன் வயசையும் மறந்து, வாசலில் கோலம் போட்டுக்கொண்டிருந்தாள். சின்னஞ் சிறு

ரசிகா, பாட்டி கை நடுங்காது போட்ட கோலத்தைப் பார்த்து பிரமித்தபடியே, செம்மண் கரைத்து கோலத்தைச் சுற்றி கரை கட்டிக் கொண்டிருந்தது.

''அடேய்! யாராவது கொஞ்சம் மாவிலை பறிச்சு வாசல்லே நிலைப்படியில செருகுங்கக...''

''தங்கச்சி! பால் பாக்கெட் எவ்வளவு சொல்லியிருந்தே...''

''சந்தனம கரைக்கணுமே...வெள்ளிப்பேளா எடுத்துத் தர்றியா மதுரா...''

''அம்மா, ஒரு நடை உள்ளே வந்து, ஜாங்கிரி இந்த சைஸ் போதுமான்னு பார்த்திடுங்கோ...''

''மம்மீ...பாட்டி என்னை பாவாடை தாவணி போட்டுக்கச் சொல்றாங்க? நான் ஸ்கர்ட்டே போட்டுக்கறேனே! ப்ளீஸ் மம்மீ...''

இத்தனைக்கும் நடுவில் மாடியிலிருந்து தேவேந்திரனின் அழைப்பு.

''மது...ஒரு நிமிஷம் மாடிக்கு வாயேன்!''

''என்ன வேணும்...இங்கேயிருந்தே சொல்லுங்க...''

மதுரா தயங்க, வையாபுரி நண்பனை அதட்டினார்:

''அடேய், இப்ப எதுக்குடா தங்கச்சிய மாடிக்கு கூப்பிடறே? இங்கே ஆயிரம் வேலை காத்துட்டு கிடக்கு. மேலே போனா—பையனோடக் கலியாணம் முடிஞ்சு, சீமந்தத்துக்குத்தான் நீ அவளைக் கீழே அனுப்புவே... ஏற்கனவே அவ ஒண்டியா அத்தனையையும் சமாளிச்சிட்டிருக்கா...உனக்கு என்ன வேணும் சொல்லு. நான் வந்து எடுத்துத் தர்றேன்...''

''சத்தம் போடாதேடா...என் மாமனார் காதுல விழுந்து தொலைச்சிடப் போறது...முந்தாநாள் இப்படித்தான்; நான் மதுராகிட்ட காபி கேட்டா, அவ—இந்த



மனுஷர்கிட்ட கொடுத்தனுப்பிட்டா. உள்ளே வந்து உட்கார்ந்தவர்தான். மடோன்னா போஸ்டர்லே வச்ச கண்ணை எடுக்கலே... அப்புறம் அவர் போனதும், போஸ்டருக்கு உப்பும் மிளகாயுமா திருஷ்டி சுத்திப் போட்டேன்...''

அவர் மதுரா பக்கம் திரும்பினார்.

''மதும்மா...ஒரேயொரு நிமிஷம்...''

அவள் உதட்டைக் கடித்தபடி மாடியேறி வர—அவர் அவளை ஏறயிறங்க ஒருமுறை பார்த்து 'சட்'டென இடுப்பில் கை வைத்து வளைதது இழுத்து முத்தமிட்டார்.

''இதுக்குத்தான் கூப்பிட்டீங்களா?''

''பின்னே, வீட்டுல ஜனங்க கும்பல் சேரச் சேர உன்னைக் கண்ணாலேயே காண முடியலை...அப்படியே தென்பட்டாலும், அங்கே இங்கே நின்னு முகத்தைக் காட்டிட்டு ஓடிடறே... இரு. இரு. சித்த நேரம் வாசனை பிடிக்கறேன்.''

அவர், மதுராவின் நெஞ்சில் முகம் புதைக்க, அவளோ அவர் மார்பில் கை கொடுத்து தள்ளிவிட்டார்.

''சமய சந்தர்ப்பம் தெரியாம ஆரம்பிக்காதீங்க... உங்களுக்கு ஜரிகை வேஷ்டி, பட்டு ஜிப்பா எல்லாம் எடுத்து வச்சிருக்கேன்...போட்டுட்டு கீழே இறங்கி வாங்க. ஆச்சு, சம்பந்தி வீட்டுக்காரங்க எல்லாம் வந்துடுவாங்க.''

''இதோ...வந்துட்டே இருக்கேன். ஆமா...என்னடா இப்படி வேர்க்குது உனக்கு? ஏ.சி.ய இன்னும் கொஞ்சம் அதிகமா வைக்கறேன். அஞ்சு நிமிஷம் உட்கார்ந்து ரிலாக்ஸ் பண்ணிட்டு...''

''நான் வர்றேன்...''

அவள் எதிர்பாராமல் திமிறிக்கொண்டு கிளம்ப—

''மது, மது...ரெண்டு மூணு நாளா எனக்கு காய்ச்சலடிக்கறாப்பல இருக்கு. அது என்னமோ தெரியலே...என் உடம்புக்கு. ஒரு அரைமணி நேரமாவது உன்னோடப் பக்கத்துல இல்லையின்னா சரிபட்டு வரல்லே...''

''பிள்ளைக்குக் கல்யாணம். அசடு வழியாதீங்க. அன்னிக்கு சம்பந்தியப் பார்த்தீங்களே... எத்தனை கௌரவமா, கம்பீரமா உட்கார்ந்திருந்தார்? உங்களை யாதிரியா பெண்டாட்டிப் புடவைத் தலைப்ப பிடிச்சிட்டு அலைஞ்சார்?''

''அதுக்கென்ன செய்யறது. அவர் பெண்டாட்டி அப்படி. நானே உன்னைக் கேட்கணும்னு இருந்தேன். சம்பந்தியம்மாவைப் பார்த்தா—ஸ்திரீ பார்ட் போட்ட நடிகன் மாதிரி இருக்கு. உன் அளவுக்கு இல்லையின்னாலும் ஏதோ பார்க்க லட்சணமான சம்பந்தியா இருந்திருக்கலாம் இல்லையா?''

''நான் வேணும்னுதான் இந்த வீட்டுல சம்பந்தம் பிடிச்சேன். என் பையனுக்கு சுமாரான அழகுள்ள பொண்ணு போதும். மாமியாரும் தலை நரைச்சு, ரெட்டை நாடியா இருந்தா என் வரைக்கும் நிம்மதியா இருப்பேனில்லே...''

''அடிப் பாவி...''

அவர் சிரித்தபடி, தன் வயசை மறந்து, கையை ஓங்கியவாறு அவளைத் துரத்திக்கொண்டு ஓடி வர—

''அம்மா...சீக்கிரம் வாயேன்.''

அறைக் கதவைத் திறந்துகொண்டு பதின்மூன்று வயது ரசிகா... தளிர் விரல்களில் செம்மண் கறை அப்படியே...

''என்ன? சம்பந்தி வந்தாச்சா...''

''சம்பத்தி வரல்லே. யாரோ ஒருத்தர்...மோட்டார் சைக்கிள்லே... நல்லாக் குடிச்சிட்டு வந்திருக்காரு. அப்பாவைக் கன்னா பின்னான்னு...''

''என்ன உபத்திரவம் இது...''

மதுரா, கணவனை உக்கிரமாய் பார்த்துவிட்டு, வேகமாய் நாலு படிக்கு ஒரு காலாய் கீழே இறங்க...சற்று தயங்கிய தேவேந்திரன் மனைவியை இக்கட்டில் சிக்க வைக்க மனசின்றி தானும் இறங்கி வருகிறார்.

''எங்கே அந்த ஆளு?''

''இருப்பா...யார் வேணும் உனக்கு?''

வையாபுரி, வாசற்படியின் குறுக்கே இரு கையையும் வைத்து மறைத்தபடி வந்தவனை அதட்டிக் கொண்டிருந்தார்.

''யாராயிருக்கும்?''

மனைவியின் பின்னாலிருந்து எட்டிப் பார்த்த தேவேந்திரன்—அங்கே சத்யனைக் கண்டதும் வியப்புடன் புருவத்தை உயர்த்தினார்.

''அடே, மகிமா ஹஸ்பெண்ட் இல்லே நீங்க... என்ன ஆச்சு... ரொம்பவும் கலைஞ்சிருக்கீங்க?''

''யோவ், கிழவா... என்னாச்சுன்னு என்னைக் கேட்கறியாடா... மகிமாவை—அந்த கிராதகிய—எந்த ஹோட்டல்லே கொண்டுபோய் வச்சிருக்கே சொல்லு!''

''ஹோட்டல்லேயா! நானா! நேத்து சாயந்திரம் பார்த்தேனேப்பா. ஆபீஸ்லே ஒரு லெட்டர் டிக்டேட் பண்ணினேனே! அப்புறம் வீட்டுக்குக் கிளம்பி...''

சத்யன் 'விருட்'டெனப் பாய்ந்து, இடது கையால் வையாபுரியை வீசி அந்தண்டை தள்ளிவிட்டு, தேவேந்திரனின் குரல் வளையைக் கத்திரிப் பிடியாகப் பிடித்தான்.

''அய்யய்யோ! அவிரை விட்டுடுங்க!''

மதுரா, குறுக்கே புகுந்து கணவரை அவனிடமிருந்து. பிரிக்க முயற்சிக்க— வையாபுரி, தேவேந்திரனை பலம் கொண்ட மட்டும் பின்னால் இழுக்க!

''இந்தா, எதுவாயிருந்தாலும் பேசி தீர்த்துக்கப் பாரு! அடிதடி கலாட்டா வேண்டாம். நான் அந்த நாளுல சிலம்பம் விளையாடினவன், வெயிட் லிஃப்டர்.''

வையாபுரி கத்த, இதற்குள் ஹால் முழுக்க கும்பல்

மதுராவின் பெற்றோர், அத்தை, சித்தப்பா, சித்தி, பெரியம்மா, அவர்களின் பெண், பிள்ளைகள், வீட்டிலே வேலை செய்யும் ஆட்கள், புழக்கடையில் ஜாங்கிரி சுற்றிக் கொண்டிருந்த சமையற்கார அய்யர், எடுபிடிகள், புது மாப்பிள்ளையான தீபக், லலித், பயத்துடன் அழுதபடி ரசிகா.

''என்ன ஆச்சு! யாரு இவன்.''

''எனக்கு அப்பவே தெரியும்; மாப்பிள்ளையோட விளையாட்டுக்கெல்லாம— இப்படியொரு விபரீத முடிவு கிடைக்கும்னு.''

''ஈச்வரா! மகாதேவா! இவன் இன்னிக்கா வரணும்.''

''இப்ப என்னங்கறான்! இவன் பெண்டாட்டிய நம்ம மாப்பிள்ளை இழுத்துட்டுப் போய் எங்கேயாவது ஒளிச்சு வச்சிருக்காராமா!''

''சாருக்குப் பேரு தேவேந்திரனா—ராவணனா?''

''ஷ்! சும்மாயிருடா. பெரிய எடத்து விவகாரம். நமக்கென்ன! ஜாங்கிரிய புரட்டிப் போடு.''

அந்தக் கணத்தில் சத்யனுக்கு என்ன தோன்றியதோ! தேவேந்திரனின் கழுத்தைப் பிடித்து, மாவடு ஜாடியை உலுக்குவது போல பலமாய் உலுக்கிவிட்டு, அப்படியே பிடித்துத் தள்ளினான்.



''டேய், என் பெண்டாட்டிக்கு பவுடர், சோப் தவிர அதிகப்படியா வேற எதுவும் தெரியாதுடா! அவளுக்கு கண்ட மேக்கப் சாமான்களை வாங்கிக் கொடுத்து, வெங்காயசருகு மாதிரி டிரஸ் வாங்கிக் கொடுதது ராத்திரி பகல் தெரியாம ஹோட்டலுக்கும், கிளப்புக்கும் அழைச் சிட்டுப் போய் நாசமாக்கிட்டியேடா! பாவி! இப்ப அவ எங்கே!''

''சத்யன், நான் சொல்றதை நம்புங்க! சத்யமா அவ எங்கேயின்னு எனக்குத் தெரியாது? நேந்து சாயந்திரம்—''

இதற்குள் மதுராவின் தாய், மருமகனின் எதிரில் வந்து நின்று கையெடுத்துக் கும்பிட்டாள்.

''மாப்பிள்ளே! என் பொண்ணுக்கு என்ன குறைச்சல்? கோவில் சிலை மாதிரி இருக்கா! வீட்டுல இன்னிக்கு என்ன விசேஷம்னு ஞாபகம் இருக்கா! ஆச்சு, சம்பந்தி மனுஷங்க வந்துட்டே இருப்பாங்க. சின்னப் பையனாட்டம் ஏன் அடம் பிடிக்கறீங்க? ஊரான் பெண்டாட்டி சகவாசம் உசிருக்கே உலை வைக்கும்னு எங்கம்மா சொல்லுவா!''

சதயன் இது எதையும் பொருட்படுத்தாது மதுராவைப் பார்த்து, நாக்கைப் பிடுங்கிக்கொள்ளும் படியாகக் கேட்டான்.

''நீங்க, இவரோட தாலி கட்டின சம்சாரம்தானா! இல்லே என்னை மாதிரி இளிச்சவாயன் யாரையாவது ஏமாத்திட்டு, இந்த ஆள்கூட வந்தீங்களா!''

''டாய், எங்கம்மாவைப் பார்த்து என்னடா சொன்னே!''

லலித் ஒரே பாய்ச்சலாக இருந்த இடத்திலேயே முஷ்டியை உயர்த்திப் பாய—

அப்போது—அந்தக் கணத்தில்—

வையாபுரிதான் நிலைமையைச் சமாளித்தார்.

''இங்கே பாரு தம்பீ... உன் பொண்டாட்டிய காணும்னா, உடனே இவரை சந்தேகப்பட்டுடறதா... இவர் வயசென்ன, தகுதி என்ன?''

''இந்தாளுக்கு அதெல்லாம் ஒண்ணும் கிடையாது சார்! ஆபீசா நடத்தறான் இவன்! ஒவ்வொருத்திக்கும் எத்தனை நகை... எத்தனை பணம். என் பெண்டாட்டிய உடுப்பி ஹோட்டலுக்குக்கூட நான் அழைச்சிட்டுப் போனதில்லே. இவன் ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்கு இழுத்துட்டுப் போய்... அய்யய்யோ... என் வாழ்க்கையே போயிடுச்சே! கல்யாணம் செஞ்சுக்கறப்பவே எங்கம்மா சொன்னாளே... இத்தனை அழகான பொண்ணு குடும்பம் நடத்த லாயக்கில்லேடா'ன்னு... இப்ப அதுமாதிரியே ஆயிடுச்சே!''

''பொறு தம்பீ... என் ஃபிரண்டு கொஞ்சம் ஜாலியான டைப்தான். அதுக்காக, அடுத்தவன் பெண்டாட்டியத் தொடமாட்டான். இப்ப உனக்கென்ன—உன் பெண்டாட்டி வீட்டுக்கு வந்தாகணும் அவ்வளவுதானே.''

''வரணும், அவ தலைய நுங்கு சீவறமாதிரி நான்...''

''அதெல்லாம் உன் சொந்த பிரச்னை இன்னிக்கு ராத்திரிக்குள்ள—அவ எங்கே இருக்கான்னு சல்லடை போட்டு சலிக்கலாம். இப்ப கிளம்பறியா... இவர் பிள்ளைக்கு நிச்சயதார்த்தம். அப்பன் பண்ணின தப்புக்கு மகனுக்கு தண்டனை கொடுக்கறது எந்த விதத்துல நியாயம் சொல்லு...''

வையாபுரி இருந்தாரோ... அன்றைக்கு சத்யனை இடம் பெயர்த்து வைக்க முடிந்தது.

நிச்சயதார்த்தம்— எத்தனையோ கும்மாளமும், கலாட்டாவுமாய் நடக்க வேண்டியது—ஏதோ துக்க நிகழ்ச்சி போல நடந்தேறியது.



ஆனால்—

அன்றைக்கு மட்டுமில்லை... மகிமா நிரந்தரமாகவே—அமெரிக்காவிலிருந்து வந்திருந்த தொழிலதிபருடன் போனவள் தான்—கண்டுபிடிக்கவே முடியவில்லை.

சத்யன் தற்கொலை முயற்சி செய்து, தோற்றுப் போய் தனது சொந்த ஊருக்குப் போக—

மதுரா—

நிச்சயதார்த்தத்துக்கு வந்திருந்த தனது பெற்றோருடன் கிளம்பிவிட்டாள்.

''நான் போறேன்; இனிமே உங்களுக்கு நான் தேவையில்லே!''

21057
3775040

# 6

என்னருகே நீயிருக்க
உன்னருகே அவளிருக்க
கண்ணிரண்டு குளத்தினிலே
கதைப் பூக்கள் பூத்திருக்கு,

மகிமா... ஐந்து வருடங்களுக்கு முன் சொல்லாமல் கொள்ளாமல், 'சூ மந்திரகாளி' போல காணாமல் போன மகிமா—

இப்பொழுது வந்திருக்கிறாள்.

வந்தது மட்டுமின்றி, தன்னை நினைவில் வைத்துக் கொண்டு, போனும் செய்திருக்கிறாள்.

சந்தோஷத்தில் 'குப்'பெனப் பூரித்துப் போகிறார் தேவேந்திரன்.

தனது பூரிப்பை, சினேகிதன் வையாபுரி கவனித்து விட்டானோ என்கிற கவலையுடன் கீழ் கண்ணால் ஒரு பார்வை பார்த்துக் கொள்கிறார்.

''யாருடா போன்லே...''

''ஹி... ஹி... அது... என் சினேகிதன் பொண்ணு.''

''அதாரு, எனக்குத் தெரியாத சிநேகிதன்! சினேகிதன் பொண்ணா... இலலே... சினேகிதிப் பொண்ணா—மூடி மறைக்காம உண்மைய சொல்லு!''



''சினேகிதன் பொண்ணுதான். இவனை உனக்குத் தெரியாது. மலேஷியாவுல இருக்கான், அவன் பொண்ணு, இன்டியாவுக்கு வந்திருக்காம்... ஹோட்டல்லே தங்கியிருக்கேன் அங்கின், வந்து அழைச்சிட்டுப் போங்க. ஆன்ட்டி, அண்ணன்களை எல்லாம் பார்க்கணும்னு சொல்லிச்சு. 'ஆகா... உடனே புறப்பட்டு வாறேம்மா'ன்னு சொல்லியிருக்கேன். நாம அவங்க ஊருக்குப் போனா என்னமா உபசாரம் செய்யறாங்க. அப்பப்பப்பா... நம்மாலே அந்த அளவுக்கு முடியலை யின்னாலும் ஒரளவுக்காவது உபசரிக்க வேணும்தானே. அதுதானே மரியாதை!''

''ஆமாமாம். ஆனா உபசாரம் அளவுக்கு மீறிப் போயிடாமப் பார்த்துக்க. அவ்வளவுதான். நான் சொல்வேன்!''

அது என்னவோ தேவேந்திரனுக்குள் உற்சாகம் கொப்புளித்தது.

மகிமா... எவ்வளவு அழகானப் பெண். ஆபீசுக்கு அவள் இருந்ததே—மகுடத்தில் ரத்தினம் பதித்த மாதிரி

அவள் போனபிறகு, தேவேந்திரனின் பெரிய பிள்ளை தீபக்கின் திருமணம் முடிந்தகையோடு—மதுரா, கணவருக்கும் இந்த மகிமாவுக்கும் இருந்த பழக்கத்தினால் ஏற்பட்ட அவமானத்தைத் தாங்க முடியாதவளாய் தன் பெற்றோரோடு போய் பிறந்த வீட்டில் உட்கார்ந்து விட்டாள்.

தேவேந்திரன் மட்டுமில்லை. இதே வையாபுரியும்கூட கோயமுத்தூருக்கு பதினைந்து இருபது நாட்களுக்கு ஒரு முறை போய்— அவளிடம் எத்தனை கொஞ்சியிருப்பார்?

இந்தனைக்கும் மதுரா, கணவருடன் கோபித்துக் கொண்டுதான் பிறந்த வீட்டில் போய் உட்கார்ந்திருக் கிறாள் என்பது— அவள் பெற்ற குழந்தைகளுக்குக்கூட தெரியாது.

பெரியவன் தீபக் ஓரளவுக்கு ஊகித்திருந்தான். ஆனாலும் தனது நிச்சயதார்த்த நாளன்று நடந்த சம்பவம், அம்மாவின் மனசில் இத்தனை ஆழமான காயத்தை உண்டுபண்ணியிருக்கும் என்று நினைக்கவில்லை.

'ஏதோ அம்மாவுக்கு உடம்பு சரியில்லே...'

'அதுவும் அன்னிக்கு அந்த ஆள் வந்து கத்தி, தகராறு செஞ்சிட்டுப் போனானே... அன்னியிலே இருந்தே அம்மா ரொம்ப பலகீனமாயிட்டா...'

'இப்ப என்ன... வீட்டைப் பார்த்துக்கத்தான் மருமக வந்துட்டா. கொஞ்ச நாள் தாத்தா வீட்டுல இருந்து ஓய்வெடுத்திட்டுதான் வரட்டுமே...'

இப்படி நினைத்தானே தவிர— நடந்தது எதையுமே தன் புது மனைவியிடம் சொல்லவில்லை.

ஆனால் சமயம் கிடைக்கும்போதெல்லாம் அவனும், அவன் தம்பி லலித்தும்—ஏன் கடைக்குட்டி ரசிகாவுமே அப்பாவிடம் இதுபற்றிக் கேட்டுக் குடைந்துகொண்டுதான் இருந்தார்கள்.

''ஏம்பா, அம்மா எப்பத்தான் திரும்பி வரப் போறாங்க?''

''நினைச்சா பம்பாய், அமெரிக்கா, ஜப்பான்னு போயிட்டு வர்றீங்க இல்லே... கூப்பிடு தூரத்துல இருக்கு கோயமுத்தூர்— வாரம் ஒரு தடவை போய் அம்மா எப்படியிருக்காங்கன்னு விசாரிச்சிட்டு வந்தா என்ன?''

''நாலு நாள் முன்னாலே ஆபீஸ் டூர் போனப்ப நான் கோயமுத்தூர் போயிருந்தேன். அம்மாவைப் பார்த்தேன். எப்படி இளைச்சு, துரும்பாப் போயிட்டாங்க. அவங்களுக்கு எப்பவுமே உங்களைப் பத்தின வருத்தம்தான் கவலைதான்—''



''ஏன் டாடி இப்படி இருக்கீங்க?''

''உங்களைப் பத்திப் பேசினாலே அம்மா, கண்ணை இறுகமூடிட்டு உட்கார்ந்துடறாங்க. ரொம்பவும் வாயைக் கௌறினா—கடவுள்தான்டா உங்க அப்பாவுக்கு புத்தி கொடுக்கணும்னு ஒரே வார்த்தையில முடிச்சிடறாங்க...''

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு, கல்போல உட்கார்ந்திருப்பார் தேவேந்திரன். வையாபுரி வந்தால் மட்டும், அவரைக் கட்டிக்கொண்டு 'ஓ'வென அழுவார்.

''டேய், நான் பதினஞ்சு நாளைக்கு ஒரு தரம் போய் மதுராவைப் பார்த்து, கன்னத்துலப் போட்டுட்டு, இனிமே எவகிட்டயும் இதுமாதிரி பழகமாட்டேன்னு துண்டு போட்டு தாண்டி, சத்தியம் செஞ்சிட்டு வர்றேன். ஆனா என் பசங்களுக்கு என் மேல கொஞ்சம்கூட இரக்கமே இல்லேடா. எல்லாம் அவ பக்கமே பேசறதுங்க.''

''உன் மேல எப்படிடா இரக்கம் இருக்கும்?'' இத்தனை வயசானதுக்கு கொஞ்சவாவது விவேகமா என்னிக்காவது நீ நடந்துட்டிருக்கியா? தங்கச்சியும் எத்தனை நாள்தான் உன்கூட சேர்ந்து, நீ செய்யற அநியாயங்களுக்கும், அடிக்கற கலாட்டாவுக்கும் ஊமை சாட்சியா நிற்பா. அதுவும் இந்த மகிமாவா, தோசை மாவா—அவளாலே ஏற்பட்ட கலகத்துக்கு அப்புறம் எந்தவொரு மானமுள்ள பெண்டாட்டியாலேயும் புருஷனோட சேர்ந்து வாழ முடியாதுடா.''

''ஏண்டா, நீ சொல்றதைப் பார்த்தா நீயே மதுராவுக்கு சொல்லிக் கொடுத்திருப்பே போல...''

''ஆமாண்டா எனக்கு வேற வேலை இல்லே பாரு... உனக்கு புத்தி சொல்றதைவிட, நாலஞ்சு மக்குப் பிள்ளைங்களைக் கட்டிட்டு மாரடிக்கலாம், நான் வர்றேன்.''

ஒவ்வொரு முறையும் வையாபுரி இப்படி கோபித்துக் கொண்டு போனாலும் பத்து நாளைக்கு ஒரு தடவை— ஏதாவது ஒரு சாக்கை வைத்துக்கொண்டு கோவை போய் மதுராவைப் பார்த்துவிட்டுத்தான் வருவார்.

''ஏம்மா, ஏதோ நடந்தது நடந்துபோச்சு உனக்கே அவன் சுபாவம் தெரியும் பார்க்கப்போனா, எங்க எல்லாரையும்விட, உனக்குத்தான் அவனைப்பத்தி நல்லாப் புரியும். அவன் ஒண்ணும் வேணும்னு செய்யலை. ரசிகன். கிறுக்குத்தனமான ரசிகன். இதுக்காக கோவிச்சுட்டு... ஆறு மாசமா பொறந்த வீட்டுலேயே உட்கார்ந்திட்டு. அதுவும் மகனுக்குக் கல்யாணமாகி மருமக வந்ததுக்கு அப்புறம் சின்னப் புள்ளயாட்டம்... விடுவியா?''

மதுராவுக்கும் கணவனிடம் ஒருவித பச்சாதாபம் இல்லாமல் இல்லை. சமீபகாலமாய் அவர் ஒரு சுற்று இளைத்திருப்பதும், கண்ணைச் சுற்றி வளையமிட்டிருப்பதும் கவலையாகத்தான் இருக்கிறது.

'தீபக் பெண்டாட்டி ஒழுங்கா சமைக்கிறாளோ இல்லையோ?'

'போன தடவை ரசிகா வந்தப்பவே சொன்னாளே.... பொரியல், கூட்டு, எல்லாத்துலேயும் உப்பு, காரத்தை அள்ளிப் போட்டுடறான்னு. இவருக்குக் காரமே ஆகாது. இப்படி உப்பையும், உறைப்பையும் குறைச்சு வச்சிருக்கறச்சேயே இவர் இந்த ஆட்டம் ஆடறார். இன்னும் கூடினா...!

'பளிச்சுனு டிரஸ் பண்ணுவா நான் இருந்தால். இப்ப? ஏதோ கைக்கு வந்ததை எடுத்து மாட்டிட்டு காரே பூரேயின்னு...'

அவளுள் கனிவு இருந்தாலும் நீறு பூத்த நெருப்பாய் அந்த கோபம்...



வையாபுரியிடம் விளக்கிச் சொல்ல முடியாத கோபம். உள்ளுக்குள்ளேயே பொங்கிப் பொங்கி வடியும் சீறறம்.

'ஏன்' நான் என்ன குறை வச்சேன்?'

'எத்தனை இதமா, ஒரு நல்ல சிநேகிதியா இருக்கேன், அதை விட்டுட்டு, ஒரு ஷோ கேஸ் பொம்மை பின்னாடி அலையலாமா?'

'அழகை ரசிக்கிறேன். மத்தபடி என் மனசுல எதுவுமே இல்லையின்னு சொல்லறது எல்லாம் வெறும் கண் துடைப்புதான். இதெல்லாம் ஆம்பிளைங்களுக்கே இருக்கக்கூடிய சலுகை. இதையே ஒரு பொம்பிளை சொன்னா ஒத்துக்குவீங்களா?'

'அவ யாரவ மகிமாவா? அவளை அழைச்சிட்டு வந்து குடித்தனம் செய்ய வேண்டியதுதானே. என்னை ஏன் கூப்பிடறீங்க. இனிமே நான் என்னத்துக்கு உங்களுக்கு...'

எல்லாக் கோபத்தையும் ஒரே வாரலாய் வாரிக் கொண்டு போகும்படியாக அந்த செய்தி வந்தது.

தேவேந்திரன் மஞ்சள் காமாலை வந்து படுக்கையில் இருப்பதாக தீபக் போன் செய்து சொன்னான். அவ்வளவுதான்.

அடுத்த நிமிஷமே கிளம்பி, மறுநாள் விடிகாலையில் தன் வீட்டுக்கு வந்து சேர்ந்தாள் அவள்.

இப்படியொரு நன்மையைச் செய்ததற்காகவே இன்றளவும் மஞ்சள் காமாலையை நன்றியுடன் நினைத்துக் கொள்வார் தேவேந்திரன்.

இதற்குப் பிறகு, ஊருக்கு சும்மாவாவது கிளம்பியவளை தன் இயற்கையான அன்புச் சிறைக்குள் தள்ளி, பெரிய பூட்டாகப் பூட்டிவிட்டார் அவர்.

ஆனால்

இன்றளவும் அந்த பத்து மாதப் பிரிவை மறக்க வில்லை அவர்.

சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் மதுராவும், வையாபுரியும் இந்த நிகழ்ச்சியை மறு ஒளிபரப்பு செய்யத் தவறுவதில்லை.

எப்பொழுதாவது தேவேந்திரன் இரவில் தூக்கம் வராமல் தவித்தால் மதுரா 'நறுக்'கென எறும்பு கடித்தாற் போலக் கேட்பாள்.

''என்ன, பழைய நினைப்பா... அதான் அந்த மகிமா வோட சுத்தின மகிமை பொருந்தின நாட்கள்...''

''ஐயோ... அவளை, நானே மறந்து பல வருஷங்களா யிடுச்சு. நீ இன்னமும் ஞாபகம் வச்சிட்டு என்னை ஏன் குத்தறே?''

ஓரிரு முறை அலுவலகத்தில் மகிமாவைப் பற்றிய பேச்சு வரும். பழைய போட்டோ ஆல்பங்களில் ஆண்டு விழா, பொன் விழா என்று ஏதாவது ஒரு விழாவில் மகிமா 'பளிச்'சென சிரிப்பாள்.

அப்பொழுது மட்டும் தேவேந்திரன் அவளுக்காக ஒரு நிமிஷம் வருத்தப்படுவார்

'எங்கே போனாள்... இப்படியா போற இடத்தைக் கூடச் சொல்லாமப் போவா.'

அவள் கணவன் இதற்குப் பிறகு ஒருமுறை சோகமாய் ஆபீசுக்கு வந்தான். தேவேந்திரனிடம் தரையளவு மண்டி போடாதக் குறையாக மன்னிப்பு கேட்டான்.

''அன்னிக்கு உங்க வீட்டுல நுழைஞ்சு தான் ரொம்ப கலாட்டா செஞ்சிட்டேன்... ஸாரி.''

''பரவாயில்லே... இதனால என் பெண்டாட்டிய என் மேல உயிரையே வச்சிருக்கறவளை, பத்து மாசம்போல நான் பிரிஞ்சு இருக்க வேண்டியதாப் போச்சு. இப்ப என்ன விஷயமா...''



''எனக்கு மகிமாவோட சமீபத்திய போட்டோ ரெண்டு வேணும். என்கிட்ட கல்யாண சமயத்துல, ஹனிமூன்லே எடுத்தது தான் இருக்கு. அதுலே எல்லாம் அவ ரொம்பவும் சாதாரணமா, குடும்பப் பாங்கா டிரஸ் பண்ணிட்டு இருக்கா. அதை வச்சிட்டு இப்ப அவளைத் தேட முடியாது இப்ப சமீபத்துல எடுத்த போட்டோ இருந்தா...''

''உட்காருங்க தரச் சொல்றேன்.''

தேவேந்திரன் எந்தவித மனத் தாங்கலும் இல்லாமல் அவனை உட்கார வைத்து, காபி வரவழைத்துக் கொடுத் தார்.

அவரது காரியதரிசி, ஆல்பத்திலிருந்து போட்டோ வைத் தேடி எடுத்துத் தரும் வரையில் கண் கலங்க— அவன் பேசிக்கொண்டே போனான்.

''அவ இப்படி மாறுவான்னு நான் கனவுகூட கண்ட திலலே. என் வாழ்க்கையையே நாசம் பண்ணிட்டுப் போயிட்டா. இவ இப்படி ஓடிப் போனதினாலயே எங்க அம்மா அவமானம் தாங்காம மனசொடிஞ்சு இறந்துட் டாங்க.''

''......''

''எங்க ஊர் பக்கம் திரும்பிப் போகவே முடியாதுங்க. எல்லாரும் என்னை ரொம்பவும் கேவலமாப் பேசறாங்க. பிசினஸ்லே இருந்துகூட விலகிட்டேன். இந்த மூஞ்சிய வச்சிட்டு நான் எங்கே போனாலும் துக்கம் விசாரிக்கற மாதிரி இதைத்தான் கேட்கறாங்க.''

''......''

''தற்கொலைக்குகூட முயற்சி செஞ்சிட்டேன். என் கஷ்டம் புரியாம, என்னை சுத்தியிருந்தவங்க காப்பாத் திட்டாங்க. எதுக்காக சார் இன்னும் உயிரோட இருக்

கணும். எதுக்காக... என்னை மாதிரி ஒரு முட்டாள் இருப்பானா? தாலி கட்டின பெண்டாட்டிய தாரை வார்த்துட்டு...''

''இந்தாங்க போட்டோ...''

தேவேந்திரனின் காரியதரிசி, இரண்டு புகைப்படங்களை எடுத்து நீட்ட, அதை வாங்கி, கொஞ்ச நேரம் அவைகளையே வெறித்துக்கொண்டிருந்து விட்டு, 'விருட்'டென எழுந்து போனான் அவன்.

போகும்போது தேவேந்திரனின் காரியதரிசியிடம் இரண்டு வார்த்தை பேசினான்:

''உங்களுக்குக் கல்யாணமாயிடுச்சா?''

''இன்னும் இல்லை, ஏன்?''

''பண்ணிக்காதீங்க. ஒரு ஆம்பிளை பிழைச்சுப் போகட்டும்...''

தேவேந்திரனும், காரியதரிசியும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே—அவன் அரைச் சிரிப்புடன் போனான்.

இப்பொழுது அவனுக்கு மகிமா வந்திருப்பது தெரியுமோ...'

'தெரிந்திருக்கலாம். ஒருவேளை அவனுடன் சமாதானமாகி, இப்பொழுதுகூட அவனுடனேயே வந்திருக்கலாம்.'

ஐந்து வருட காலச் சுழற்சி—மகிமாவை எப்படியெல்லாம் மாற்றியிருக்கிறது என்பதை தெரிந்துகொள்வதில் ஏற்பட்ட ஆர்வம்...

அன்றைக்கு வீட்டில் விசேஷம். சின்னப் பிள்ளையின் இரண்டாவது திருமண நாள். வீடு முழுக்க பூச் சிதறலும், பன்னீர் வாசமுமாய்...

காலையிலிருந்து நடுப்பகல் வரையில் சாப்பாட்டுக் கடையே மதுராவின் இடுப்பை ஒடிய வைத்தது... இன்னும்மாலையில் ஹோட்டல் தட்சிண்னில் டின்னருக்கு ஏற்பாடு செய்திருக்கிறான் மகன்.



என்னவோ தெரியவில்லை. வெகு நேரம் சமையலறையிலேயே நின்றிருந்ததாலோ என்னவோ—மதுராவுக்கு கண்ணை இருட்டிக்கொண்டு வந்தது சாப்பிடலே முடியாமல் நாவில் கசப்பு படர்நதது...

இன்னும் டின்னருக்கு வேறு புதுப்புடவை கட்டி, அலங்காரம் செய்து...

அலுப்பாய் வந்தது அவளுக்கு.

கல்யாண நாள் மகனுக்குத்தான். என்றாலும் தேவேந்திரனுக்கு தன் மனைவி—எந்தவொரு அலங்காரத்திலும் குறை வைக்காமல் தன்னுடன் வரவேண்டும்.

''இத்தனை வயசுக்கு மேல் என்ன வேண்டிக்கிடக்கு... கொண்டையும், ஷிபான் புடவையும்... இத்தனை நீள முடியைக் கொண்டை போடறதுக்குள்ளே கை வலி வந்துடறது.''

மகள் ரசிகாவிடம் புலம்பிக்கொண்டே படுத்திருந்தவள் வயிற்றுக்குள் 'குபுக்'கென குதித்த ஏதோ ஒன்றின் துள்ளலில் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தாள்...

'வயிற்றை புரட்டிட்டு வருதோ... அஜீரணமோ...'

அவள் வாஷ் பேஸினை நோக்கி விரைந்தபோது—தேவேந்திரன் தன் காதோர வெள்ளை முடிக்கு, மென்மையாய் மை தடவிக்கொண்டிருந்தார்.

டின்னரின் பாதியில் எப்படியாவது, எதையாவது சொல்லிவிட்டு, மகிமாவைப் பார்க்கக் கிளம்பிவிட வேண்டும்.

அவர் உள்ளம் சிறுபிள்ளை போலத் துள்ளியது.

# 7

அன்பே,
என்னைத் தெரிந்த
உன்னை விட
புரிந்த ஒருவரை
வழிபடத் துடிக்கும்
என்
பூஜையறை
இன்னும்
காலியாகவே உள்ளது

மகிமாவின் மனமும் ஒரு நிலையில் இல்லாமல் தவிக்கிறது.

தேவேந்திரனை நேரில் பார்த்தால்தான் மனசு அமைதியடையும்போல...

'வேற யார்கிட்டயும் சொல்ல முடியலையின்னாலும், குறைஞ்ச பட்சம் தேவேந்திரன்கிட்டயாவது சொல்லிட்டுக் கிளம்பியிருக்கலாம்.'

ஆற அமர இப்பொழுது நினைத்து வருத்தப் படுகிறாள் அவள்.

ஐந்து வருடங்கள்...எதையோ நம்பி, எதற்காகவோ ஏங்கி, தாய்நாட்டை மறந்து, அன்னிய பூமியில்—தங்கக் கூண்டுக்குள் வாழ்ந்தாயிற்று...

போதும்! இனிமேல் அப்படியொரு வாழ்க்கை வேண்டாம்; வேண்டவே வேண்டாம்.

மகிமாவை இந்த முடிவுக்கு வரச் செய்த அமெரிக்க கோடீஸ்வரர் ஜோன்ஸ்—

கடைசியில் இவளை விட்டு விலகும்போது சொன்ன வார்த்தைகள்.

"பெண் உருவத்துல நடமாற பணப்பேய் நீ! பணம் ஒண்ணுதான் முக்கியம் உனக்கு? பணத்துக்காக நன்றி யில்லாம நீ என்ன வேணுமானாலும் செய்வே! உன்னை நம்பி, என்னோட அன்பான மனைவி, குழந்தைகளைப் பிரிஞ்சு வந்த நான் ஒரு முட்டாள்!"

ஆனால் மகிமாவிற்கு ஜோன்ஸின் வார்த்தைகள் மிக அநியாயமாகப் பட்டன.

எப்பொழுதும் நீதான் என் மனைவி. நீதான் எனக்கு சகலமும் என்று ஜோன்ஸ் சொல்லிக்கொண்டே இருந்தாலும், அவனுடைய வியாபார முன்னேற்றத்துக் காகவும், கோடிக்கணக்கில் லாபம் சம்பாதிக்கவும் மகிமாவை ஒரு கருவியாகத்தான் உபயோகித்தான்.

சென்னையிலிருந்து அமெரிக்கா வந்து ஆறுமாதங்கள் வரையில்தான் ஜோன்ஸ் இவளை—தன் மனைவியாய் நடத்தினார். அப்புறம் எல்லாமே மிக மோசமான நாட்களாய்...

அழகும், கவர்ச்சியும் எத்தனை ஆபத்தானது என்பதை அமெரிக்கா வந்த சில மாதங்களிலேயே தெரிந்து கொண்டுவிட்டாள் அவள்.

ஜோன்ஸ், அவளுக்காக வைரங்களையும், டாலர்களை யும் வாரியிறைத்தார் என்றாலும் அதற்கான விலை ஒன்றையும் கூடவே வைத்திருந்தார்.

''மகி... இன்னிக்கு லண்டன்லே இருந்து ஒரு கோடீஸ்வரன் வர்றான். அவன் மட்டும் என்னோட பிஸினஸ் பார்ட்னர் ஆயிட்டான்னா கவலையே இல்லே... அவன் இங்கே இருக்கற வரைக்கும் கவனிச்சுக்க!''

''வெளியில அழைச்சிட்டுப் போகணுமா?''

''அது உன் வசதிப்படி...''

''புரியல்லே...''

''எப்படிப் புரியாமப் போகும்? புரியாத மாதிரி நடிக்கறே...அவ்வளவுதான். அவனுக்கு நீதான் கம்பெனி கொடுக்கணும் எல்லாவிதத்துலேயும்...''

''வாட் நான்சென்ஸ் யூ ஆர் டாக்கிங்?''

''ஏன்...இதுல என்ன தப்பு?''

''எனக்கு இதெல்லாம் பழக்கமில்லே... நான் உங்களை நம்பி, உங்களுக்காகத்தான் இங்கே வந்தேன். இங்கேயும் நான் உங்களோட கீப்பா இல்லே. நீங்க, என் கையில மோதிரம் போட்டு ரிஜிஸ்தர் செஞ்சு...''

ஜோன்ஸ் சிரித்தான்.

''என்ன பேசறே நீ? கல்யாணம் செஞ்சிட்டா, பிற புருஷன்கூடப் படுக்கக்கூடாதுன்னு நான் சொல்லலையே... அதே சமயத்துல நீயும் ஒண்ணும் இந்திய கலாச்சாரத்தை அப்படியே கடைபிடிக்கறேயின்னு சொல்லிக்க முடியாதே? இப்ப நான்—எனக்கு முன்னாலே தேவேந்திரன்—அதுக்கு முன்னாலே யார் யாரோ...''

''ஷிட்! உங்க வரிசையில மிஸ்டர் தேவேந்திரனை வைக்காதீங்க. அவர் ஒரு பக்கா ஜென்டில்மேன்!''

''ஓ...என்னோட வந்து, என்னோட மாளிகையிலத் தங்கிட்டு, இன்னமும் அந்தக் கிழவன் மேல்ல ஆசை வச்சிருக்கியே...அதைவிடவா நான் சொல்றது மோசமாப் போயிடுத்து உனக்கு?''

''இத்தனை பேசறீங்களே. உங்க மனைவிய இந்த மாதிரி பிஸினஸ்ஸுக்காக, உபயோகப் படுத்துவீங்களா?''

''எதுக்கு—எதுக்காக அவளை நான் வீணா கஷ்டப் படுத்தணும்? அவ மூணு குழந்தைகளுக்கு தாய்...உன்னை மாதிரி பணத்துக்காக என்கூட வந்தவ இல்லே அவ பெரிய பாரம்பர்யத்துல வந்தவ. அவ அப்பா இன்னிக்கும் மிகப் பெரிய அந்தஸ்தானப் பதவியில இருக்காரு. அவளுக்கு இதெல்லாம் அவசியமில்லே.''

மகிமா, பல சமயங்களில் ஜோன்ஸுடன் பாய்ந்து பாய்ந்து சண்டை போட்டாள். சில சமயங்களில் அழுதாள். மற்றும் சில சமயங்களில் அவனுக்கு எரிச்சலை உண்டுபண்ண வேண்டி வேறு சிலருடன் சினேகம் வைத்துக் கொண்டாள்.

ஆனால் ஒன்று மட்டும் தெரிந்தது.

இந்திய மண்ணில் அழகை ரசிக்கிறார்கள், போற்று கிறார்கள். மிஞ்சிப்போனால் தயங்கித் தயங்கி, சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மெள்ள நெருங்கி வந்து 'ஐ லவ் யூ' சொல்கிறார்கள்.

அயல் மண்ணில் காதலுக்கு ஒரே அர்த்தம்தான். 'ஐ லவ் யூ' என்பதற்கு அமெரிக்கர்களின் நேரடி மொழி பெயர்ப்பே—'படுக்கைக்கு வர்றியா' என்பதுதான்.

இங்கே சுவாசக் காற்றாக இழுக்கிற காதல் அங்கே கை துடைத்துப் போடும் பேப்பர் நாப்கின்னாக மட்டுமே இருக்கிற அவலம்!

கோவில் சிலையை அப்படியே தூக்கி மியூசியம் வாசலில் வைத்தாற்போல—

அவனவன் கேக்குடன் கொஞ்சம் மகிமா; ஷாம்பெயி னுடன் கொஞ்சம் மகிமா என்று ருசி பார்த்துப் பார்த்து...

ஜோன்ஸின் வற்புறுத்தலுக்காகப் பாதி—அவளுக்கே இயல்பாக உள்ள திமிர் பாதி...

ஜோன்ஸுக்கு இனிமேல் இவள் தேவையில்லை. அமெரிக்காவிலேயே இவளை விடவும் கலகலப்பாகப் பழகக்கூடிய குடும்பப் பெண்கள் கிடைத்து விட்டார்கள்.

மேலும், பார்ட்டி இருக்கிறது வருகிறீர்களா என்று அவன், தனது வியாபார நண்பர்களைக் கேட்டால், அவர்கள் இப்பொழுதெல்லாம் முகத்தைச் சுருக்கிக் கொண்டு முதலில் கேட்கிற கேள்வியே இதுதான்.

''பார்ட்டியா? யாரு... அந்த மகிமா தானே இப்பவும்... வேணாம்பா. ஆளை விடு...போரடிச்சுப் போச்சு!''

பார்த்தான் ஜோன்ஸ். மெள்ள இவளைக் கை கழுவி விட்டான்.

வாரம் ஒருமுறை போடும் சண்டை நிரந்தர யுத்தமாகி விட்டது. அடிக்கடி வராமல் பத்து பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை தலை காட்டினான்.

தவிர—வேறொரு ஆடம்பர ஓட்டலில், வேறொரு அழகியைக் கொண்டுவந்து வைத்து, தனது நண்பர்களை அழைத்து விருந்து வைத்தான்.

விஷயம் இவள் காதுவரை சென்று, இவள் கத்திய தற்கு, கூசாமல் பதிலளித்தான்.

''இப்ப என்ன நடந்திடுச்சுன்னு கத்தறே...விஸ்கிக்குத் தான் பழசாக ஆக மவுசே தவிர—பொண்ணுக்கு வயசாக ஆக மதிப்பு குறைஞ்சிட்டே தான் போகும். என் ஃபிரண்ட்ஸ் நடுவுல உன் பேரைச் சொன்னாலே அலர்றாங்க. நீ அடிக்கடி காஸினோவுல போய் உட்கார்ந்து சூதாடறே... டிரிங்க் பண்ணினா உலகமே மறந்து போயிடறது. அழகெல்லாம் போயிடுச்சு.



அடிவயிறு பெருத்துப் போச்சு... இனிமேல் உனக்கு என் வீட்டுல ஒரு கௌரவ இடம்தான். தாத்தா காலத்திய சுவர் கடியாரம். பாட்டி உபயோகிச்ச பியானோங்கற மாதிரி—உனக்கும் புராதனப் பொருளுக்குண்டான மதிப்பு நிச்சயம்கிடைக்கும்.''

''அப்படி ஒரு கேவலமான நிலைமைக்கு நான் போக மாட்டேன். எனக்கு தரவேண்டிய நஷ்டஈடைத் தந்தா— நான் தமிழ்நாட்டுக்கே போயிடறேன்!''

ஜோன்ஸிடமிருந்து பணம் பறிப்பது கல்லில் நார் உரிப்பது மாதிரி.

அப்படியும் ஏதோ, கிடைத்தவரை லாபம் என்று அவன் விட்டெறிந்ததைப் பொறுக்கிக்கொண்டு தாயகம் திரும்பியிருக்கிறாள்.

முப்பத்திரண்டு வயதுக்கும் அவள் இருபத்தியைந்தே வயது போல, தன்னைப் பராமரித்து வந்தாலும் உற்றுப் பார்த்தால் அனுபவம் வரைந்த கோடுகள் தெரியும்.

அதுவும், தேவேந்திரனைப்போல— பெண்ணின் அழகை ஆராதிப்பவருக்கு 'பளிச்'சௌத் தெரியும்.

நெற்றியில் கீற்றாக விழுந்த வரிகள்...கன்னச் சதையின் தளர்வு... கழுத்தில் விழுந்த சுருக்கம்... ஜோன்ஸ் குறிப்பிட்டதுபோல அடிவயிற்றின் உப்பல்... புறங்கைகளின் மென்மை மறந்து புடைத்த நரம்புகள் எல்லாமே... எல்லாமே மூப்பு என்கிற முதுகலைப் பட்டத்துக்கு அவளைத் தயார் செய்யும் வகுப்பறைகள்...

இத்தனைக்கும் நடுவே—அழகின் வண்ணங்கள் மறைந்து, வெறும் பென்சில் கோடுகளாக நிற்கும் தன்னை தேவேந்திரன் எப்படி வரவேற்பாரோ— பயமும் இல்லாமல் இல்லை.

ஆனாலும் இப்போது அவள், அவரை நம்பித்தான் வந்திருக்கிறாள்.

இழந்த அழகை மீட்டு, புருஷத் துணையில்லாத தன்னை ஓர் மதிப்பான—வெளியே சொல்லிக்கொள்ளும் படியான பீடத்தில் வைக்க அவரால் மட்டுமே முடியும்!

புருஷத் துணை என்றதுமே கணவன் சத்யனின் நினைவும்...

அவனை நினைத்தாலே இப்பொழுதும் அவள் மேனி நடுங்கும்.

வெளிநாடுகளில் எத்தனையோ முரடர்களுக்கும், போக்கிரிகளுக்கும் தண்ணீர் காட்டியவள்தான் மகிமா. ஆனால் சத்யன் நல்லவன். சாது. தான் உண்டு; தன் குடும்பம் உண்டு என்று எதிலும் பட்டுக்கொள்ளாமல் ஒதுங்கி நின்றவன்.

இருந்தாலும் தான் செய்த துரோகம்—அவனை எந்த அளவுக்குப் பைத்தியமாக்கியிருக்கும் என்பதை அவள் அறிந்திருந்தாள்.

அதனாலேயே—அவனிடம் பயம்!

சாது மிரண்டால் காடு கொள்ளாது என்கிற பயம்.

அவனை விட்டு விலகியிருந்தாலும்—தன் செய்கையினால் பாதிக்கப்பட்டு, அவன் தேவேந்திரனின் வீட்டுக்குப் போய் அமர்க்களம் செய்ததும், அவன் தாய் மனசொடிந்து இறந்து போனதும், அவன் தற்கொலை முயற்சி வரையில் போய்—கடைசியில் கேரளத்துக்கே கையில் காசின்றி திரும்பியதும்...அவள் காதுகளுக்கு வராமல் இல்லை.

அழகானப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்ட ஒரே குற்றத்துக்காக—அவனுக்குத்தான் நாம் எவ்வளவு கொடுமையான தண்டனையைக் கொடுத்துவிட்டோம் என்பதையும் அவள் நினைத்து நினைத்து வருந்தாமல் இல்லை.



ஒரு நாள் இரவு வெளியே தங்கினாலே—மானம் போயிற்று என்று கத்தி, அமர்க்களம் செய்யக்கூடிய கணவனிடம், ஐந்து வருடங்கள் எங்கேயோ, எவனுடனோ போய் இருந்துவிட்டு வந்து, பச்சாதாபத்தையோ, பரிவையோ எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.

சந்தித்தால் அநாவசிய ரகளைதான் மிஞ்சும்.

ஜோன்ஸிடம் தகராறு முற்றும் ஒவ்வொரு சமயத்திலும் அவள் திரும்பி இந்தியாவுக்கே வந்துவிட வேண்டும் என நினைக்கும் போதெல்லாம் அவளைக் கிளம்பவிடாமல் தடுத்தது சத்யனின் வெறிதான்.

ஒருமுறை கேரளாவில் அவளது பிறந்த வீட்டுக்குப் பக்கத்திலிருந்த அம்பிணிக்குட்டியை அமெரிக்காவில் சந்தித்தாள். அவளுக்கு, இவளை அடையாளமே தெரியவில்லை. இவள்தான் இழுத்துவைத்துப் பேசினாள்:

''அந்த மகிமாவா நீ? அய்யோ! எப்படி மாறியாச்சு. நீ இங்கே இருக்கறது சேட்டனுக்குத் தெரியுமோ!''

''தெரியாது? என்னை இங்கே பார்த்ததா நயும் சொல்விடாதே. அது சரி, அவரை நீ எப்ப பார்த்தே?''

''யாரு! சத்யன் சேட்டனையா?''

''ஆ... அதே. எப்படி இருக்கார்?''

''என்டே குருவாயூரப்பா! சத்யன் பத்தி விவரமே தெரியாதோ உனக்கு?''

''ஏன்! என்ன ஆச்சு?''

''அது ரொம்ப நொடிச்சுப்போயி. உன் மாமியார் செத்துப்போனப்ப, சத்யனோடத் தம்பி உன்னைப் பத்தி ஏதோ தப்பாப் பேசி, இந்தாளு அவனை அடிச்சுப் போட்டு, ஒரு வருஷம் லாக்கப்புலகூட இருந்தது.''

அம்மிணிக் குட்டி, முற்றுப்புள்ளி வைக்கவே மறந்து போனவளாய் பேசிக்கொண்டே போனாள்.

''உன்னை இப்போழ் கண்டில் வெட்டிப்போடும் சத்யன்.''

நிஜம்தான். அவன் அப்படி செய்வான் என்கிற பயம் இப்போதும் அவளுக்கு உண்டு.

சத்யனுக்குப் பிடிக்காத விஷயங்களைச் செய்தால், அவன் அவளை எத்தனையோ முறை அழ வைத்திருக்கிறான்.

அவருக்கு நான் இந்தியா வந்திருப்பது தெரியக் கூடாது. அதற்குள், வேற பேரு வேற நடையுடை பாவனை எப்படி சாத்தியம் இது? ஏன் முடியாது? தேவேந்திரன் மட்டும் அதே பழைய தேவேந்திரனா இருந்தா— எல்லாமே சாத்தியம்தான்.''

அவள், மறுபடியும் தேவேந்திரனுக்கு போன் பண்ணலாமா என்று ஒருகணம் யோசிக்கிறாள். ஒரு கணம்தான். பின், என்ன காரணத்தினாலோ, அந்த எண்ணத்தை மாற்றிக் கொள்கிறாள்.

இல்லை... நாமே வலியப் பேசி, நம்முடைய மதிப்பைக் குறைத்துக் கொள்ளக்கூடாது. அவர்தான் வருகிறேன் என்று சொல்லியிருக்கிறாரே...''

அவள், தான் தங்கியிருந்த அறையை ஒரு முறை பார்த்தாள்.

ஐந்து நட்சத்திர ஹோட்டலின் மிக விலையுயர்ந்த அறை. இன்னும்கூட தொஞ்சம் கவர்ச்சியாய் அலங்கரித்தால் தேவலை.

அவள், ஹோட்டலின் வரவேற்பாளரை இன்டர்காமில் அழைக்கிறாள்.



''என் ரூமை இன்னொரு தடவை க்ளீன் செஞ்சு, படுக்கை விரிப்பை எல்லாம் மாத்தினா தேவலை! கொஞ்சம் புது பூ... எஸ். ரூமுக்குள்ள இருக்கற மினி பார்லே ஷாம்பெய்ன் எல்லாம் ரெடியா!''

''மேடம். பெல் காப்டன் கிட்ட சொல்லுங்க.''

''ஓ! சரி. அவர் நம்பரைக் கொடுங்க.''

மகிமா, வரவேற்பாளர் குறிப்பிட்ட அறை நிர்வாகியிடம் மளமளவெனப் பேசுகிறாள்.

''ஆமா! படுக்கை விரிப்பு இன்னும் கொஞ்சம் ரிச்சா இருந்தா நல்லாயிருக்கும். அப்புறம், இந்த ஏ.சி. கூட ஒழுங்கா இல்லே. ஒரு தரம் பார்த்துடுங்க.''

''எஸ் மேடம்.''

அடுத்த சில நிமிடங்களில் அறை மிக உன்னதமாய் விளங்க...

''குட்... ரொம்பவும் அழகா மாத்திட்டீங்க...மிஸ்டர் மிஸ்டர்.''

''சத்யன்!''

அந்த பெல் காப்டன் மிக நிதானமாய் பதிலளித்தான்.

# 8

அன்பே
பட்ட மரமென்று நினைத்து
வெட்டிய பிறகு தான்
தெரிந்தது...
வேருக்குள் ஒளிந்திருக்குது
இன்னும் கொஞ்சம்
பசுமை!

மதுராவின் அடிவயிற்றிலிருந்து கிளம்பிய பயம் நெஞ்சை அடைக்க அப்படியே ஆடாமல், அசையாமல் உட்கார்ந்திருக்கிறாள்.

நெற்றியில் ஜிகினாப் பொட்டை வைத்துக்கொண்டு, காதில் தொங்கும் நீள சமாச்சாரத்தை விரலால் தட்டி விட்டபடி, தலை சாய்த்து, கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டிருந்த மகளை பயம் கலையாமலேயே பார்க்கிறாள்.

'இவளுக்கு என்ன வயசு இப்ப?''

''பதினெட்டு முடியப்போறது... அதைவிடு. உன் வயசு என்ன! நாற்பத்திமூனு... நாற்பத்தி நாலா? அடக்கடவுளே! இது என்ன சோதனை?''

நினைத்துப் பார்க்கும்போதே தலையை மறுபடியும் சுற்றுகிறது அவளுக்கு.



இப்படியும் நடக்குமோ!

''இந்த விஷயத்தில் நாம்தான் எத்தனை அலட்சிய மாக இருந்துவிட்டோம்?''

ஏன்! போன மாதம் அவள் தாய், ஊரிலிருந்து வந்திருந்தாள். அப்போது. அவளிடம் கூட இது பற்றி மதுரா சொன்னாளே!

''ரெண்டு மூணு மாசமா பீரியட்ஸ் ஒழுங்கா வர்றதே இல்லேம்மா. ஒரு நாள் கிழமை பார்க்க முடியறதில்லே. எப்ப வந்து கழுத்தை அறுக்குமோன்னு கவலையா இருக்கு... இப்பவே பாரு! குளிச்சு எழுபது நாளாறது. கண்ணுலேயே காணும்! அடுத்த மாசம் சின்னவனோட வெட்டிங்டே. பெரியவன் பெண்டாட்டிய ரெண்டாவது பிரசவத்துக்கு அழைச்சிட்டுப் போக சம்பந்தி வீட்டுல இருந்து வருவாங்க. அப்பப் போய், கல்யாணத்தோடக் கல்யாணமா—இந்த மூணு நாள் கொண்டாட்டமும் வந்து நிற்கும்னு நினைக்கிறேன்.''

பெற்றவள் 'த்சூ' கொட்டியபடி படு அலட்சியமாய் சொன்னாள்.

''ஆமா போ... என்னைக் கொண்டிருந்தா நாற்பது வயசுலேயே எல்லாத்தையும் மூட்டை கட்டியிருக்கணும் நீ. நல்லவங்களுக்கு நாப்பது வயசுல தீட்டு நின்னுப் போயிடும்னு பெரியவங்க சொல்லுவாங்க. நீயானா இப்பத்தான் சின்னக் குழந்தை மாதிரி ஒடி ஒடி உக்காந்துட்டிருக்கேயின்னு நினைச்சேன். நல்லவேளை இப்படி—ரெண்டு மாசத்துக்கு ஒரு தரம்... மூணு மாசத்துக்கு ஒரு தரம், அப்புறம் இருந்தாப்பால இருந்து வருஷத்துக்கு ஒன்னு. இப்படித்தான் நிற்கணும். உங்க சனியன் சீக்கிரம் நிற்கணும்னு வேண்டிக்க. உங்க அத்தை மாதிரி! போற சமயத்துல உதிரம் கொட்டி, வயித்தைச் கிழிச்சு ஆபரேஷன், அது இதுன்னு எல்லாம் பயம் காட்டாம இருந்தாச் சரி!''

அம்மாவின் வார்த்தைகள் அப்போது எத்தனை ஆறுதலாக இருந்தது மதுராவுக்கு.

ஆனால் இப்போது?

எத்தனை வருடங்களானால்தான் என்ன ஒரு பெண்ணுக்கு. தனக்குள் இன்னொரு ஜீவன் உதிப்பது— அப்படி உதிக்கும்போது ஏற்படும் உணர்வுகள். மறந்தா போய் விடும்?

பெரியவன் தீபக் வயிற்றில் இருக்கும் போது படாத பாடு படுத்தி வைத்தான். ஒரே தலைச் சுற்றல்... வாந்தி! பச்சைத் தண்ணீர்கூட குடிக்கப் பிடிக்காமல் அவள் சுருண்டு கிடக்க தேவேந்திரன் தன் ஆசை மனைவியின் அந்த நேரத்து. மசக்கைக்காக— வையாபுரியின் வீட்டிற்குப்போய், குமட்டி அடுப்பு சாம்பலை சலித்து எடுத்து வருவார்.

அதுதான் உணவு— மூன்று வேளையும்.

இரண்டாவது லலித்தை உண்டாகியிருக்கும் போது ஒரு மசக்கையில்லை. ஒரு வாந்தியிலலை. பிரசவ வலி எடுக்கிற வரைக்கும் மங்கு மங்கென்று காரியம். போதாக் குறைக்கு அப்போது தேவேந்திரனின் தாய், கிணற்றடியில் வழுக்கி விழுந்து, இடுப்பு எலும்பு ஒடிந்து—படுத்த படுக்கையாகக் கிடந்தாள். பிரசவத்துக்காக மதுரா பிறந்த வீட்டுக்குக்கூடப் போக முடியவில்லை.

அவள் அப்படிப் போகாமல் தங்கியதில், தேவேந்திரனுக்குப் பரம சந்தோஷம்.

அதே சமயம் மதுரா, இரண்டாவதையும் ஆண் குழந்தையாகப் பெற்றுக் கொண்டதில் கொஞ்சம் வருத்தம்.

''ஆசைக்கு ஒரு பெண் குழந்தை அதுவும் உன்னை மாதிரியே பெத்துத் தருவேயின்னு நினைச்சேன்.''



அவர் சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார். ஆனால், அவரது ஆசை நிறைவேற— அதற்குப் பிறகு ஐந்து வருடங்களாகியது.

அப்போதும் இப்படித்தான்... வயிற்றுக்குள் ஒரே துள்ளல், குதியல், முட்டல், மோதல்.

அதுவும் நூறு நாள் முடியும் முன்பே— மதுரா மசக்கையில் பாதியாகிவிட்டாள்.

''என்னவோ தெரியல்லே... முதல் இரண்டு தடவை இருந்தாப்பல இப்ப இல்லே... எல்லாமே வித்தியாசமா இருக்கு.''

மதுரா, கணவரின் தோளில் முகம் புதைத்து எத்தனை நாள் சிணுங்கியிருக்கிறாள்?

வருடங்கள் ஆனால்தான் என்ன... சுமந்த வயிறு சுலபத்தில் மறந்துவிடுமா என்ன...

மதுரா கதிகலங்கிப்போய் விட்டாள்.

எடுத்த எடுப்பில் தோன்றியதெல்லாம்— தன் வயிற்றில் பிறந்த பிள்ளைகளின் முன்பு தான் எப்படி தலை நிமிர்ந்து நிற்போம் என்பதுதான்.

ஒரு சமயம், தனது பயம் அர்த்தமற்றதாகத் தோன்றியது அவளுக்கு.

''ச்சீ... நாமே எதுக்கு எதையெதையோ கற்பனை செஞ்சிட்டு அநாவசியத்துக்கு பயப்படணும். காலையில ஒருத்தியா அத்தனை சமையலையும் செஞ்சது... நேரங் கெட்ட நேரத்துல சாப்பிட்டது. இதெல்லாம் சேர்ந்து பித்தத்தைக் கிளப்பி விட்டிருக்குமாயிருக்கும்...''

''ஆமா... இத்தனை நாளா செய்யாத வேலையா? என்னிக்கு ஒழுங்கா, நேரத்துக்கு சாப்பிட்டிருக்கேன்— இது சந்தேகமே இல்லாம அதுதான். இத்தனை வயசுக்கு மேல எனக்கு வேணும்... நல்லா வேணும்.''

அவளுக்கு உடனேயே கணவனை தனியே அழைத்து ஒரு பாட்டம் அழவேண்டும் போலிருக்கிறது.

"எங்கே அவர்... இத்தனை நேரம் குட்டிபோட்ட பூனை மாதிரி சுற்றிச் சுற்றி வந்திருப்பாரே.."

அவள் மெதுவே தன்னைச் சமாளித்துக்கொண்டு எழுந்தாள்.

ரசிகா, தாயின் சங்கடம் புரியாமல் அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு கொஞ்சினாள்.

"அம்மா! இந்த டிரஸ்லே நீ ரொம்ப அழகாயிருக்கே! வயசாக ஆக அழகு குறைஞ்சிட்டே வரும்னு சொல்லுவாங்க. அது எப்படி உனக்கு மட்டும் கூடிட்டே போறது! இதை நான் மாத்திரம் கேட்கலைம்மா. நேத்திக்கு லலித் அண்ணன் பொண்டாட்டி கூட கேட்டாங்க. அதெப்படி உங்க அம்மா மட்டும் ரிவர்ஸ்லே போறாங்கன்னு."

"சரி...சரி. அவதான் ஏதோ உளர்றான்னா நீயும் இதை ஒரு பெரிய விஷயமா எடுத்துட்டு கேட்கறியே! வேலையப் பாரு... எல்லாரும் கிளம்பிட்டாங்களான்னு பாரு! நான், உங்கப்பா என்ன செஞ்சிட்டிருக்காருன்னு பார்த்துட்டு வர்றேன். கேட்கறதுக்கு ஆளில்லையின்னா! அவர் பாட்டுக்கு படுத்துத் தூங்கிட்டிருப்பாரு...'

ரசிகா தாயையப் பார்த்து செல்லமாய் பழித்துக் காட்டுகிறாள். எப்போதும் அவள் இப்படிச் செய்தால் 'குப்' பெனச் சிரித்து விடுவது மதுராவின் வழக்கம்.

"பார்த்துடீ! என்னைப் பழிச்சுக் காட்டற வேகத்துல வாய் கோணிடப் போறது... அப்புறம் மாப்பிள்ளை தேட எனக்குத்தான் கஷ்டம்..."

இப்படிச் சொல்லி, மகளைச் சீண்டுபவள் இன்று வாய் மூடி மௌனியாக—



இவளுக்கு மாப்பிள்ளை தேடி— ஒரு பேரக் குழந்தையை கை நிறைய வாரிச் சீராட்ட வேண்டிய வயதில்— தானே தாயாகி நின்றால்...

ச்சீ, என்ன கேவலம்?

இதோ, லலித்துக்கு மணமாகி மூன்று வருடங்களாகிறது... இன்னும், 'அந்த' சந்தோஷ செய்தியை மனைவி சொல்லவில்லையே என்கிற கவலை, அவனுள் இருக்கிறது.

ஒவ்வொரு முறையும் அம்மாவிடம் கேட்பான்:

"ஏம்மா, நம்ம குடும்பத்துல எல்லாருக்குமே இந்த வருஷம் கல்யாணம்னா— அடுத்த வருஷம் 'வெடிங் டே'க்கு கையில குழந்தை இருக்கறதுதானே வழக்கம். அப்படியிருக்கறப்ப... எங்களுக்கு மட்டும் ஏம்மா... எனக்கு பயமாயிருக்கு. ஏதாவது இது பத்தி பேசினாலே அவ மூட் அப்செட் ஆயிடறா. நீதான் இதுக்கு ஒரு நல்ல வழி... டாக்டரா, பிரார்த்தனையா எதுவானாலும் ரெடி...சொல்லேன்!"

லலித்தை நினைக்கும்போதே மதுராவின் கண்களில் சரம் கோர்த்துக் கொள்கிறது.

'அந்த இளசுகளுக்கு இறைவன் கொடுக்க வேண்டிய வரப்பிரசாதம். இந்த வயசில் எனக்கு எதற்கு?"

அவள் மெள்ள எழுந்து மாடியிலுள்ள கணவரின் அறைக்குப் போகிறாள். மனசுக்குள் உத்தேசமான ஒரு கணக்கு ஓடுகிறது.

"வருஷப் பிறப்புக்கு முதல் நாள் குளிச்சேன். சித்திரை, வைகாசி, ஆனி. அய்யோ ஆடி வந்து ஒரு வாரம் ஆயிடுத்தே! இப்ப டாக்டர் கிட்டப் போய் கலைச்சிடச் சொன்னா— திட்டமாட்டாரா. இத்தனை நாளும் என்ன, தூங்கிட்டிருந்தியான்னு கேட்க மாட்டாரா!"

அவள் ஓசையின்றி அறைக் கதவைத் திறக்கிறாள்.

'கும்'மென்ற வாசனை அவள் முகத்தில் மோதியது.''

''ஹாய் மது! மதுக்கண்ணா! தேவதை மாதிரி டிரஸ் செஞ்சிட்டு, நான் கூப்பிடாமலேயே வந்து நிற்கறியே ஹவ் நைஸ் யூ ஆர்.''

மதுரா அரைச் சிரிப்புடன் கணவனின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தாள்.

தினமுமே கவனமெடுத்துக்கொண்டு தன்னை அலங்கரித்துக் கொள்பவர்தான் தேவேந்திரன். என்றாலும், அன்று அவர் இன்னும் கொஞ்சம் இளமையாய், கவர்ச்சியாய் தோற்றமளிப்பது போலத் தோன்றுகிறது மதுராவுக்கு.

'போதுமே— வயசான காலத்தில், ஆன வயசுக்குத் தகுந்தாற்போல இல்லாமல், சின்னக்குழந்தை மாதிரி என்னத்துக்கு கலர் சட்டையும், மைனர் செயினும் வேண்டியிருக்கு.'

உள்ளூர எரிச்சல் மண்டினாலும், அப்போது அதை வெளிக்காட்டிக் கொள்ளும் நிலையில் அவள் இல்லை.

தேவேந்திரன், பர்ஃப்யூம் பாட்டிலை எடுத்து மனைவியின் மீதும் கொஞ்சம் சுகந்தத்தைப் பரவச் செய்தார்.

அவள் தோள்மீது கை போட்டு, மென்மையாய் அணைத்தபடி—எதிரே இருந்த பெரிய நிலைக்கண்ணாடியில் பெருமையுடன் பார்த்துக்கொண்டார்.

''எப்படி... எப்படி இருக்கோம் பாரு மது... 'வெடிங் டே' நம்ம பையனுக்கா இல்லே— நமக்கான்னு சந்தேகமா இருக்குதானே...''

அவளுக்கு உதடு துடித்தது. கண்களில் அது நேரம் வரையில் தேங்கியிருந்த கண்ணீர் 'மளுக்'கெனக் கன்னத்தில் வழிந்தது.



கண்ணாடி வழியே மனைவியை ஒருவித கர்வத்துடன பார்த்துக்கொண்டிருந்தவர், அவள் கண்கள் கலங்கியதைப் பார்த்ததும் பதறிப் போய்விட்டார்.

''மது... மதும்மா... அழறியா என்ன... ஏண்டா... கண்ணுக்கு எப்பவும் இட்டுக்கற ஐ லைனர்தானே... கம்பெனிய மாத்திட்டியா... இந்த காலத்துல கொடுக்கற காசுக்கு ஏத்தப் பொருள் கிடைக்கிறதில்லையே... மதும்மா... நிஜம்மாவே அழறியா என்ன?'

அவர் பதறிப்போகிறார். எங்கே தான் மகிமாவுடன் பேசியதை அவள் அறிந்திருப்பாளோ என்கிற பயம் உள்ளூர!

மதுரா அவர் தோளில் முகம் பதித்து மெள்ள விசும்பினாள். துக்கத்தில் வார்த்தைகள் தடுமாறின.

''என்னங்க, சாயந்திரம் டின்னருக்கு நாம ரெண்டு பேரும் போக வேண்டாம்!''

'திக்'கென்றாகிறது அவருககு

''ஏன்... ஏன்... ஏம்மா... லலித் பெண்டாட்டி ஏதாவது சொன்னாளா? மாமியார் மருமகள் சண்டைதான் நம்ம வீட்டுல வரவே வராதே!''

''அதுக்கில்லீங்க. நான் சொன்னாக் கேட்கணும். சாயந்திரம் லேடி டாக்டர் கமலா செல்வராஜ் கிட்ட போகணும் எனக்கு. எனக்கு... எப்படிச் சொல்வேன். வெட்கக்கேடு. நான் முழுகாம இருக்கேன்னு தோணுது!''

அவர் அதிர்ந்தார். உடனே 'பகபக'வெனச் சிரித்தார்.

''பைத்தியம்... இந்த வயசுல பீரியட்ஸ் தள்ளிப் போறதெல்லாம் சகஜம்தான். உடனே நீயாவே முழுகாம இருக்கிறதா கற்பனை செஞ்சுக்கணுமா. இதைத்தான் 'மெனோபாஸ் ஸ்டேஜ்'னு சொல்லுவாங்க.''

''போறுமே! அதெல்லாம் எனக்குத் தெரியாதா... எனக்கு இப்பவே போய் டாக்டரைப் பார்த்து ஏதாச்சும் செஞ்சிடணும்போல இருக்கு. வெளிலே தெரிஞ்சா மானம் போயிரும். ஏங்க, எத்தனை தடவை நான் உங்ககிட்ட தலை தலையா முட்டிட்டிருக்கேன். நமக்கு வயசாச்சு. கொஞ்சம் வயசுக்கேத்த மாதிரி கோவில், குளம்னு இருப்போம்னு... கேட்டீங்களா? உங்களுக்கென்ன, நரைச்ச மீசைக்கு டை அடிச்சிட்டு இன்னமும் மாப்பிள்ளை மாதிரி இருக்கீங்க. எனக்குத்தானே அவமானம்.''

''காம் டௌன் மது. முதல்லே அழுகைய நிறுத்து, இப்ப என்ன செய்யணும்கறே ''

''நீங்க இப்பவே டாக்டருக்கு போன் பண்ணிட்டுக் கிளம்புங்க.''

''சரி கண்ணம்மா. எது எப்படியானாலும் இன்னிக்கு ஒரு ராத்திரி பொறுக்கக்கூடாதா... நாளைக்குக் காலையிலே நாம ரெண்டுபேருமே ஹாஸ்பிடல் வாசல்லே சுப்ரபாதம் பாடவே போயிருவோம். பாவம் லலித். நாம வரல்லையின்னா...''

அவர், மகிமாவை சந்திக்கும் வாய்ப்பு கை நழுவுகிறதே என்கிற ஆதங்கத்துடன் சொல்ல— அவளோ பிடிவாதமாய் மறுத்தாள்.

''அம்மா உடம்புதான் முக்கியம்னு லலித் சொல்லுவான். ஆனா இப்ப எதுவும் சொல்ல வேண்டாம். உங்களுக்குத்தான் பார்ட்டியில போய் சைட் அடிக்கற சான்ஸ் போச்சு.''



''சேச்சே... என்ன மதுரா?''

''பின்னே என்ன... நாம தாமதிக்கற ஒவ்வொரு நிமிஷமும் என் வயித்து சுமை ஏறிட்டே இருக்கு. உடனே போன் செய்யுங்க.''

அவள் 'விருட்'டென தனது அறைக்குப் போய் படுக்கையில் விழ... மறுபடியும் குமட்டிக்கொண்டு வர, வயிற்றைப் பிடித்துக்கொண்டே வாஷ்பேஸினுக்கு ஓடுகிறாள்

தேவேந்திரன், விதியை நொந்தபடி முதலில் மகிமாவுக்கு ஹோட்டல் அறைக்குத்தான் போன் செய்கிறார்.

''மேடம் குளிக்கிறாங்க போல... ஒரு அஞ்சு நிமிஷம் கழிச்சு போன் பண்ணுங்க சார்... லைனை இடலே.''

ஹோட்டல் ரிசப்ஷனிஸ்ட்டின் கொஞ்சும் குரலை ரசிக்கும் நிலையில் தேவேந்திரன் இல்லை.

# 9

நீ மனசில்
ஆணிகள் அறைந்து
போனாய்...
தெரியுமா?
அதில் நான்
உன் படங்களை
மாட்டி
வைத்திருக்கிறேன்.

மகிமாவின் கையிலிருந்த ரிசீவர் 'பொத்'தென வெல்வெட் விரிப்பில் விழ— அவள் அந்தக் கணத்திலேயே சாவி தீர்ந்த பொம்மை மாதிரி ஸ்தம்பித்து வட்டாள்.

சத்யன்...

'ச்சே... இந்தக் குரலை எப்படி அடையாளம் தெரியாமல்...''

யோசிக்க நேரமில்லை. உடனே அவள் அந்த இடத்தை விட்டுக் கிளம்பியாக வேண்டும் என்று தீர்மானிக்கிறாள்.

'தேவேந்திரனுக்கு மறுபடி போன் செய்து வராதே என்று கூறிவிடலாமா...''

'அய்யோ... வந்தாலும் ஏதோ கொஞ்சம் உதவியாக இருக்கும். ஆனால... அவர் வருவதற்குள் இந்த மனிதன் மாடிக்கு வந்துவிட்டால்...

ஹோட்டல் பணியாளர்கள் அறையை அழகுபடுத்தும் போது அவள், அதே அறையின் பால்கனி வழியே ஸ்விம்மிங் ஃபூல்லைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

வந்திருந்த பணியாளர்களுடன் சத்யனும் வந்திருந் தால்கூட அவளுக்குத் தெரிந்திருக்காது.

இவன், இங்கே தனக்காகத்தான் வந்திருக்கிறான் என்று அறிவு ஒரு புறம் இடித்துரைத்தாலும்—பாழாய் போனச் சபலம், அது வேறு யாராவது ஒரு சத்யனாக இருக்கக்கூடாதா என்று அசட்டுத்தனமாக ஏங்கியது.

'அப்படியே அவராகத்தான் இருக்கட்டுமே. இத்தனாம் பெரிய ஹோட்டலில்—என்னை இவர் என்ன செய்துவிட முடியும்? மேலும் ஃபோனில்தானே பேசினேன். ஐந்தாவது மாடிக்கு லிஃப்டில் வருவதானாலும்— அதற்குள் நான் தப்பிக்க முடியாதா...'

கொஞ்சம் தெம்பு வந்தது... அவள் தன்னை நிதானித் துக்கொண்டு, மெள்ள எழுந்தாள்.

எத்தனை மோசமாக ஏமாற்றப்பட்டிருந்தாலும், சத்யனால் எந்தவித விபரீத முடிவுக்கும் போக முடியாது என்கிற நம்பிக்கை அவளுள் மெதுவே அரும்பியது.

எதற்கும் அறைக் கதவை உட்பக்கம் தாழிட்டுக் கொள்வது நல்லது என்கிற முன்யோசனையுடன்—அவள், சோபாக்களைக் கடந்து, டீபாய், டைனிங் டேபிளைப் புறக்கணித்து—அறை வாசல் பக்கம் நகர—

''மே ஐ கம் இன்?''

பதிலுக்குக் காத்திராமல் அந்த மனிதன் உள்ளே நுழைந்தான்.

நெஞ்சு ஒரு கணம் 'திக்'கென நின்றாலும் உடனேயே சமாளித்துக் கொள்கிறாள் அவள்.

சந்தேகமேயில்லை. சத்யனேதான்.

முன்பு தலை முடி அடர்த்தியாக இருக்கும். கன்னங்கள் சுத்தமாய் பசுமையோடு இருக்கும்.

இப்போது நேர் மாறாக முன் தலை வழுக்கை. கன்னங்களில் ஒரு வார தாடி... அழகாக கவனிக்கப்பட்டு... மீசைகூட ஒரு சீக்கிய இளைஞனைப்போல...

முன்னைக்கிப்போது நிறைய எடையை இழந்திருந்தான் அவன். கண்களில் மட்டும் தீவிரமான மினுக்கல்...

புன்னகை மாறாமல் வந்து, அவள் கை பற்றி குலுக்கினான் அவன்.

அப்படி அவன் கை குலுக்கும்போது அவன் அணிந்திருந்த கையுறையைக் கலவரத்துடன் பார்த்தாள் அவள்.

''ஹாய், ஹவ் ஆர் யூ...''

''.........''

''என்ன ஆச்சு...போன்லே ஒரே பாராட்டு மழையாப் பொழிஞ்சீங்க...நேரே வந்தா பேசவே மாட்டேங்கறீங்க?''

''.........''

அவள், இன்னமும் அவன் இரு கைகளிலும் மாட்டியிருந்த கையுறைகளையே உற்றுப் பார்க்கிறாள். இப்போது அவனும் அதைப் புரிந்துகொண்டு, கையுறைகளைக் கழற்றியபடியே கூறினான்.

''ஓ... நீங்க இத்தனை நாள் லண்டன், பாரீஸ், ரோம்னு இருந்தவங்க இல்லே... அங்கே எல்லாம் கிளவுஸ் போட்டுட்டு கொலை பண்ணுவாங்களோ...நானும் ஒண்ணு ரெண்டு இங்கிலீஷ் படத்துல பார்த்திருக்கேன். நேரில அதெல்லாம் சாத்தியமான விஷயமான்னு தெரியாது. எதுக்கும் உங்களுக்கு பயமா இருக்குன்னா கழட்டிடறேன். இங்கே பக்கத்து ரூம்லே வாஷ்பேசின்லே தண்ணி போகலையின்னு கம்ப்ளெயின்ட். பார்க்க வந்தேன்.''

''.. ....''

''உம். அப்புறம்?''

அவன், அவளைப் பார்த்து, அலட்சியமாய் தோளை குலுக்கிச் சிரித்தான்.

''நல்ல வசதியா இருக்காப்பல இருக்கு...''

''அது வந்து...''

''சேச்சே... இத்தனை வருஷங்களுக்கு அப்புறமா காரணங்களைத் தேடிட்டு, விளக்கம் சொல்லிட்டிருக்கறது எல்லாம் அபத்தம் மிஸ் மகிமா...''

அவன் அந்த 'மிஸ் ஸில் ஒரு அழுத்தம் கொடுத்தபடியே அவளை கீழ் கண்ணால் அளந்தான். அவளோ பதட்டத்தின் உச்சத்தில், சாயம் பூசப்பட்ட நீண்ட நகங்களைக் கடித்தாள்.

அவன், அந்த விசாலமான அறையை ஒட்டியிருந்த பிரத்யேகமான பார் பக்கம் போய் உயரமான இரண்டு கண்ணாடி தம்ளர்களில பொன்னிற திரவமும், சோடாவும், ஐஸ்கட்டிகளும் கலந்து எடுத்து வந்து அவள் முன் வைத்தான்.

''புளு லேபிள். உங்களுக்கு ரொம்பவும் பிடிச்சது மகிமா, எடுத்துக்குங்க. கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிட்டு பேசுவோம். எனி ஹவ், உங்க ஃபிரண்ட் அண்டு வெல் விஷர் மிஸ்டர் தேவேந்திரன் வர, இன்னும் நிறைய நேரமிருக்கு இல்லே?''

அவன், தன் கையிலிருந்த பானத்தை உயர்த்திப் பிடித்தான்.

''சியர்ஸ்...''

அவளோ, கையில் எடுத்த தம்ளரை உதட்டில் வைக்காமல், இன்னமும் பிரமித்து உட்கார்ந்திருந்தாள்.

''என்ன பார்க்கிறாப்பல... இருமல் மருந்துலகூட ஆல்கஹால் கலந்திருக்கும்னு, வீட்டுல கஷாயம் போட்டுத் தரச் சொல்லிக் குடிக்கிற மனுஷன் இப்படி ஒரே கல்ஃப்பா அடிக்கிறானேயின்னு பார்க்கறீங்களா... சொந்தக் கதை சோகக் கதைங்க. உங்களுக்கு ஞாபகம் இருக்கா? நீங்க என்னை விட்டுப் போற சமயத்துல உங்களுக்கு மூணு வயசுலக் குழந்தை இருந்தது. அதை எங்க அம்மாதான் அருமையாப் பார்த்துட்டிருந்தாங்க. குடும்ப மானம் சந்தி சிரிச்சதுக்கு அப்புறம், அவ வெளில தலைகாட்ட முடியாம செத்துட்டா. குழந்தைய என்னால ஆறு மாசத்துக்குமேல காப்பாத்த முடியலே. ஏக்கத்துலேயே செத்துப் போச்சு...''

அவன் இந்த இடத்தில் சிறிது நிறுத்தி, தலை குனிந்து செத்துப்போன தாய்க்கும், பிள்ளைக்கும் அஞ்சலி செலுத்துவதுபோல உட்கார்ந்திருந்தான்.

இப்போது மகிமாவின் கன்னங்களிலும் கண்ணீர்.

ஒவ்வொரு நாளும் அவள் தாமதித்து வரும்போதெல்லாம், அவளது கழுத்தைக் கட்டிக்கொண்டு தேம்பியக் குழந்தை...

''......ம்மா...ஏம்மா இத்தனை லேட்டு...''

''புஜ்ஜி கண்ணா...அம்மா உனக்கு பெரிய கரடி பொம்மை வாங்கி வந்திருக்கேனே...''

''ம்... ம்... எனக்கு பொம்மை வேணாம். நீதான் வேணும்...''

குழந்தை, எத்தனை அழகாக இருந்தான்? புதிய சிநேகமும், கண்மூடித்தனமான நாகரீகமும் சேர்ந்து—எல்லாவற்றையும் உதறி விட்டல்லவா கிளம்ப வைத்தது.

இத்தனை வருட மேல்மட்ட வாழ்க்கையில் ஏராளமான பணத்தைப் பார்க்க முடிந்ததே தவிர, இன்னொரு பிள்ளையைப் பார்க்க முடிந்ததா?



அவன் தோள்பட்டையைக் குலுக்கிக் கொண்டான்.

''இத்தனைக்கு அப்புறம், எனக்கும் வாழ்க்கையில ஏதாவது ஒரு மாறுதல் வேண்டாமா...படிச்ச படிப்புக்கு எங்கேயும் வேலை கிடைச்சிட்டு போறது. ஆனா, வேலை முடிஞ்சு வீட்டுக்குப் போனா... வீடா அது... யாருமே இல்லாத—வெய்யிலுக்கும், மழைக்கும் பாதுகாப்பா இருக்கற ஒரு கட்டிடத்தை, வீடுன்னு எப்படி சொல்ல முடியும்...அங்கே தனிமையில ஒரு சிநேகம் வேண்டாமா? இப்போதைக்கு மிஸ்டர் விஸ்கிதான் நம்ம பெஸ்ட் ஃபிரண்டு அநாவசியமா வேலை நேரத்துல இவரைத் தேடறதில்லே. இன்னிக்கு, இதோ இப்பகூட... ஏதோ பழைய நட்பை மறுபடியும் சந்திச்ச சந்தோஷம்தான்...''

''.........''

''என்ன, அ படியே வச்சிட்டிருக்கீங்க? ஓ... பில் ஏறிடுமேன்னு கவலைப்படறீங்களா...டோண்ட் ஒர்ரீ... இது என் கணக்கு! கல்யாணமாகி, நாம சந்தோஷமா வாழ்ந்த காலத்துல பைத்தியக்காரத்தனமா உங்களுக்கு பட்டுப்புடவை, பூ, தங்க வளையல், வாலாக் கடை அல்வான்னு என்னென்னவோ வாங்கித் தந்திருக்கேன். இப்பத்தான் உங்க டேஸ்ட்டுக்கு ஏத்த மாதிரி... சாப்பிட்டுப் பாருங்க அதுல ஒண்ணும் விஷம் கலக்கலே. வேணுமானா நான் குடிச்சுக் காட்டவா...''

அவள். அதற்குமேல் தம்ளரை கையில் வைத்திராமல் 'மளுக்'கெனக் குடித்தாள்.

அவன், வெகு இயல்பாய் அடுத்த சுற்றுக்கான பானத்தைக் கலந்து கொண்டுவந்து வைத்து மேலும், மேலும் பேசிக்கொண்டே போனான்.

ஏற்கனவே ஜோன்ஸ் மூலம் ஏமாற்றத்தின் அதல பாதாளத்திற்குத் தள்ளப்பட்டவள், இப்போது சத்யனை

சந்தித்த பயம் நீங்கி, குழந்தை இறந்த துக்கத்தில் மூழ்கி, இரண்டாவது சுற்றிலேயே தன் வசமிழந்து 'ஓ'வென அழத் தொடங்கிவிட்டாள்.

''என்னை மன்னிச்சிடுங்க... நான் செஞ்சது ரொம்பவும் அநியாயம். உங்களையும், குழந்தையையும் விட்டுட்டு, அமெரிக்கா போய் நானும் ஒண்ணும் சந்தோஷமா இல்லீங்க... படாத பாடு பட்டுட்டேன்... இப்பவும எனக்கு உங்களை வந்து பார்த்து, காலைப் பிடிச்சிட்டு கதறணும்னுதான் எண்ணம். ஆனா...ஆனா.. உங்களுக்கு என்மேல எத்தனை கோபம் இருக்கும்னு நினைச்சா...''

''த்ச்...த்ச்...அங்கேதான் நீ என்னைப் புரிஞ்சுக்கவே இல்லே. மகிமா... எப்பவுமே நான் உன்னை ஒரு குழந்தையாத்தான் நினைக்கிறேன். என்னமோ, நம்ம ரெண்டு பேருக்கும் சேர்ந்து வாழக் கொடுத்து வைக்கலே. சாப்பிடு மகிமா, கூச்சப்படாதே! இப்ப நாம ரெண்டு பேருமே ஒரே படகுலதான் போயிட்டிருக்கோம். இன்னும் கொஞ்சம் வறுத்த முந்திரி... இல்லே சிக்கன் ஃப்ரை... இன்னொரு லார்ஜ் போட்டுத் தரவா...''

''அய்யோ...நீங்க எத்தனை நல்லவர். நாம எப்படியெல்லாம் இருந்தோம்...''

''உனக்கு ஞாபகமிருக்கா மகிமா? உன்னை பிரசவத்துக்குகூட பாலக்காட்டுக்கு அனுப்பலே நான். கொட்டற மழையில, ஆட்டோ கிடைக்காம...கிடைச்ச ஆட்டோவும் மழைச் சகதியிலப் புதைய... உன்னை அப்படியே தூக்கிட்டுப் போனேன். நீ என் கழுத்தைக் கட்டிட்டு... வலியில என் முதுகைப் பிறாண்டி... ரத்தம் கசிஞ்சு... இன்னும்கூட அந்த வடு இருக்கு மகிமா... தினமும அந்த வடுவைத் தடவிப் பார்ப்பேன். உன்னையும் புஜ்ஜியையும் தொட்டுத் தடவற மாதிரி பரவசமா இருக்கும்...''

''சொல்லாதீங்க—சொல்லாதீங்க. நான் எவ்வளவு கொடூரமா நடந்துட்டேன்னு...இங்கே நீங்க மறுபடியும் என்னை...''

மகிமாவுக்கு வார்த்தைகள் தடுமாறின. அது அவளுக்கே வியப்பாக இருந்தது.

சாதாரணமாய் இப்படி இத்தனை சீக்கிரத்தில் அவள் வசமிழப்பவள் இல்லை.

எத்தனை நாள்—இரவு, பகல் பாராமல் மதுவில் மிதந்திருக்கிறாள். அப்போதுகூட அவளுள் ஒருவித ஜாக்கிரதையுணர்வு விழித்துக்கொண்டே இருக்கும்.

'நீ தனி மனுஷி. மயங்கினால், உன்னை காலில் போட்டு மிதிக்க சுற்றிலும் உள்ள கும்பல் தயாராக இருக்கிறது...'

இப்படியொரு குரல்—அவளுள் சதா எச்சரித்துக் கொண்டே இருக்குமே...

இப்போது அதெல்லாம் எங்கே போயிற்று என்றே தெரியவில்லை.

''என்னை நீங்க ஏத்துக்கணும். இதோ பாருங்க, காலைப் பிடிச்சிட்டு கெஞ்சறேன். ப்ளீஸ் ஃபர்கிவ் மீ...''

அவள் அப்படியே தரையில விழுந்து கும்பிட்டு, சத்யனின் பாதங்களைப் பிடித்துக்கொள்ள—

அவனோ, திருப்தியுடன அவளைப் பார்த்தபடி, மீண்டும் கையுறைகளை அணிந்துகொண்டான். பேண்ட் பாக்கெட்டில் பத்திரப் படுத்தியிருந்த நைலான் கயிறை எடுத்து—'சட்'டென அவள் கழுத்தில் மாலையாகப் போட்டு...இறுக்க்க்க்கினான்.

# 10

புன்னை மரக் குயிலை
பூமிக்கு காண்டு வந்தேன்
பூமியெல்லாம் இசையாச்சு
புன்னை மரம் விறகாச்சு

"கொஞ்சம் கஷ்டம்தான்..."

உதட்டைப் பிதுக்குகிறார் லேடி டாக்டர்.

மதுராவோ பேயறைந்தாற்போல உட்கார்ந்திருக்கிறாள்.

'கடவுளே, இது என்ன சோதனை?'

தேவேந்திரனுக்கு இது ஒன்றும் அத்தனை வேதனையான விஷயமில்லை என்றே தோன்றுகிறது. உண்மையில் இதே விஷயத்தை டாக்டர் வேறொரு சந்தர்ப்பத்தில் சொல்லியிருந்தால்—அன்றிரவே டாக்டருக்கு நட்சத்திர ஹோட்டலில் விருந்து வைத்திருப்பார். நண்பர்களைக் கூப்பிட்டு இந்த சந்தோஷச் சமாச்சாரத்தைச் சொல்லி, பலூன் கட்டி, பட்டாசு கொளுத்திக் கொண்டாடியிருப்பார்.

இப்பொழுதும் அவர், நாளைக்காவது இந்த வைபவத்தைக் கொண்டாட வேண்டும் என்றே நினைத்திருக்கிறார். டாக்டர் யாருடனோ தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தபோது, மனைவியின் காதோடு சொல்கிறார்.



"இப்ப எந்தக் கப்பல் முழுகிப் போச்சுன்னு இப்படி தவிக்கிறே மகிமா! டாக்டர் நல்ல சேதியைத்தானே சொல்றார். என்ன, ரசிகாவுக்குப் பத்து வயசா இருக்கறப்பவே பொறந்திருக்—"

"வாயை மூடுங்க. வெளில தெரிஞ்சா, மானம் போயிடும். இப்பவே எனக்கு நாக்கைப் பிடுங்கிட்டு சாகலாம்போல இருக்கு"

"அதான் எதுக்காகன்னு கேட்கறேன். நாம என்ன தப்பு வழியிலப் போயா—பிள்ளை பெத்துக்கறோம்? புருஷன் பெண்டாட்டி குழந்தை பெத்துக்கறதுல என்ன தப்பு? பார்க்கப் போனா இது பெருமைப்பட வேண்டிய விஷயமில்லையா... எத்தனை வருஷமானாலும் நாம ரெண்டு பேரும் இன்னமும் இளமையா இருக்கறதுனாலே தானே இது சாத்தியமாச்சு. என் சினேகிதன்கள்கிட்ட சொன்னா, அவனவன் வயிறெரிஞ்சுப் புலம்புவானுங்க."

மதுராவனால் டாக்டரையும் எதிரில் வைத்துக் கொண்டு பேச முடியவில்லை. ஆனால் அவர் பார்க்காத சமயத்தில் பல்லைக் கடித்து, தலையில் அடித்துக் கொண்டாள்.

"இத்தனை இக்கட்டிலும் இவரால் எப்படி சின்னக் குழந்தை போல பேச முடிகிறது."

இது அவளின் ஆத்திரம் கலந்த நினைப்பு.

தேவேந்திரனோ— வேறுவித அவஸ்தையில்...

"ஐயோ... இந்நேரம் மகிமா என்னைத் திட்டிட்டிருப்பா...'

"ஒரு வேளை வீட்டுக்கு போன் செஞ்சிருப்பாளோ... ஆனா, வீட்டுலதான் யாருமே இல்லையே. எல்லாரும் 'வெட்டிங்டே'யைக் கொண்டாட ஹோட்டலுக்குப் போயிருப்பாங்க. எனக்குதான் இப்ப ஹோட்டலும் இல்லே, மகிமாவும் இல்லே!"

''இத்தனை நாளும் இந்த மகிமா எங்கே இருந்தா! என் டெலிபோன் நம்பரெல்லாம்கூட மாறியிருக்கு. எப்படி கண்டு பிடிச்சா!''

''எத்தனையோ பெரிய விஷயங்களை எல்லாம் விரல் சொடுக்கற நேரத்துக்குள்ள செஞ்சு முடிக்கிறவளாச்சே! அவளாலே முடியாத காரியமா!''

அவர் நினைப்பு எங்கேயோ சுற்றிக் கொண்டிருக்க, மதுரா அவரதுத் தோள் பட்டையில் மெள்ள இடித்தாள்.

''என்ன யோசனை... டாக்டர் கூப்பிடறார்.''

தேவேந்திரன் நிமிர்ந்தார்.

''என்ன மிஸ்டர் தேவேந்திரன். மூணு மாசத்துல அபார்ட் செய்யறதுங்கறது ரொம்பவும் ரிஸ்க். அதுலேயும் இத்தனை வயசுக்கு மேல, பேசாம விட்டுடலாம். இன்னும் ஏழு மாசத்துல ஒரு குழந்தையப் பெத்தவுடனே ஆபரேஷன் செஞ்சுக்கலாம்.''

மதுரா கலக்கத்துடன் கணவனைப் பார்த்தாள்.

''எனக்குமே அதுதான் சரியின்னு தோணறது மதுரா. எதுக்காக அநாவசிய சிக்கலை இழுத்து விட்டுக்கணும். அபார்ஷன்— அது இதுன்னு போய், அப்புறம் உன் உயிருக்கே ஏதாவது ஆயிடப்போறது. அதுக்கென்ன, வீட்டுல பசங்ககிட்ட நான் எப்படி சொல்லணுமோ அப்படி சொல்லிக்கறேன்.''

அவர், உடனே எழுந்து டாக்டரைப் பார்த்து கை குவித்தார்.

மதுராவும் மெள்ள எழுந்து, அவரைப் பின் தொடர்ந்து காரிலேற, அவரோ, இறக்கையில்லாத குறையாகப் பறந்தார்.

''சரி மதுரா! உன்னை— நம்ம பையன் பார்ட்டி கொடுக்கற ஹோட்டல்லே இறக்கிவிடறேன். நான் இப்ப அங்கே வந்தா வையாபுரி பிடிச்சுக்குவான். எனக்கு வேற



ஒரு முக்கியமான வேலை இருக்கு. அமெரிக்காவுல இருந்து பெரிய பிஸினஸ் மேன் வந்திருக்கான். அவனைப் போய் பார்த்துட்டு, ராத்திரி பன்னெண்டு மணிக்குள்ள வந்து சேர்ந்துடுவேன்.''

''அப்ப இதுக்கு என்னதான் செய்யறது.''

அவள் வயிற்றைத் தொட்டுக் காண்பித்தாள்.

''இருக்கட்டும். கடவுள் கொடுத்தது. நமக்கு என்ன சொத்து இல்லையா? சுகமில்லையா! கலைக்க வேண்டாம்.''

''கடவுள் எங்கே கொடுத்தார். இத்தனை வயசுக்கும் சிறுபிள்ளைத்தனமா நடந்துட்டதுமில்லாம, இப்படி கொஞ்சம்கூடப் பொறுப்பே இல்லாம... ச்சீ! பசங்க முகத்துல நான் எப்படி முழிப்பேன்? எனக்கு இது வேண்டாங்க! என்ன பண்ணுவீங்களோ தெரியாது? நாளைக்கு இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு கட்டியே ஆகணும்.''

சரி. இதையே நினைச்சு கவலைப்பட்டுட்டு இருக்காதே! நாளைக்கு பார்ப்போம்.''

ஹோட்டல் வாசலில் மனசேயில்லாமல் இறங்கினாள் மதுரா. அடுத்த நிமிஷமே— காரை முழு வேகத்தில் கிளப்பினார் தேவேந்திரன்.

நட்சத்திர ஓட்டலில் எங்கே பார்த்தாலும் தெரிந்த முகங்கள்.

வாசலில் ஆரம்பித்து லிஃப்டில் ஏறி ஐந்தாவது மாடிக்குப் போகும் வரையில்—

''அடடே! மிஸ்டர் தேவேந்திரன். எங்கே இந்தப் பக்கம் தனியா வர்றீங்க! எப்பவும் நாலஞ்சு பியூட்டி குவீன்ஸோடத்தானே வருவீங்க.''

''அட என்னப்பா...நீங்க எல்லாரும் இது மாதிரி பேசியே இப்ப எல்லாம் என்னைக் கண்டா— சின்னக் குழந்தை கூட ஒதுங்கிப்போகுது.''

''என்ன மிஸ்டர் தேவேந்தர். புதுசா யாராவது கெஸ்ட் வந்திருக்காப்பலேயா.''

''அமெரிக்காவுல இருந்து ஒரு பிஸினஸ் மேன்.''

''பிஸ்னஸ் மேன்னா! உமன்னா?''

''மேன் தான்.''

''தேலூ... நீயா? பார்த்தியா! இங்கே பார்ட்டி இருக்குன்னு சொல்லலவே இல்லையே நீ. முந்தியெல்லாம் ஒரு சின்ன பார்ட்டி, கொண்டாட்டம்னாலும் கூப்பிடுவே. இப்ப ரொம்வும் மாறிட்டே தேலூ.''

''அட ஏம்பா... நீ வேற—பார்ட்டிக்கு வரல்லே.

''பின்னே! பார்ட்டியே அங்கே வந்திருக்கா? என்ன வயசு... எந்த ஊரு?''

''பேசாதே... ஏதோ அழகை ரசிப்பேனே தவிர, உன்னை மாதிரி அலையமாட்டேன். தெரிஞ்சுக்க.''

எத்தனைப்பேர்... எத்தனை விதமான சிநேகம்... ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமாகச் சொல்லி.

அவர் வரவேற்பாளப் பெண்ணைக்கூட கவனிக்கவில்லை.

அவரும் தனது பலவிதமான நண்பர்களுக்கு பலவிதமான விருந்துகளை வைத்திருக்கிறார். ஆனாலும்— தனது சிறப்பு விருந்தினருக்காக— அறையும் இன்ன பிற வசதிகளையும் செய்து கொடுத்திருக்கிறாரே தவிர, தானே ஒரு பெண்ணைத் தேடி வந்ததே இல்லை.

ஏற்கனவே நேரமாகிவிட்ட பதைப்பு... போதாக் குறைக்கு எல்லார் கண்களிலும் இப்படி அநியாயமாய் சிக்குகிறோமே என்கிற வெட்கம்... எல்லாமாகச் சேர்ந்து அவரை நிஜத்தைச் சொல்லவிடாமல் தடுத்தது.



ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பதிலைச் சொல்லி சமாளித்து— மகிமாவின் அறை காலிங் பெல்லைத் தொடப்போனவர்— அப்போதுதான் கதவு ஒருக்களித்து திறந்திருந்ததை கவனிக்கிறார்.

திறந்திருந்தாலும் அனுமதியில்லாமல் உள்ளே நுழைநது பழக்கமில்லையாதலால் காலிங் பெல்லை அழுத்துகிறார்.

மணியடிப்பது காதில் விழுந்தும் அவள் எப்படி வெளியே வராமல் இருக்கிறாள்.

ஒருவேளை கோபமோ! உள்ளே போய் வலியச் சமாதானம் செய்ய வர வேண்டும் என்று எதிர் பார்க்கிறானோ?

அவர் தயங்கித் தயங்கி உள்ளே வர, இரட்டை அறைகளில் முன் அறை சோபாவில் நளினமாய், தலையில் கை வைத்துப் படுத்திருந்த மகிமாவைக் கண்டதும், 'குப்'பென சந்தோஷம் எகிறுகிறது அவருள்.

''ஏய்! என்னை வரச்சொல்லிட்டு இப்படியா காடாந்தகாரமாத் தூங்கறது...''

அவள் தலையில் செல்லமாய் குட்ட வேண்டும் போலிருந்த ஆவலை, அவர் மிகச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார்.

''பாவம். அசதி போலிருக்கு. தூங்கட்டும்.''

அப்போதுதான் டீபாயின் மீதிருந்த— விஸ்கி பாட்டிலையும், பக்கத்தில் இருந்த கண்ணாடித் தம்ளரையும் பார்க்கிறார்.

''ஒரு வேளை நிறைய குடிச்சிருக்காளோ.''

அவர், டீபாயின் மீதிருந்த பத்திரிகை ஒன்றை கையிலெடுத்துக் கொண்டு மகிமாவின் எதிரில் உட்கார்ந்தார்.

''கண்கள் பத்திரிகையின் மீதிருந்தாலும், கவனமென்னவோ மகிமாவின் மீதுதான்.

இத்தனை வருட இடைவெளியில்— மகிமாவின் முகமும், உருவமும் நிறையவே மாறியிருந்தது. கன்னத்தில் மெல்லிய சதை உப்பல். கவர்ச்சிகரமான முறையில் படுத்திருந்தாலும், அதை ரசிக்க முடியாதபடி இடுப்பில் விழுந்திருந்த மடிப்பு.

ஆனாலும்... அனாலும்... அவளின் அழகு இதனாலெல்லாம் அதிகம் சிதைக்கப்படவில்லை என்றே தோன்றுகிறது. அவருக்கு.

நேரம் செல்லச் செல்ல— அவள் எழுந்திருக்காததால் அவருள் மெல்லிய தவிப்பு.

மதராஸிடம் இரவு பனிரெண்டு மணிக்குள் வருவதாகச் சொல்லியிருக்கிறாரே.

மணி— இப்போதே பதினொன்றரை.

இனி இவள் எப்பொழுது எழுந்திருந்து, என்ன பேசுவது...

அவர் அதற்குமேலும் அங்கே காத்திருக்கப் பொறுமையின்றி, கையிலிருந்த பத்திரிகையைச் சுருட்டி, அதனால் அவளதுத் தோளில் தட்ட—

''மகிமா! மகிமா! என்ன இப்படி ஒரேயடியா தூங்கறே! வேக் அப், எழுந்திரும்மா...''

அவள் இம்மியும் நகராமல் அப்படியே கிடக்க, முதன் முறையாய் ஒரு கவலை.''

''ஒருவேளை விஸ்கி அளவுக்கு மிஞ்சிப்போய் விட்டதோ...''



''என்னடா இது அவஸ்தை.''

அவர், கையிலிருந்த செய்தித்தாளைத் தூக்கி கடாசிவிட்டு, மகிமாவின் தோள்பட்டையைப் பிடித்து மெதுவே அசைக்கிறார்.

''மகிமா...''

அவ்வளவுதான். அவள் தலை காம்பொடிந்த தாமரை மொட்டு மாதிரி சரிந்தது.

''ஓ...வ்... மை காட்!''

அவர் அலறியபடி பின் வாங்கினார்.

ஒரு கணம்— மகிமாவையே வெறித்துப் பார்த்தார்.

இது நேரம் வரையில் கன்னத்துக்குத் தாங்கலாக இருநத கரம், 'தொப்'பென விழுந்துவிட்டதால், வலது புற உதட்டு முனையிலிருந்து கழுத்து வரையில் சிவப்பு கோடு புறப்பட்டு, ஓடியிருந்தது.

''ஐய்யோ! மகிமா... என்ன ஆச்சு! கொலையா கொலை...கடவுளே!''

அவர். அப்போதுதான் தன்னை மறந்து ஒரு தவறைச் செய்தார்.

வெகு நாட்களுக்குப் பிறகு, தன்னைப் பார்க்க வந்த சினேகிதி, இப்படி அநியாயமாய் போய்விட்டாளே என்கிற வருத்தத்தில், அப்படியே அவளை அள்ளி தரையில் கிடத்தி, தன் மடியில் அவளதுத் தலையை வைத்து, மூச்சு இருக்கிறதா—மார்பு துடிக்கிறதா என்று பார்த்தார்.

அந்த நேரம் பார்த்து—

''மே ஐ கம் இன் மேடம்...''

தேவேந்திரன் தலையை உயர்த்த எதிரில் ஹோட்டல் சிப்பந்தி.

''பின்னர் எதுவும் சொல்லலையே மேடம்! அதான் கேட்டுட்டு, ஆ! என்ன சார் இது... மேடமுக்கு என்ன ஆச்சு?''

''தெரியலேப்பா! தூங்கறாங்கன்னு உட்கார்ந்திருந்தேன்! இப்பத்தான் நேரமாச்சேயின்னு எழுப்பினேன். போயிட்டா!''

''என்ன சொல்றீங்க சார்?''

''போயிட்டாங்க. ஷி இஸ் நோ மோர்.''

''அய்யோ! எப்படி சார்...சாயந்திரம் நல்லாத்தானே இருந்தாங்க. அதுக்குள்ளே என்ன ஆச்சு! சார்... இருங்க எனக்கு பயமா இருக்குது. நான் ஹோட்டல் மேனேஜருக்கு போன் செஞ்சு வரவழைக்கிறேன்.''

''கூப்பிடுப்பா!''

தேவேந்திரன் வெகு யதார்த்தமாய் சொன்னார். அப்போதும்கூட அவர் மூளையில் ஒன்று உறைக்கவில்லை.

தான் ஆபத்தான கட்டத்தில் இருக்கிறோம் என்பது தான் அது.

21057
3775040

# 11

அன்பே
கட்டுப் படுத்திக் கொண்டாலும்
கண்ணீர் பாய்ந்து விடும்
கவிதைகளில...
நீ படிக்காவிட்டாலும்
தொலைகிறது
தொட்டுத் துடை.

தூக்கம் வரவில்லை மதுராவுக்கு. எப்படி வரும். பனிரெண்டு மணிக்கு திரும்பி வரவேண்டிய மனிதர் இன்னும் வரவில்லை என்றால்...

தூக்கம் எப்படி வரும். இயல்பாகவே—தேவேந்திரனால் ஏற்படும் கவலைகள் ஒருபுறம் இருக்க—இப்பொழுது வயிற்றுப் பிரச்னையும் சேர்ந்துகொண்டு அவளைப் படாத பாடு படுத்துகிறது.

''வெட்டிங்டே! வருஷத்துக்கு ஒரு தடவை எல்லாருமா சேர்ந்து கொஞ்ச நேரம் ஜாலியா இருக்கலாம்னா! நீங்க ரெண்டுபேரும் எங்கேம்மா போயிட்டீங்க— அப்பா எங்கே?''

சின்னவன், மற்றவர்களுக்கு கேட்காதவாறு, தணிந்த குரலில் உறுமினான். அவன் மனைவியோ? தன் கோபத்தை முகத்திலேயே காட்டினான்.

''எங்கப்பா வந்திருக்கார். அவர் ஒரு அப்பாவி. வந்ததுலேயிருந்து வாய் ஓயாம 'சம்பந்தி எங்கே, சம்பந்தி எங்கே'—யின்னு கேட்டுட்டுடே இருக்கார். நீங்க போய் சொல்லுங்க— 'அவருக்கு ஃபேமிலி ஃபங்ஷன்'லே எல்லாம் அவ்வளவு ஈடுபாடு இல்லே. பிசினஸ்தான் முக்கியம்னு.''

இப்படி, மதுராவின் எதிரிலேயே தன் கணவனிடம் கடுப்படித்தாள்.

பெரியவன், யாருக்கும் தெரியாமல் அம்மாவின் பக்கத்தில் வந்து உட்கார்ந்து, நிதானமாய் கேட்டான்.

''என்னம்மா, வழக்கப்படிதானே. இப்ப எவளைப் பிடிச்சிருக்காரு.''

''அதில்லேடா வந்து... எனக்கு கொஞ்சம் உடம்பு சரியில்லாம இருந்ததா... என்கூடத்தான் ஆஸ்பத்திரி வரைக்கும் வந்தார்.''

''அப்புறம்? அங்கே என்ன லேடி டாக்டரா... உடனே அவ பின்னாடியே போயிருப்பாரே! நீ வேணா பாரு— இப்ப அந்த ஆஸ்பிடலுக்கு போன் பண்ணிப் பாரு... அங்கேதான் இருப்பார்! கன்றாவி.''

ரசிகா ஓடி வந்து அம்மாவின் கரத்தை அழுத்தமாய் பிடித்துக்கொண்டாள். மகளின் அந்த ஸ்பரிசமே மதுராவின் கண்களைக் கலங்கச் செய்வதாய்...

''என்னம்மா ஆச்சு. உடம்பு சரியில்லையா.''

''......''

''அண்ணன்களும், அண்ணிகளும் அப்பாவைப் பேசாதப் பேச்சில்லே. மத்த நாளுலே எப்படியோ... இன்னிக்கு ஒரு நாளாவது எல்லாரோடும் சேர்ந்து இருக்கப்படாதா... உன்னைக் கொண்டு வந்து இறக்கிட்டு எங்கேம்மா போனார்.''

மதுரா— மற்ற நாளாயிருந்தால்— இவர்களோடு சேர்ந்து தானும் கணவனை ஒரு பாட்டம் திட்டித் தீர்த்திருப்பாள்.

'இப்போது அவனுக்கே— தேவேந்திரனை நினைக்கையில் பாவமாக இருந்தது.

ஏதோ அவசர வேலையை வைத்துக்கொண்டு, நடுவில் தனக்காக டாக்டரிடமும் வந்து விட்டு...

'இப்படித்தான் அவர் எதைச் செய்தாலும் கடைசியில் கெட்ட பெயர் வாங்கிக் கொள்ளும்படியாகி விடுகிறது.'

வையாபுரியிடம் மட்டும் அவளே போய் பேசினாள்.

''பாவம் உங்க சினேகிதர். ஏதோ முக்கியமான பிஸினஸ் விஷயமா—மீட்டிங் இருக்குபோல... என்னோட டாக்டர் வீட்டுக்கு வந்ததாலே எல்லாமே லேட்டாப் போச்சு!''

''டாக்டர் வீடா—உடம்புக்கு என்ன தங்கச்சி!''

''உடம்புக்கென்ன... தலைவலி... தலைசுத்தல்... டாக்டர் பிளட் பிரஷர் அதிகமாயிருக்குன்னு சொல்றாங்க.

''உனக்கு உடம்பு இப்படியிருக்கறப்ப அவன் உன்னை ஹோட்டல் வாசலோடு இறக்கி விட்டுட்டுப் போயிருக்கக் கூடாது ரொம்ப தப்பு. அப்படி என்ன பொல்லாத பிஸினஸ்... எனக்குத் தெரியாத பிஸினஸ்.''

''அதில்லே... ஃபாரின்லே இருந்து அஞ்சாறு பேர் வந்திருக்காங்க. அவங்களை ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்லே காக்க வச்சிட்டு...''

''அப்படியின்னு இவன் சொன்னானா... நீ கேட்டுட்டு வந்தியா? நல்ல பொண்ணும்மா நீ! சரி, சரி... சந்தோஷமான நேரத்துல உன் மனசை சங்கடப்படுத்துவானேன்? இந்தா சாப்பிட வா!'

''இருக்கட்டும். எனக்குப் பசியே இல்லே. காலையில சாப்பிட்டதே...''

வையாபுரி இவளது வார்த்தைகளை வேறு விதமாக எடுத்துக்கொண்டு விட்டார்.

நேரே மதுராவின் மருமகள்களிடம் சென்றார்.

''ஏம்மா, உங்களுக்கெல்லாம் கொஞ்சமாவது மாமியார்கிட்ட மரியாதை இருக்கா... பாவம், அவ பாட்டுக்கு டாக்டர் வீட்டுக்குப் போயிட்டு— முடியாம இருந்தாலும்— குழந்தைங்களோட சந்தோஷத்தைக் கெடுத்துடக் கூடாதுன்னு சிரமப்பட்டு வந்திருக்கா... கூப்பிட்டு வச்சு, பரிமாறுவீங்களா, அதை விட்டு...''

அவ்வளவுதான். மகன்களும் மருமகள்களும் ஓடி வந்து உபசரித்த உபசரிப்பில்— மதுரா திணறி விட்டாள்

என்னதான் அப்பா வரவில்லையே என்கிற கோபம் ஒரு பக்கம் இருந்தாலும் அம்மாவிடம் அவர்களுக்கு உள்ள பாசமும் பரிவும் எக்கச்சக்கம்.

''அம்மா... பிரியாணி சாப்பிடேன்.''

''ஐயோ வேண்டாம். ஒரு தம்ளர் மோர் கொடுக்கச் சொல்லு.''

''மோரா— நல்லாயிருக்கு... ரசிகா, அம்மாவுக்கு ஒரு ஐஸ்க்ரீம் ஆர்டர் செய்.''

குழந்தைகளின் அன்புத் தொல்லையில் அகப்பட்டு அவள் திண்டாடுவதை எட்ட இருந்து பார்த்து ரசித்தார் வையாபுரி.

அதே சமயம்— கை கழுவப் போனவள், ஓசையின்றி— சாப்பிட்டதை எல்லாம் வாந்தி எடுப்பதையும் கவனித்து விட்டார்.



''ஐயய்யோ. என்னம்மா ஆச்சு... நான் போய் லலித்தையோ, தீபக்கையோ கூப்பிடட்டுமா...''

''அதெல்லாம் வேண்டாம். யாரையும் கூப்பிட்டு கலவரப்படுத்த வேண்டாம். எலலாம் நாளைக்கு சரியாப் போயிடும்.''

வையாபுரி லேசுபட்டவரில்லை. அவர் வரையில் எத்தனை தங்கைகளுக்குக் கல்யாணம் செய்து கொடுத்து, எத்தனை பிரசவங்களைப் பார்த்திருக்கிறார்.

சாதாரண பித்த வாந்திக்கும்—பிள்ளை வாந்திக்கும் வித்தியாசம் தெரியாதவரா அவர்?

ஆனாலும் இதை எப்படிக் கேட்பது?

நண்பன் இருந்திருந்தால் முதுகில் அறைந்து விசாரித்திருப்பார்.

இப்பொழுது எப்படி...

என்னதான் மதுரா சொந்த சகோதரிக்கும் மேலாகப் பழகினாலும், இது விஷயம் பற்றி எப்படிப் பேசுவது?

மேலும், இந்த வயதில் இது சாத்தியமா என்கிற சந்தேகம் வேறு.

அவர், மதுராவின் அருகில் வந்து பரிவாகச் சொன்னார்.

''அம்மாடீ, உன்னைச் சாப்பிடச் சொன்னதே தப்பாப் போச்சு. முதல்லே வண்டிய எடுத்து படு. வீட்டுக்குப் போவோம். வா, அவங்க எல்லாரும் வரப்போ வரட்டும்.'

சொன்னபடி மதுராவை வீட்டில் கொண்டுவந்து விட்டுவிட்டுப் போனார் அவர்.

''காலையில உன் புருஷனை எங்கேயும் போக வேண்டாம்னு சொல்லு. நான் வந்து அவனோட கொஞ்சம் பேசணும்.''

எங்கே... விளையாட்டு போல காத்திருந்து, காத்திருந்து விடிகாலை நாலரை மணி வரையில் விழித்திருந்ததுதான் மிச்சம்.

மதுரா எப்பொழுது கண்ணயர்ந்தாளோ

டெலிபோன் மணி ஒலித்ததும் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்திருக்கிறாள்.

என்னவோ சொல்லத் தெரியாத பயத்தில் உடம்பு நடுங்குகிறது அவளுக்கு.

சொன்ன நேரத்துக்கு மேலானால் தேவேந்திரன் எங்கேயிருந்தாலும் அவளுக்கு போன் செய்து, விவரம் சொல்லத் தவறமாட்டார்.

முதல் நாள் இரவிலிருந்து விடிகாலை வரையில் தொலைபேசி ஒலிக்காததே அவளுள் இன்னும் பயத்தை ஏற்படுத்தியிருந்தது.

குழந்தைகளுக்கென்ன... அப்பா வீட்டுக்கு வந்தாரா—இல்லையா என்பதுகூடத் தெரியாது.

அவள் தயங்கியபடியே ரிசீவரை எடுத்துக் காதில் வைக்க—

''ஹலோ... மிஸஸ் தேவேந்திரன் இருக்காங்களா?''

''நான்தான் பேசறேன்.''

''நாங்க இங்கே மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷன்லேயிருந்து பேசறோம். பயப்படாதீங்க... உங்க வீட்டுக்காரர் நல்லபடியாத்தான் இருக்கார். ஆனா, ஒரு மர்டர் விஷயமா அவரை அரெஸ்ட் செஞ்சிருக்கோம்.''



''எ... எ... என்னது... கொலையா? அய்யோ! அய்யய்யோ.''

''இந்தாங்கம்மா... கொஞ்சம் கத்தாமக் கொள்ளாம விஷயத்தைக் கேளுங்க. இல்லே, வீட்டுல யாராவது ஆம்பிளைங்க இருந்தா கூப்பிடுங்க ஹலோ... ஹலோ...''

எதிர்முனையில் குரல் ஒலித்துக்கொண்டே இருக்க—மதுரா தடாலென வேரற்ற கொடிபோல விழுந்தாள்.

சத்தம் கேட்டு முதலில் ஓடி வந்தவள் ரசிகாதான் அவள்தான் அம்மாவின் முகத்தில் தண்ணீர் தெளித்து, ஆசுவாசப்படுத்தி, மெள்ள மெள்ள தாய் சொன்னதைப் புரிந்துகொண்டு, பதற்றத்துடன் அண்ணன்களை எழுப்பி—

அதற்குள் அன்றைய தமிழ் தினசரிகளில் கொட்டை எழுத்தில் விவரம் வெளியாகி.

பிரபல தொழிலதிபர் தேவேந்திரன் கைது.

ஹோட்டல் அறையில் பெண் கொலை.

பக்கம் பக்கமாய் செய்தி வெளியாகி வையாபுரி பறந்தடித்துக்கொண்டு அந்த பங்களாவுக்குள் நுழைந்தபோது காலை மணி ஏழு

அதுவரையில் யாருக்கும் என்ன செய்வதென்றே புரியாத நிலை.

தீபக் ஒரு பக்கமும், லலித் ஒரு பக்கமும் கையைப் பிசைந்தபடி கத்திக்கொண்டிருந்தார்கள்.

ரசிகா பயந்து போய்— அம்மாவின் பக்கத்தில் ஒட்டியபடி—

''எனக்கு அப்பவே தெரியும். இவர் இது மாதிரி ஒரு விவகாரத்துல மாட்டிக்கப் போறாருன்னு.''

''ஏம்மா, பிஸினஸ் விஷயமா பேசப் போனாரா... செத்துப் போனவ பேரு போட்டிருக்காங்க பேப்பர்லே... யாரு தெரியுமா... மகிமா.''

''அந்தக் கடங்காரியப் பார்க்கத்தான் பெத்த பிள்ளையோட 'வெட்டிங் டே'யைக் கூட ஒதுக்கிட்டு ஓடினாரா... அம்மா, இந்த மனுஷரோட எப்படிம்மா குடித்தனம் செஞ்சு, எங்களைப் பெத்தே.''

''அதை விடுடா. கல்யாணத்துக்கு ஒரு பொண்ணு இருக்கே. நாம இப்படி செய்யறதாலே நாளைக்கு அந்தப் பொண்ணோட நிலைமை என்னவாகும்னு கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்திருப்பாரா இவர்?''

அண்ணன்கள் போட்ட கூச்சலில் ரசிகா பயந்து போய், 'ஓ'வென அழ—

வையாபுரி தான் வந்ததும் வராததுமால் ஒரு அதட்டல் போட்டு அவர்களை அடக்கினார்.

''ஏண்டா டேய்... கொஞ்சம் விட்டா, இந்தக் கொலையை செஞ்சதே எங்க அப்பாதான்னு நீங்களே கோர்ட்டு படியேறி சொல்லிடுவீங்க போல இருக்கே... ஏற்கனவே உங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லே. இந்த நிலையிலப் போய் எதைப் பேசறது... எதைப் பேசக் கூடாதுன்னு கூடவா தெரியலே.''

''பின்னே என்ன அங்கிள்...''

''முதல்லே நம்ம வக்கீலைக் கூப்பிடுங்க. நான் அவரோடப் பேசறேன். நீங்க ரெண்டுபேரும் குறுக்கே வாயைத் திறக்காம, என்கூட வாங்க போதும். எப்படியும்



வக்கீலை வச்சிட்டு அப்பாவை ஜாமீன்லே வெளில எடுக்க முடியும்னு நம்பறேன்... அதுக்கு அப்புறம் மிச்சத்தைப் பார்ப்போம்!''

இது நேரம் வரையில் பிரக்ஞையற்று கிடந்த மதுரா— இப்பொழுது ஓவென அலறுகிறாள்.

''அவர் இந்தக் கொலைய செய்யல்லே... எனக்குத் தெரியும். அவர் ஒரு புழு பூச்சிக்குக்கூட துரோகம் செய்ய மாட்டார். அவரை நான் பார்க்கணும், பார்க்கணும்.'

அவள் முகத்திலும், நெஞ்சிலும் அடித்துக்கொண்டு அழ, வையாபுரி மட்டுமின்றி அத்தனை பேருமே பிரமித்து நிற்கிறார்கள்.

# 12

நதாம் ஓய்கிறது
மீட்ட வா...
நரம்பின் அதிர்வு
தீர்வதன் முன்

தேவேந்திரன், நிலைகுலைந்து போய் உட்கார்ந்திருந்தார்.

இப்படியொரு இக்கட்டில் வந்து மாட்டுவோம் என்று அவர் எதிர்பார்க்கவே இல்லையே.

எல்லாமே கனவுமாதிரி இருந்தது. மகிமா அவருக்கு போன் செய்து பேசியதும்... அவர், மதுராவை அந்த நிலையில்— ஹோட்டல் வாசலில் இறக்கிவிட்டு வந்ததும்,

அநியாயம்...

மகிமாவை, இந்த நிலையில் பார்ப்பதற்காகவா அவர் விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்தார்?

முகத்தில் முத்து முத்தான வியர்வையுடன் அவர் இன்ஸ்பெக்டரைப் பார்த்தார்.

இன்ஸ்பெக்டரை அசப்பில் பார்த்தால் அவரது மகன் தீபக்கின் சாயலில் இருந்தான். பார்வையில் இருக்கும் குழந்தைத்தனத்தை மறைப்பதற்காகவோ என்னவோ— பெரிய மீசை, கழுத்தோடு ஒட்ட வெட்டிய முடி, பசுமை பளபளக்கும் கன்னம்.



வார்த்தைகள் மிகச் சிக்கனமாக இருந்தன. அதே சமயம்— தேவேந்திரன் ஒரு பெரிய தொழிலதிபர் என்பதும் அவருக்குத் தெரிந்திருக்க வேண்டும். மரியாதையாகவே நடத்தினார்.

"எப்ப சார் வந்தீங்க இங்கே?"

"நான் வந்து... எட்டு, இல்லே எட்டேகாலுக்கு வந்தேன் இன்ஸ்பெக்டர்!"

"அப்ப இவங்க என்ன செஞ்சிட்டிருந்தாங்க?"

"சோபாவுலப் படுத்து, இதோ இப்படியேத்தான் தூங்கறாப்பல—அய்யய்யோ... செத்துட்டான்னு நான் நினைக்கவே இல்லே, சாகற வயசா இது. அன் இமாஜினபிள்!"

அப்போது, தேவேந்திரனை முதன்முதலாய் மகிமாவின் அறையில் சந்தித்த ஹோட்டல் சிப்பந்தி இடைமறித்தான்.

"நான் உள்ளார வந்து பார்க்கிறப்ப சார், தரையில உட்கார்ந்திட்டிருந்தார். இந்த மேடத்தோட தலையைத் தூக்கி, தன் மடியில வச்சிட்டு..."

"ஆமா இன்ஸ்பெக்டர், அப்பத்தான் அவளைத் தொட்டுப் பார்த்தேன். பொசுக்குனு சாய்ஞ்சிட்டா..."

இன்ஸ்பெக்டர், தேவேந்திரனை உற்றுப் பார்த்தபடியே கேட்டார்.

"எட்டரை மணிக்கே வந்துட்டேன்னு சொல்றீங்க. பன்னெண்டு மணி வரைக்கும், இவங்க தூங்கறதைப் பார்த்துட்டேவா உட்கார்ந்திருந்தீங்க?"

தேவேந்திரன், இந்தக் கேள்விக்கு ஏற்ற பதில் சொல்ல முடியாதவராய் திணறினார்.

''அது வந்து... தூங்கறவளை எதுக்காக எழுப்பணும்னு எப்பவுமே எனக்கு—தூங்கறவங்களை எழுப்பப் பிடிக்காது. மேலும்...''

''உம். சொல்லுங்க...''

''மகிமா இந்தியாவை விட்டுப் போயிட்டு அஞ்சு வருஷம் கழிச்சு திரும்பி வந்திருக்கா. இந்த அஞ்சு வருஷத்துல அவ எவ்வளவு மாறியிருக்கான்னு பார்த்துட்டே...''

இன்ஸ்பெக்டர், இந்தப் பேச்சை மேற்கொண்டு வளர்த்த விடாமல்—குறுக்கே புகுந்து கேட்டார்.

''இந்தம்மா, உங்களுக்கு உறவா?''

''இல்லே. எங்கிட்ட ஸ்டெனோவா எனக்கு பெர்ஸனல் அஸிஸ்டெண்டா இருந்தா. திடீர்னு சொல்லாம கொள்ளாம போயிட்டா. இப்பத்தான் 'திடீர்'னு நேத்து போன்லே பேசினா...''

''இவங்களுக்கு கல்யாணமாயிடுத்தா?''

''ஆயிடுத்து. ஆனா, ஹஸ்பெண்ட் இவகூட இல்லே.''

''டைவர்ஸ் பண்ணிட்டாங்களா?''

''தெரியாது. ஒரேயொருதடவை எங்க ஆபீசுக்கு வந்திருந்தார். இவளை மறக்க முடியலையின்னு போட்டோ கேட்டு வாங்கிட்டுப் போனார். அவர் கொஞ்சம் பெண்டாட்டியின்னா, அடக்கமா இருக்கணும், புருஷன் !பேச்சைக் கேட்டு நடக்கணும், அப்படியிங்கற டைப். இவளுக்கு ஒத்து வரல்லே.''

''ஓ...''

''இஸ்ன்பெக்டர், நான் ரொம்பவும் குழம்பிப் போயிருக்கேன். இத்தனை நேரம் வரைக்கும் நான் வீடு திரும்பாததாலே, என் ஒய்ஃப் ரொம்பவும் கவலைப்பட்டுட்டிருப்பா... நான் இப்ப வீட்டுக்குப் போகலாமா?''



இன்ஸ்பெக்டர் கடுகளவு சிரித்தார்.

''எப்படி சார்...இந்தம்மாகூட கிட்டத்தட்ட நாலு மணி நேரம் இருந்திருக்கீங்க. உங்களை இன்னும் நாங்க நிறைய விசாரிக்க வேண்டியிருக்கு. இப்ப உங்களை அனுப்பிட்டா—நான் மேலிடத்துக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும். அதை விடுங்க. பத்திரிகை ஆளுங்க, ஏதோ நாங்க 'கண்டுக்காம' விட்டுட்டதா, பத்தி பத்தியா எழுதுவாங்க. எதுக்கு பிரச்னை பேசாம போலீஸ் ஸ்டேஷனுக்கு புறப்படுங்க. விடிஞ்சதும், வீட்டுக்கு போன் செஞ்சு சொல்லலாம்.''

''அய்யய்யோ...என்னன்னு சொல்றது? நான் இங்கே, இவளைப் பார்க்க வந்தது. என் வீட்டுக்கு, முக்கியமா என் ஒய்ஃபுக்கு தெரியவே கூடாது சார்!''

இப்பொழுது இன்ஸ்பெக்டர் புருவம் சுளுக்கினார். விழிகளில் கேள்விக்குறி தெறித்தது.

''ஏன்? இவங்களைப் பார்க்க வர்றதுனாலே உங்க வீட்டுல என்ன பிரச்னை?''

இந்தக் கேள்விக்கு சரிவர பதில் சொல்லாத தேவேந்திரன், 'திடும்'மென பதட்டமானார். எப்பொழுதும் நிரந்தரமாக அவரிடம் தங்கியிருக்கும் பொறுமையும், நிதானமும் இப்பொழுது கழன்றுவிட்டன.

''இப்ப அதெல்லாம் எதுக்கு இன்ஸ்பெக்டர்? மகிமாவோட டெத்துக்கும் அதுக்கும் சம்பந்தமே இல்லே. அது என் பெர்சனல் மேட்டர். உங்களுக்கு இந்த டெத் சம்பந்தமா வேற ஏதாவது விசாரிக்கணும்னா எனக்கு ஆபீசுக்கு போன் செய்யுங்க. நான் உதவத் தயாரா இருக்கேன். தயவு செஞ்சு, வீட்டுக்கு போன் செய்ய வேண்டாம்.''

''அது எப்படி சார்? இப்ப இந்த சிச்சுவேஷன்லே உங்களை அரெஸ்ட் செய்ய வேண்டியவன் நான். என்னமோ, பெரிய மனுஷராச்சேயின்னு மதிப்பு வச்சு பேசிட்டிருக்கேன்!''

''வாட் டு யூ மீன்? என்னை அரஸ்ட் பண்ணப் போறீங்களா? நான் என்ன தப்பு செஞ்சேன்? உங்களுக்கு நான் யாருன்னு தெரியுமா?''

''நல்லாவே தெரியும். நாலஞ்சு ஃபேக்டரி இருக்கு; எக்ஸ்போர்ட் கம்பெனி இருக்கு. அதான் வாரத்துல ரெண்டு நாளாவது உங்க பேரும், போட்டோவும் பேப்பர்லே வருதே. எத்தனை பட்டிமன்றம், லயன்ஸ், ரோட்டரியின்னு தலைமை தாங்கறீங்க?''

''எல்லாம் தெரிஞ்சுமா, என்கிட்ட...''

''ஸாரி. சட்ட விஷயத்துல ஆண்டி, அரசன்கற பேதம் கிடையாது.''

''அதேபோல, ஒரு வாரண்ட்கூட இல்லாம, நீங்க என்னை அரெஸ்ட் பண்ண முடியாது இன்ஸ்பெக்டர்... வாரண்ட் எங்கே? போய் வாரண்ட்டோட வாங்க. அப்புறம் வர்றேன்!''

''சட்டம் தெரிஞ்சிருக்கிறவர் தப்பு செஞ்சா அதுக்காக பார்த்திட்டு இருக்க முடியுமா?''

தேவேந்திரன் கொதித்துப் போனார்.

''பிகேர்ஃபுல் இன்ஸ்பெக்டர்! நான்தான் இவளைக் கொலை செஞ்சேன்னே வச்சுப்போம். அதற்கு சாட்சி எங்கே? ஐ விட்னஸ் யாரு? இதெல்லாம் இல்லாம எப்படி அரெஸ்ட் செய்வீங்க?''

''ஒரு சந்தேகத்தின் அடிப்படையில கைது செய்ய எங்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கு மிஸ்டர் தேவேந்திரன். நீங்கதான் இந்தக் கொலைய செஞ்சீங்கன்னு நானும் சொல்லலே. அதைத் தீர்மானிக்கிற பொறுப்பு கோர்ட்டைச் சேர்ந்தது. உங்களோட வயசுக்கும், கௌரவத்துக்கும் முதலிடம் கொடுத்து, நான் கையில விலங்கு மாட்டப் போறதில்லே. ஆனாலும், இப்ப நீங்க என்னோட புறப்படறீங்க!''



தேவராஜன் கண்கள் கலங்க—மகிமாவை ஒரு தரம் பார்த்தார்.

அவள் கொஞ்சம்கூட அலுங்காமல், நலுங்காமல் தரையில் கிடந்தாள.

'உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது யார் மகிமா? கடைசியில், உன்னால் இரண்டாவது முறையும் நான் பலமாய் அடிபட்டிருக்கிறேனே!'

**வி**டிகாலையில் லாக்-அப்புக்குள்ளேயே அவருக்கு காபி வந்தது.

ஆனால் அவர் தன் விரலால் தொடக்கூட இல்லை.

''என் வீட்டுக்கு போன் செய்யுங்க. என் ஒய்ஃபை நான் நேரே பார்த்தாகணும்...''

இதற்குமேல் சரியாக ஒருமணி நேரம்... அந்த பத்தடிக்குப் பத்தடி அறைக்குள் புலிபோல குறுக்கும் நெடுக்குமாய் அலைந்தவர்—வையாபுரியின் குரல் கேட்டு துள்ளி நிமிர்ந்தார்.

''வையூ...''

''அடேய் தேவூ, என்னடாது? பொம்பிளை மாச்சாரம் வேண்டாம், வேண்டாம்னு தலைதலையா முட்டிப்பேனே! அப்ப எல்லாம் கேட்டியா? சரி, சரி நம்ம வக்கீல் வந்திருக்காரு. நம்ம ஃபிரண்டு, ஆளும் கட்சி பிரமுகர் ஒருத்தர் இருக்கார். அவர் மூலமா கமிஷனருக்கு செய்தி போயிருக்கு. எதுக்கும் பதறாதே. ஜாமீன்லே எடுக்க தகுந்த ஏற்பாட்டோடதான் வந்திருக்கேன்.''

அவரது வார்த்தைகளை தேவேந்திரனது செவிகள் வாங்கிக் கொண்டாலும், விழிகள் என்னவோ, வையாபுரியின் முதுகுக்குப் பின்னாலேயே தேடியது.

''என்ன பார்க்கறே?''

''மதுரா பசங்க யாரும் வரல்லையா!''

''ஆமா... நீ லண்டன், ரோம், பாரீஸ்னு உலகச் சுற்றுப்பயணம் முடிச்சிட்டு திரும்பியிருக்கே பாரு. உனக்கு மாலை போட்டு, வரவேற்க எல்லாரும் வரணுமாக்கும். ஒருத்தரும் வேண்டாம். நானே போய் பார்த்து, அழைச்சிட்டு வர்றேன்னு சொல்லிட்டுத்தான் வந்தேன்!''

''வையூ, நான் அந்த ஹோட்டல் ரூமுக்குள்ளே போனப்பவே மகிமா கதை முடிஞ்சு போச்சுடா. எனக்குத்தான் அது தெரியலே.''

''உனக்கு எதுதான் தெரிஞ்சது, இது தெரிய?''

வையாபுரி நீண்ட பெருமூச்சுடன், இன்ஸ்பெக்டரிடம் பேசத் திரும்பினார்.

உண்மையில் தேவேந்திரனைப் பார்க்க வேண்டும் என்று மதுராதான் கதறினாளே தவிர, பிள்ளைகள் இருவரும், போலீஸ் ஸ்டேஷன் வாசலை மிதிக்கவே மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்.

''அவர் செஞ்ச தப்புக்கு, நாங்க போலீஸ் ஸ்டேஷன் வரணுமா? நெவர்... எப்படி போய் சிக்கிட்டாரோ— அப்படியே வெளில வரச் சொல்லுங்க! வரட்டும், வந்ததும், நாங்க எங்க பெண்டாட்டி குழந்தைங்களோடத் தனிக் குடித்தனம் போகலாம்னு இருக்கோம்...''

ஏற்கனவே ரணமாகியிருந்த மதுராவின் நெஞ்சம் பட்டபாடு, வையாபுரிக்கு மட்டும்தானே தெரியும்?

# 13

அன்பே!
முன்பெல்லாம்
கனவுகளுக்காகவே
உறங்கினேன்.
இப்போதோ
உறக்க 'ம ஒரு
கனவாகி விட்டது

மொத்தமாய் கண்ணாடி ஜாடியிலிருந்த அத்தனைத் தண்ணீரையும், 'கடகட'வெனக் குடித்தான் சத்யன். அப்போதும் நா உலர்ந்தது.

மறுபடி மறுபடி மகிமா, அவனது காலடியில் விழுந்து பணிந்த காட்சிதான் கண்முன் நின்றது.

அவனுக்கு போலீஸ் பயமில்லை. பிடித்துக் கொண்டு போய் தூக்குதண்டனை கொடுத்தால், அவனுக்காகப் பட்சாதாபப்பட்டு அழக்கூட யாரும் இல்லை.

போலீஸ் பிடிக்கும் முன், அவனே சரணடைந்து விடலாம்.

ஆனால் அவனுக்குத் தெரியும். தன்னை அத்தனை சுலபத்தில் போலீஸ் தொடராது என்பது.

எத்தனை நாளாய் திட்டம் வைத்திருந்தான். இன்று நேற்றில்லை. மகிமாவை எங்கே, எந்தச் சூழ்நிலையில் கண்டாலும் தீர்த்துக் கட்டிவிட அவன் தயாராகத்தானே இருந்தான்.

இதற்காகவே அவன், தனது தொழிலை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு, ஐந்து நட்சத்திர ஹோட்டல்களாகப் பார்த்து வேலைக்கு சேர்வதும், மகிமா எங்கே இருக்கிறாள், என்ன செய்கிறாள் என்று ரகசியமாய் துப்பு துலக்குவதும்—

தேவேந்திரனைச் சந்தித்து அவரது அலுவலகத்திலிருந்து மகிமாவின் புகைப்படங்கள் இரண்டை வாங்கியவன் சும்மாயிருக்கவில்லை.

பெரிய நட்சத்திர ஹோட்டல்களில் பெல் கேப்டனாகவும், அறைகளை மேற்பார்வையிடும் பணியாளராகவும் வேலை பார்க்கும்போது, வெளி நாடுகளிலிருந்து யாராவது வந்து தங்கினால் அவர்களிடம் மெள்ளப் பேச்சு கொடுப்பான். மகிமாவைப் பற்றி ஏதாவது செய்தி சேகரிக்க முடியுமா என்று பார்ப்பான்.

ஆனால் இந்த ஐந்து வருடத் தேடுதலில் அவனுக்குக் கிடைத்ததெல்லாம் தோல்விதான்!

பழம் நழுவி பாலில் விழுந்ததுபோல தானாக வந்து மாட்டினாள் மகிமா.

உண்மையில் சத்யன் அந்த ஹோட்டலில் பெல் கேப்டனாகத்தான் வேலை பார்த்து வந்தான். விருந்தாளிகள் வந்தால் அவர்களது பெட்டி படுக்கைகளை சிப்பந்திகள், அவர்களுக்காகக் குறிப்பிட்ட அறையில் பத்திரமாய் கொண்டுபோய் சேர்க்கிறார்களா என்றும், அறை எடுத்து தங்குபவர்களுக்கு வெளியிலிருந்து மருந்து, மாத்திரை வாங்கிவர வேண்டுமெனில் ஆள் அனுப்பியும், செய்தித்தாள்கள் ஒழுங்காக அறைகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறதா என்பதையும் கவனிப்பதுதான் இவன் பொறுப்பு.

அன்று—



இருள் பிரியாக விடியற்காலையிலேயே—டாக்ஸியில் பெரிய சூட்கேஸ்களும், ஏகப்பட்ட அட்டைப் பெட்டிகளுமாய் இறங்கிய மகிமா ஜீன்ஸும் பனியனும் அணிந்திருந்தாலும் சத்யனால் நொடிப் பொழுதில் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது.

அவள் நேரே ஹோட்டல் வரவேற்பு பகுதிக்குப் போய் அறை எடுக்க முன்பணம் கட்ட, சத்யன் தன் முகம் தெரியாமல் இருக்க, அவசரமாய் தனது உதவியாளனை அழைத்து சாமான்களை எடுத்துப் போய் வைக்கச் சொல்லிவிட்டு, 'விருட்'டென நகர்ந்தான்.

''ராஜா...அந்த அம்மாவுக்கு எந்த ரூம்களை அலாட் பண்ணாங்களோ... பசங்களை அவங்ககூட அனுப்பு. என்னவோ தெரியல்லே வயித்தைக் கலக்குது... ராத்திரி ஒரு ரவுண்டுகூடப் போட்டுவிட்டேன் போல...''

''நீங்க போங்க மூர்த்தி சார்... நான் பார்த்துக்கிறேன்.''

சத்யன் தன் முழுப் பெயரான சத்யமூர்த்தியை மறந்து வெகு காலமாகிறது. சொந்தத் தொழிலைத் துறந்ததோடு அந்தப் பெயரையும் சேர்த்து மறந்துவிட்டான்.

இந்த ஐந்து வருடத்தில், அவன் வேலை பார்த்த இடங்களில் எல்லாம் அவனது பெயர் மூர்த்திதான். சொந்த ஊர் சேலம். பேச்சில்கூட அதிகம் கேரள மண்ணின் சாயல் தெரியாமல் பார்த்துக் கொண்டான்.

கடைசியில்.

அவனது காத்திருத்தல் வீணாகவில்லை. காலம் கடந்தாலும் தூண்டிலில் மீன்.

இது போதும் அவனுக்கு.

அவன் மாடிக்குச் சென்றதுமே அவனது இதயத்துடிப்பு அதிகமாகியது.

'அவன்தானா? நிச்சயமாகத் தெரியுமா?'

'எதற்கு சந்தேகம்? ரிசப்ஷனில் விசாரி...'

'ச்சே, என்னவென்று விசாரிப்பாய்? பின்னால், இதுவே ஒரு சாட்சியாகிவிடப் போகிறது...'

ஆனாலும் அவன் தன் உதவியாளனை அழைத்து மிகவும் புத்திசாலித்தனமாய் கேட்டான்.

''என்ன ராஜா... அந்த அம்மாவுக்கு ரூம் பிடிச்சிருக்கா?''

''எந்தம்மா சார்!''

''அட, அதாம்பா...விடியகாலையில பேகி ஜீன்ஸ்லே தரிசனம். அயல்நாடா, உள்ளூரா?''

''அமெரிக்காவுல இருந்து வந்திருக்காங்க மூர்த்தி சார்! டமாசா பேசுறாங்க. தமிழ்நாட்டு பொம்பளை தான் போல, ரொம்ப நாள் வெளியில இருந்து தமிழ் மறந்துபோயிருக்கு, கொஞ்சிக் கொஞ்சி பேசுறாங்க. ஆ! பார்த்திங்களா இப்ப நீங்க கேட்டவுடனேதான் நினைப்பு வருது. ரூம் சாத்தியே இருந்ததாலே 'குப்'புனு இருக்கு. ரூம் ஸ்ப்ரே கொண்டாந்து அடிக்கச் சொன்னாங்க''

ஹவுஸ் கீப்பிங்லே கூப்பிட்டு சொல்லு. இரு நானே சொல்றேன். ரூம் நம்பர் என்ன?''

சத்யன் எல்லாவற்றையுமே கனகச்சிதமாய் செய் தான்.

அதே சமயம்— அவள் வந்தது முதல் வெளியே எங்கேயும் போகவில்லை என்பதையும் கவனித்துக் கொண்டான்.

நடுவே ஒரு முறை தானே வலிய அவளது அறைக்கு போன் செய்து, குரலை சற்று மாற்றி பேசினான்.

''குட் மார்னிங் மேடம்.''



''குட் மார்னிங்''

''நாங்க! ஹவுஸ் கீப்பிங்லேயிருந்து பேசறோம். எல்லாம் சௌக்கியமா இருக்கா மேடம்?''

''ஓ! நைஸ்.''

''காபி, டிபன் ஏதாவது?''

''ஷ்யர்! யூ ப்ளீஸ் ஸெண்ட் மீ பிளாக்லேபிள்.''

''நீங்க டூ நாட் ஃபைவ்லேதானே இருக்கீங்க?''

''யெஸ்!''

''அது பார் அட்டாச்ட் ரூம் மேடம்! நீங்க பெட் ரூம்லேயிருந்து பேசுறீங்கன்னு நினைக்கிறேன். பக்கத்து ஹால்லே உங்களுக்கு வேண்டியது இருக்கு. இஃப் யூ வாண்ட். நான் உதவிக்கு ஆளை அனுப்புறேன். ஹீ இஸ் வெரிகுட். காக்டெய்ல் மேக்கர்.''

''தாங்க்யூ! உடனே அனுப்புங்க. அப்படியே கொஞ்சம் டோஸ்டட் பிரட். யுவர் குட் நேம்?''

''மூர்த்தி மேடம்,''

''நைஸ்... இந்தமாதிரி பேரை எல்லாம் கேட்டு ரொம்ப நாளாச்சு! நான்கூட தமிழ் நாட்டைச் சேர்ந்தவ தான்!''

''இஸ் இட்!''

''என் பேரு மகிமா! ஸீ யூ!''

அவ்வளவுதான் வியர்த்து விறு விறுத்துவிட்டது அவனுக்கு.

இன்னும் என்ன சந்தேகம்?

அவள் தான் என்று தெரிந்துவிட்டதே.

அப்புறம் எதற்கு தாமதம்?

''இல்லை. அவசரம். கூடாது. ஐந்து வருடங்களுக்குப் பிறகு இப்பொழுதுதான் தாய்நாட்டு மண்ணை மிதித்திருக்கிறாள். எங்கே போய்விடப் போகிறாள். வீட்டுப் பிடிப்போம்.''

அவனுள் ஆத்திரம் பொங்கியது. இரையைப் பார்த்தும் பாயாமல், குறிவைத்து, பதுங்கும் புலியைப் போல காத்திருந்தான், அவன்.

இப்பொழுது அவள் யாரைத் தேடி வந்திருக்கிறாள் என்பதைப் போன்ற பல கேள்விகளுக்கு அவன் விடை தேட வேண்டியதாயிருந்தது.

தேவேந்திரனின் போதாத காலம் மகிமா மறுநாள் மாலையிலேயே அவருக்கு போன் செய்ததுதான்.

அறையிலிருந்து ஹோட்டலுக்கு வெளியே பேசப் படும ஒவ்வொரு தொலைபேசி எண்ணும் கம்ப்யூட்டரில் குறிக்கப்படுவதால் மகிமா, யார் யாருக்கு போன் செய்திருக்கிறாள் என்பதை கண்டுபிடிப்பது ஒன்றும் அத்தனை சிரமமான வேலையாயில்லை சத்யனுக்கு.

அவள் தொடர்பு கொண்டது ஒரேயொரு தொலை பேசி எண்ணுடன்தான்.

அந்த எண் தேவேந்திரனுக்கு சொந்தமான வீட்டு இணைப்பு என்பது தெரிந்ததும் மகிமாவைத் தீர்த்துக் கட்டுவதை விடவும் மிக முக்கியமானது இந்த தேவேந்திரனை ஒழிப்பதுதான் என்கிற முடிவுக்கு வந்துவிட்டான் சத்யன்.

எதுக்காக அவளைக் கொன்னுட்டு நான் ஜெயிலுக்குப் போகணும்? நகமும் சதையுமா எத்தனை சந்தோஷமா எளிமையா இருந்தோம் நாங்க. மகாபாவி! இவனாலே



தான் என் குடும்பமே சிதைஞ்சுது. அஞ்சு வருஷம் கழிச்சு, வந்ததும் வராததுமா இவனை போன்லே காண்டாக்ட் செய்றாளா! அப்படின்னா என்ன அர்த்தம்... இந்த அஞ்சு வருஷமும்கூட இவன்தான் இவளை எங்கேயோ கண் காணாம ஒளிச்சு வச்சிருக்கான்னு தானே அர்த்தம்?

அவனுக்கென்ன? கோடீஸ்வரன். மெட்ராஸ்லே சொந்த வீடு வச்சுட்டு, அதே சமயத்துல அமெரிக்காவுல சின்ன வீடும் வச்சுக்கலாம். இங்கே இருந்தாத்தானே பிரச்சினை என்று கண் காணாத இடத்துல கொண்டு வச்சிட்டான் போல இருக்கு.

போட்டோ கேட்கப் போனப்ப என்னவோ பக்கா ஜென்டில்மேன் மாதிரி பேசினானே படுவா ராஸ்கல். அமெரிக்காவுல கொண்டு போய் ஒளிச்சு வச்சிட்டு, ஒண்ணுமே தெரியாத அப்பாவி மாதிரி என்கிட்ட போட்டோவைத் தந்தாயடோ நாயே...''

''பார்த்தா சோணகிரி மாதிரி இருக்கான். இவனெல் லாம் எங்கே அமெரிக்கா போகப்போகிறான்? என்கிற நினைப்புத்தானே உனக்கு. இரு, உனக்கு என் கையாலே முடிவு வச்சிருக்கேன்!''

நினைத்து, நினைத்து மனசுக்கு மந்திரம் உருவேற்று வது போல ஏற்றி, மகிமாவைக் கொன்றுவிட்டு, தான் போலீஸில் சரணடைய வேண்டும் என்கிற எண்ணம் மாறி, இப்பொழுது அந்தப் பழியை அப்படியே தூக்கி தேவேந்திரனின்மீது போடவேண்டும் என்கிற வெறிதான் மேலோங்கியது.

அவன், தேவேந்திரனை சிக்க வைக்க கண்ணிகள் வைத்தான். அவர் வரும் நேரத்துக்கு ஏற்றாற்போல மகிமாவின் சரித்திரத்தை முடிக்க முகூர்த்தம் பார்த்தான்.

புருஷனை ஏமாத்தி, அவனைப் பெத்த தாயை தற்கொலை முடிவுக்குத் தள்ளி, பெத்த குழந்தைய அநியாயமா, எமன்கிட்ட தூக்கிக்...கொடுத்து...இத்தனை செஞ்சவளுக்கு ஒரே தண்டனை, மரண தண்டனை தான்! இந்த வழக்கு கோர்ட்டுக்குப் போகவேண்டிய அவசிய மில்லை. ஏமாந்தவன், ஏழை, பசிக்குத் திருடினவன். பொண்டாட்டியைப் பறி கொடுத்தவன், இவங்களுக் கெல்லாம் கண்ணை மூடிட்டு தண்டனை தர்ற கோர்ட், நிச்சயமா இவளை மாதிரிப்பட்ட பொம்பளைங்களுக் கெல்லாம் ஒரு தண்டனையும் கொடுக்காது! பாதிக்கப் பட்டவன்தான், சட்டத்தைக் கையில் எடுத்திட்டு தீர்ப்பு கொடுக்கணும்.

சரி, அப்படி தண்டனையைக் கொடுத்த நீதிபதி எதுக்காக தன், கையில் விலங்கை மாட்டிக்கணும்? இத்தனை அழிவுக்கும் காரணமானவன் யாரோ—அவன் கையிலல்ல காப்பை மாட்டணும்.

''கரெக்ட் இந்த கேஸுக்கு நியாயம் எந்த கோர்ட்டு லேயும் கிடைக்காது. நாமேதான் எடுத்து நடத்தணும்.''

இத்தனை மனப் போராட்டத்துக்குப் பின்தான் செயலில் இறங்கினான் சத்யன்.

எங்கேயும் அவசர சிதறல் இல்லை. எங்கேயும் கவனம் பிசகலை தடுமாற்றமோ முன்னுக்குப் பின் முரணோ எதுவுமில்லை.

கச்சிதமாய் முடித்துவிட்டான்.

கொலை நடந்த பின் கண் மறைவானால் அநாவசிய மான சந்தேகத்துக்கு இடமாகும் என்பதினால் மூர்த்தியாய் தனது வேலையில் அவன் எப்போதும்போல் வந்து போய்க்கொண்டிருந்தான்

மகிமாவின் கதையை முடித்த பிறகு அவன் மிக நிதானமாய் கீழ் தளத்துக்கு வந்தான். ஆறு மணியுடன்



அவனது ஷிப்ட் முடிகிறது. ஆனாலும் அடுத்த ஷிப்டுக்கு வந்த மணி என்பவனுடன் அரை மணி நேரம் போல பேசிவிட்டுச் சொன்றான்.

மறுநாள் வேலைக்கு வந்தபோது ஹோட்டலின் பதட்டச் சூழ்நிலை கண்டு புருவத்தை உயர்த்தினான்.

'என்ன மணி! ஒரே போலீஸ் தலையா இருக்குதே?''

''உங்களுக்கு விஷயம் தெரியாதா? ஃபிப்த் ப்ளோர்லே சூட்லே தங்கியிருந்தாங்களே— அதான் சார், மூந்தாநாள் அமெரிக்காவுல இருந்து வந்து இறங்கினாங்களே! அந்த அம்மாவை யாரோ கொலை செஞ்சுட்டாங்க.''

''மை காட்! நம்ம ஹோட்டல்லயா? மர்டரா! என்ன சொல்றே மணி?''

இதற்குள் சத்யனின் உதவி, ராஜாவே ஓடி வந்து சொன்னான்.

''ஏதோ முன் விரோதம் காரணமாம் மூர்த்தி சார்! தேவேந்திரன்னு ஒரு பிஸினஸ் மாக்னெட். கோடீஸ்வரன். அதாங்க அவர் பிரசிடெண்டா இருக்கிற கிளப் மீட்டிங் டின்னர் எல்லாமகூட இங்கேதான் வச்சுப்பார். அவர் தான் கொலை செஞ்சுட்டார்னு போலீஸ் சந்தேகத்தின் பேருல அரெஸ்ட் பண்ணி அழைச்சிட்டுப் போயிருக்கு.''

சந்தேகம்தாம்பா! இன்னும் குற்றம் நிரூபிக்கப் படலை எனக்கென்னமோ அத்தனாம் பெரிய மனுஷர் இந்தக் காரியத்தை செஞ்சிருப்பார்னு தோணலே! மனுஷன் முகத்தைப் பார்த்தாலே தெரியாதா?''

''அது சரி, மாடி ரூம்லே இன்னும் பாடி கிடக்குதா?'

''இல்லை. இப்பத்தான் போஸ்ட் மார்ட்டத்துக்கு எடுத்திட்டுப் போனாங்க. மூர்த்தி சார்! அந்தப் பெண்ணை நீங்க பார்க்கலையே! அப்பாடா அது என்ன

டிரஸ்! அது என்ன மேக்கப்! தூங்கறாப்புல கிடந்துச் சுங்க நாக்குகூட வெளிய வரலே பாடியை எடுத்திட்டுப் போறங்க! அந்தம்மாவோட ஷிபான் ஸாரியில பூசிட்டிருந்த பெர்ஃப்யூம் வாசனை இன்னும் மணக்குது.ச்சீ! சாகப்போறோம்னு தெரிஞ்சா இத்தனையும் செஞ்சிட்டிருப்பாங்க!''

இப்போதான் முதன் முதலாக பயப்படுகிறான் சத்யன்.

முதல் நாளைய யூனிபார உடையையே இன்றும் உடுத்தியிருந்தான் அவன். இப்போது அந்த உடையிலிருந்து கூட பெர்ஃப்யூம் வாசனை வீசுவதுபோல.

நிஜமா!

இல்லை பிரமையா?

அவன் நேரே உள்ளே போய் கண்ணாடி ஜாடி தண்ணீரை அப்படியே கடகட வென்று குடிக்கிறான்.

அப்படியும் கிலியில் நாக்கு உலர்ந்தது.

# 14

யாரேனும்
தூரத்தில் அவள் முகத்தைக்
கண்டால்—
அவள் நடந்து வரும் வழியில்
என் இதயம்
கிடப்பதனைச்
சொல்லுங்கள்.

இன்ஸ்பெக்டர், வையாபுரியைப் பார்த்து, முகத்தில் எந்தவித உணர்ச்சியையும் காட்டாமல் பேசினார்.

''வாங்க. நீங்க யாரு?''

''மிஸ்டர் தேவேந்திரனோட சிநேகிதன். தகவல் தெரிஞ்சதும் பதறிப்போயிட்டோம். ஆனாலும் இன்ஸ்பெக்டர்— இவரை நீங்க அரெஸ்ட் செஞ்சு கூட்டிட்டு வரக்கூடாது. சந்தேகத்தும்பேருல அழைச்சிட்டு வந்தாலும், காதும் காதும் வச்சாப்பல கேட்டிருக்கலாம்.''

''இப்ப உங்க யோசனையக் கேட்க நேரமில்லே மிஸ்டர்...''

''வையாபுரி!''

''எஸ். சந்தேகத்தின் அடிப்படையில யாரை வேணுமானாலும் அரெஸ்ட் செய்ய—ஒரு இன்ஸ்பெக்டர் என்கிற முறையில எனக்கு பவர் இருக்கு. அதே சமயத்துல

எப்பேர்ப்பட்ட கொலைகாரனாயிருந்தாலும், அரெஸ்ட் செஞ்ச இருபத்திநாலு மணி நேரத்துக்குள்ள குற்றவாளியை நீதிபதி முன்னால கொண்டு போய் நிறுத்திடணும். அப்புறம் அவர் பார்த்து, எவ்வளவு ரூபா ஜாமீன் தொகையாக் குறிப்பிடறாரோ! அதைக் கட்டிட்டு கைது பண்ணினவரை நீங்க வீட்டுக்கு அழைச்சிட்டுப் போகலாம். ஆனா ஒண்ணு...''

இன்ஸ்பெக்டரை முந்திக்கொண்டு வையாபுரியே சொன்னார்.

''அந்த ஒண்ணு என்னன்னு எனக்குத் தெரியும் இன்ஸ்பெக்டர்...மாஜிஸ்டிரேட் ஜாமீன் தொகையோட, வாரத்துல மூணு நாளோ—இல்லே தினமுமோ, ஒரு குறிப்பிட்ட போலீஸ் ஸ்டேஷன்லே அரெஸ்ட் செய்யப்பட்ட அப்பாவி தவறாம வந்து, கையெழுத்து போட்டுட்டுப் போகணும்னு உத்தரவு போடுவார். அதானே!''

''எஸ்...''

இன்ஸ்பெக்டர் சிக்கனமாய் தலையை ஆட்ட, வையாபுரியின் இதழ்க்கடையில் இளக்காரமானப் புன்னகை.

''நான் பள்ளிக்கூட வாத்தியார்தான் என்றாலும், சட்டமும் கொஞ்சம் படிச்சிருக்கேன் இன்ஸ்பெக்டர்! குற்றவாளியின்னு காவல் துறையாலே பட்டம் சூட்டப்பட்ட அப்பாவி—தன் வேலை வெட்டி, தன்மானம், இப்படி சகலத்தையும் விட்டுட்டு போலீஸ் ஸ்டேஷனுக்கு தினமும் ஆஜராகி, கையெழுத்துப் போடுவான். நிஜக் குற்றவாளி அதுக்குள்ளே சிட்டுக்குருவிக் கணக்கா பறந்தே போயிடுவான். அதானே இன்ஸ்பெக்டர்!''

இப்பொழுது. இன்ஸ்பெக்டரின் முகத்தில் ரத்தம் பாய்கிறது.

''மிஸ்டர் சிவபுரி!''

''நான் வையாபுரி!''

''ஓ.கே. எதுவோ ஒண்ணு. நீங்க என்னைவிடப் பெரியவங்க. சமூகத்துல பெரிய மனுஷன்கற பட்டத்தோட நடமாடற ஒருவருக்கு ஜாமீன் கொடுக்கறதுக்காக வந்திருக்கீங்க. பேசாமப் போய் உங்க வக்கீலை அழைச்சிட்டு கோர்ட்டுக்கு வாங்க. அங்கே வந்து பேசிக்குங்க.''

வையாபுரி, இன்ஸ்பெக்டரை அலட்சியமாய் பார்த்து சொன்னார்:

''எங்க வக்கீல் இந்நேரம் கோர்ட்டுல நமக்காக காத்திட்டிருப்பார். நீங்க எப்ப கிளம்பச் சொன்னாலும் நான் ரெடி!''

''ஸாரி சார்' ஜீப்லே உங்க ஃபிரெண்டை மட்டும் அழைச்சிட்டுப் போகத்தான் எங்களுக்கு அனுமதி.''

''குற்றம் ருசுப்பிக்காத வரைக்கும் அவன் உங்க ஜீப்லே ஏறணும்கற அவசியமில்லை இன்ஸ்பெக்டர். வேணுமானா தேவேந்திரனோட நீங்களும், உங்க துணைக்கு இன்னும் ரெண்டு போலீசும்கூட எங்க காருல வரலாம். நிறைய எடம் இருக்கு''

நீதிபதி ஜாமீனாகக் குறிப்பிட்ட தொகை தேவேந்திரனின் ஒரு நாளைய செலவுக்குக்கூட காணாதுதான். ஆனால் அவர் குறிப்பிட்ட இன்னொரு விஷயம்தான், தேவேந்திரனைத் தலை குனியச் செய்தது.

''வழக்கு விசாரணை முடியும் வரையில் தேவேந்திரன் அருகில் உள்ள காவல் நிலையத்துக்கு தினமும் வந்து கையெழுத்திட்டுவிட்டுச் செல்ல வேண்டும். விசாரணை முடிந்து, தீர்ப்பு கூறும் வரையில் அவர் வெளிநாடுகளுக்கு போகக்கூடாது. அவரது பாஸ்போர்ட்டை காவல நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்.''

ஜாமீன் செலுத்தி, வெளியே வந்து காரில் ஏறும் வரையில் புலம்பிக்கொண்டே வந்தார் வையாபுரி

''என்னாப்பா சட்டம் இது. தினமும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து ஆட்டோகிராஃப் போடற நிலைமையில இருக்கிறவன், எப்படி வெளிநாடு போக முடியும்கறேன். இவங்க யானையக் கோட்டை விட்டுட்டு பூனையப் பிடிக்க—பள்ளம் தோண்டறாங்க.''

காரில் வீடு நோக்கிப் போகும்போது தேவேந்திரன் வையாபுரியின் இரு கரங்களையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டார்.

''வையூ! உயிர் காப்பான் தோழன்கறதை நீ நிரூபிச் சிட்டேடா.''

ஆமா. அதுலேயும் பாரு. உயிர் காப்பான் தோழன்னு தான் பழமொழி இருக்கே தவிர, மானம் காப்பான் தோழன்னு இல்லே. உயிரைக்கூட எமன் கிட்டயிருந்து காப்பாத்திடலாம் தேவூ! மானம் போச்சுன்னா! நானில்லே, எங்க தாத்தாவே வந்தாலும் ஒண்ணும் செய்ய முடியாது. இப்போதைக்கு உன் உயிருக்கு ஒண்ணும் ஆபத்திலே, திடமாத்தான் இருக்கே.''

''மானம்தான் போச்சு! என்ன செய்ய. இப்படி ஒரு இக்கட்டுல மாட்டுவேன்னு நான் சத்தியமா நினைக்க லேடா. ச்சேச்சே! டேய் வைவூ, மதுராவுக்கு என்மேல எத்தனைக் கோபம் இருக்கும். போன தடவை இந்த மகிமா விவகாரத்தாலே பொறந்த வீட்டுக்குப் போய் உட்கார்ந்தவ லேசுல திரும்பலே. இப்பப் பாரேன். அவளை நினைச்சாத்தான்டா எனக்கு பயமா இருக்கு.''

''அவளை விடு நீ வீட்டுக்கு வா! உனக்கு நிறைய மண்டகப்படி காத்திட்டிருக்கு.''

வையாபுரி அதற்குமேல் எதுவும் பேசவில்லை.



தெரு முனையில் கார் திரும்பும்போதே தேவேந் திரன் திகைத்துவிட்டார். வரிசையாய் இந்தக் கோடியில் ஆரம்பித்து, அந்தக் கோடி வரையில் கார்கள்.

அதோ, தீபக்கின் மாமனாருடைய கார் கோயம் புத்தூரிலிந்து பறந்து வந்ததை காரில் அப்பியிருந்த புழுதியே சொல்லியது.

அந்த டாடா சியரா—லலித்தின் பெரிய மைத்துனரின் கார். அந்தப் பக்கம் ஃபியட் அவனுடைய சகலை யுடையது இன்னும், இன்னும் அவரது வீட்டு முகப்பி லேயே மதுராவின் தாயும், தகப்பனாரும்.

அது நேரம் வரையில் போர்டிகோவில் கும்பலாய் நின்று வாய் ஓயாமல் பேசிக்கொண்டிருந்த தேவேந்திரா நிறுவனத்தின் ஊழியர்கள் அனைவரும், கார் வந்து நின்றதும் 'கப்சிப்' என்று வாய் பொத்தி நின்றனர்.

''வந்தாச்சு! வந்தாச்ச!''

தேவேந்திரன், காரை விட்டு இறங்கி வர, கூட்டம் தலையை உயர்த்தி யாரையும் பார்க்க துணிவின்றி, நேரே உள்ளே போனார் அவர்

என்னவோ சாவு வீட்டுக்குள் நுழைவது போலி ருந்தது அவருக்கு. யாரையும் பார்க்க விரும்பாமல் மாடியிலுள்ள தனது அறைக்குள் நுழைய வையாபுரி மட்டும் பின் தொடர்ந்தார்

''வையூ! யாரையும் உள்ளே விடாதே!''

''சரி!''

''மதுரா எங்கே! ''

''கீழே, சம்பந்தி அம்மாக்கள்கிட்ட பேசிட் டிருக்கா! நீ செய்யறதை எல்லாம் செஞ்சிட்டு, மாடிக்கு வந்து உட்கார்ந்து, 'யாரையும் உள்ளே விடாதே'யின்னு

சுலபமாச் சொல்லிட்டே. தங்கச்சிகிட்ட அப்படி சொல்ல முடியுமா? பாவம். சமாளிச்சிட்டிருக்கா! சரி, என்ன சாப்பிடறே?''

நிஜமாகவே தேவேந்திரனுக்கு பசி வயிற்றைக் கிள்ளியதுதான். ஆனால், அது என்னவோ, திடீரென தன் சொந்த வீடே அந்நிய வீடாகி விட்டாற் போன்றதொரு உணர்வு.

''எனக்கு ஒண்ணும் வேண்டாம்டா!''

அவர், குப்புறப் படுத்து குலுங்கி அழுதார்.

வையாபுரிக்கே, அவரைப் பார்க்கையில் பரிதாபமாக இருந்தது.

''மனுஷன் எத்தனையோ நல்லவன்தான்... பாழாப் போன சபலம்.''

அவர், கீழே போய் மதுராவை அழைத்து வரக் கிளம்பினார். அப்படிப் போகும்முன் அந்த அறையின் சுவரில் பிரும்மாண்டமான அளவில் கவர்ச்சி காட்டிக் கொண்டிருந்த சமந்தாபாக்ஸ் படத்தைக் கையோடு கிழித்து, குப்பைக் கூடையில் அமுக்கிவிட்டுப் போனார்.

மதுரா, காபி தம்ளருடன் உள்ளே நுழைந்தபோது தேவேந்திரன் சிறு குழந்தைபோல, ஒருக்களித்துப் படுத்து, இரண்டு கைகளையும் முழங்கால்களுக்கிடையே கொடுத்து, தன்னை மறந்து தூங்கிக்கொண்டிருந்தார்.

ஒரு கணம் அவர் முகத்தையே இமைக்காமல் பார்த்த மதுராவுக்கு மனம் நெகிழ்ந்து போயிற்று.

அவளுக்குத் தெரியும்—சத்தியமாய் தன் கணவன் அந்தக் கொலையை செய்திருக்க மாட்டார் என்று.

இந்த களங்கமற்ற தூக்கமே அவர் குற்றவாளி இல்லை என்று சொல்கிறதே! இதைவிட வேறு என்ன சாட்சி வேண்டும்?



ஆனால்... ஆனால்... இவர் எதற்காக அவளைப் பார்க்கப் போக வேண்டும். போகத்தான் போனாரே, ஒரு வார்த்தை பொண்டாட்டியிடமாவது சொல்லிவிட்டுப் போனால்தான் என்ன?

''சொன்னால் நீ சும்மாயிருப்பாயா?''

''அவளுடைய உள் மனம் வினவியது.''

அவள், மெள்ள அவரது கன்னத்தை விரல்களால் வருடினாள்.

சுபாவத்திலேயே தேவேந்திரன், தூக்கக் கலக்கத்தில் கூட, மதுராவின் கரம் பட்டால், கையோடு இழுத்து அணைத்துக் கொள்வார்.

இப்பொழுதும் அப்படியே.

ஒருகணம் தான்

'சட்டென உறக்கம் கலைந்து கண் விழித்தவர், மதுராவை, தன் பக்கத்தில் கண்டதும் சிறு குழந்தை போல, அவள் மடியில் முகம் புதைத்து அழுதார்.

''மதுரா, நான் ஒரு தப்பும் செய்யலே மதுரா! அவ எப்படி செத்தாள்னே தெரியாது? ப்ளீஸ்... என்ன நம்பு...''

அவள், அவரது தலை முடியைக் கோதினாள்.

''முதல்லே காபி குடிங்க.''

''உனக்கு என் மேலக் கோபம்தானே?''

''இல்லே. சத்தியமா இல்லே.''

அவர் காபியைக் குடிக்கும் வரையில் காத்திருந்தவள் பின் நிதானமாய் கூறினாள்.

''நம்ம பசங்க ரெண்டுபேரும் உங்களைப் பார்க்கணுமாம் வந்திருக்காங்க.''

''...............''

''கூப்பிடறேன் அவனவன் பெண்டாட்டியோட, மாமனார் வீட்டுக்குப் போறானுங்க. உங்ககிட்ட சொல்லிட்டுப் போகத்தான் வர்றாங்க. 'சரி போயிட்டு வாங்க'ன்னு சொல்லுங்க. வேற ஒண்ணும் பேச்சு வச்சுக்க வேண்டாம்.''

''அய்யோ! என்ன மதுரா இது? பசங்க நம்மை விட்டுப் போறாங்களா!''

''ஆமாங்க. அவங்களுக்கு இந்த வீட்டுல இருக்க அவமானமா இருக்காம், போகட்டும்.''

மதுரா, எழுந்து போய் அறை வாசற்கதவைத் திறந்தாள்.

சிவந்த முகமும், குன்றிய தோள்களுமாய் இரண்டு பிள்ளகளும் எதிரில் வந்து நின்றார்கள்.

''இனிமே நமக்குள்ள எந்த தொடர்பும் வேண்டாம்னு நினைக்கிறோம்பா. நாங்க கிளப்பறதா முடிவு செஞ்சிட்டோம்.

தேவேந்திரன், தன் மார்பை ஒரு கையால் அழுத்திய படி உட்கார்ந்திருக்கிறார். அவரையும் மீறி கண்கள் மழையைப் பொழிந்தது.

# 15

அடியே—
பெற்றவரும் சொந்தமில்லை
பிள்ளைகட்குப் பாசமில்லை.
ஒற்றை உயிர் துடிப்பதெலாம்
உன்னை எண்ணி... வேறில்லை.

ஆறவில்லை. அடங்கவில்லை. தேவேந்திரனுக்கு சொல்ல முடியாத துக்கம் தொண்டைக் குழியில் பந்தாக அடைக்கிறது.

அந்தக் கணமே, மகிமாவின் மரணத்துக்கும் தனக்கும் கொஞ்சம்கூட சம்பந்தமே இல்லை என்பதை எப்படி யாவது நிருபித்துவிட அவர் பரபரத்தார். ஆனால் எப்படி?

கோர்ட் வாசலை மிதிச்சா—அப்பன் பிள்ளை உறவு அறுந்து போயிடுமா என்ன!

இல்லை. போலீஸ் ஸ்டேஷனுக்குள் போய் வந்தால் தீண்டத்தகாதவர்களாகி விடுவார்களா?

''இந்தப் பிள்ளைகள் மனசில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.''

''இவர்கள் இல்லாத வீட்டில் எப்படி வசிப்பது? ஐயோ, குழந்தைகள் இல்லாமல் என்ன வாழ்க்கை?''

தேவேந்திரன் தன் வயதை மறக்கிறார், எதிரில் நிற்பது, தன் ரத்தத்திலிருந்து ஜனித்த பிள்ளைகள் என்பதை அடியோடு மறக்கிறார்.

அப்படியே சோபாவை விட்டிறங்கி, மகன்களின் கால்களை இரு கரங்களினாலும் சேர்த்துப் பிடிக்கிறார். மதுரா, இந்தக் காட்சியைக் காணச் சகியாதவளாய் இரு கைகளாலும் முகத்தைப் பொத்திக்கொள்கிறாள்.

''டேய்! எங்களைத் தனியா விட்டுட்டு எங்கேடா போறீங்க? நான் அந்தப் பொண்ணைப் பார்க்கப் போனது என்னவோ உண்மைதான். ஆனா, நான் அங்கே போறதுக்கு முன்னாலேயே அவ செத்துட்டாடா. அது தெரியாம அங்கேயே மணிக்கணக்கா...''

''அப்பா இனிமே இந்தக் கதையே வேண்டாம். பெப்பரைப் பார்த்தீங்களா... எல்லப் பத்திரிகையும் சொல்லி வச்சாப்பில பிரபல தொழிலதிபரின் முன்னாள் காதலி, ஐந்து நட்சத்திர ஹோட்டலில் மரணம். தொழிலதிபர் கைதுன்னுதான் வந்திருக்கு ஏன், எந்த பிரஸ் ரிப்போர்ட்டர்கிட்டயாவது போய் இதைச் சொல்ல வேண்டியதுதானே?''

தீபக படபடக்க, லலித் சகோதரனை அடக்குகிறான்.

''உஸ்... மெள்ளப் பேசுடா. வெளியில உன் மாமனாரும், மச்சானும் மதுரை வீரன் மாதிரி உட்கார்ந்திருக்காங்க. நம்ம தலையெழுத்து, இப்படி ஒரு மனுஷனுக்குப் போய் பிள்ளைங்களாப் பொறந்துட்டோம். இதுவரைக்கும் நம்ம குடும்பத்து மானம் காத்துல பறந்தது போதும். போறச்சே ரசாபாசம் எதுவுமில்லாமப் போவோம்.''

அவன், தகப்பனின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, மெள்ள அம்மாவின் பக்கம் பார்க்கிறான்.



'அம்மா, நான் சொல்லி நீ கேட்கப்போறதில்லே. ஆனாலும் சொல்றேன். இப்போதைக்கு அப்பாவை விட்டுட்டு, நீயும் ரசிகாவும் எங்ககூட வந்துடறதுதான் நல்லது. உனக்காக இல்லையின்னாலும், ரசிகாவுக்காக நீ இதைச் செஞ்சுதான் தீரணும் நாளைக்கு கல்யாணமாக வேண்டிய பொண்ணு! பெத்தவர் ஒரு பொம்பிளை பொறுக்...''

அவன் சொல்லி முடிக்கவில்லை. மதுரா, மகனை ஓங்கி அறைந்தாள்.

லலித்தின் மனைவி, தன் கணவன் அடி வாங்கியதைக் கண்டு, பதைத்துப் போய் நிற்க—

வையாபுரிதான் மதுராவை ஒரு அதட்டல் போட்டு அடக்குகிறார்.

''என்ன தங்கச்சி நீ. தோளுக்கு மேல வளர்ந்த மகனை கை நீட்டி அடிக்கிறதாவது, அவனவனுங்க பெரிய மனுஷனாயிட்டானுங்க. அவங்களோட கௌரவம், மாமனார், மச்சினன்களோட குடும்ப கௌரவம் இதெல்லாம் தான் முக்கியமாகப் போச்சு! போகட்டுமே எத்தனை நாள் தான் நீயே இவங்களை அடை காத்திட்டிருப்பே?''

''அங்கிள், எங்கப்பா இத்தனை பெரிய காரியத்தை செஞ்சிட்டு வந்ததுக்குப் பிறகும நீங்க இவருக்கு சப்போர்ட் செஞ்சு பேசறீங்களா? இத்தனை வயசுக்குமேல ஒரு பொண்ணோட தொடர்பு. அவளைப் பார்க்க ராத்திரி நேரத்தில ஹோட்டலுக்குப் போறது... அங்கே அவ கழுத்தை நெறிச்சு, ஓ... ஹாரிபின் இதையெல்லாம் எப்படி உங்களாலே பொறுத்திட்டிருக்க முடியறது? எங்க அப்பாவோட பணம், உங்க கண்களையும் மறைச்சிடுத்தா?''

தீபக், வையாபுரியின் சட்டையைப் பிடித்து உலுக்காத குறை. லலித் இன்னமும் கன்னத்தில் பதித்த கையை எடுக்கவில்லை.

வையாபுரி, தரையில் மண்டியிட்டு அமர்ந்திருந்த தேவேந்திரனை மெள்ளப் பிடித்து எழுப்பி, சோபாவில் அமர்த்துகிறார். தீபக்கை அவர் பார்த்த பார்வையில் வெறுப்புதான் அதிகமாக.

''இங்கே பாருடா. ஹோட்டல்லே செத்துப்போன பொண்ணு எத்கனலே உங்க அப்பாகிட்ட செகரட்டரியா வேலை செஞ்சிட்டிருந்ததுங்கறது எல்லாருக்கும் தெரியும். நடுவுல அஞ்சாறு வருஷம் எங்கேயோ போயிடுச்சு. இப்ப சாகறதுக்குன்னு, செத்து உங்க அப்பன் பிராணனை எடுக்கறதுக்குன்னு இங்கே வந்திருக்கு. அவ்வளவுதான். அந்தப் பொண்ணுக்கும் உங்க அப்பனுக்கும் தொடர்பு இருந்ததா வாய் கூசாமச் சொல்றியே உனக்குத் தெரியுமா? நீ பார்த்தியா? சரி! அதைத்தான் விடு. ராத்திரி அந்தப் பொண்ணை ஹோட்டல்லே பார்க்கப் போனானே... ரூம் கதவு மல்லாந்து கிடந்ததே. கிட்டத்தட்ட நாலு மணி நேரம் அவ தூங்கறதைப் பார்த்துட்டே உட்கார்ந்திருந்தானே, தொடுப்பு இருக்கிறவன், அஞ்சாறு வருஷம் கழிச்சு காதலியப் பார்த்தா, இப்படித்தான் உட்கார்ந்திருப்பானா? கட்டிப் பிடிச்சு... ச்சே... அந்தக் கருமாந்தரத்தை நான் வேற என் வாயாலே சொல்லணுமா? எத்தனை சினிமா பார்க்கறீங்க... உங்களுக்குத் தெரியாதா?''

லலித் இப்போது, அடிபடட வேதனையையும் மறந்து கேலியாய் சிரிக்கிறான்.

''நீங்க சொன்னது எல்லாம் உங்க சிநேகிதர் கொடுத்த வாக்குமூலத்தை வச்சிட்டுத்தானே? அவர் கொலை செஞ்சிட்டு தப்பிக்கப் பார்த்திருக்கார். ரூம்பாய் வந்துட்டான் மாட்டிக்கிட்டாரு. என்னதான் நடந்த விஷயத்தை



இவரோட பணத்தாலே அமுக்கப் பார்த்தீங்கன்னாலும் நடந்தது நடந்ததுதானே. எங்கப்பா ஒரு கொலைகாரர்னு சொல்லிக்க எந்த மகன்தான் பிரியப்படுவான்?''

''அது சரி. கொலையப் பண்ணிட்டு ஒருத்தன் நாலு மணிநேரம், பொணத்துக்கு விசிறிட்டு உட்கார்ந்திருப்பான். அப்புறம், தானே தூக்கி மடியிலப் போட்டுட்டு, ரூம் பாயை விட்டு போலீசுக்கு போன் செய்யச் சொல்லுவான். அடேய், அடேய்... ஒரு பொண்ணை கொலை செய்யற அளவுக்கு உங்க அப்பன் மனசுல குரோதம் இருந்திருந்தா, அந்தப் பழியில இருந்து தப்பிச்சுக்கக்கூடிய அளவுக்கு புத்திசாலித்தனமும் இருந்திருக்கும். உங்க அப்பனுக்கு ரெண்டும் இல்லேடா... அதை நான் நிரூபிக்கத்தான் போறேன்.''

''தாராளமாக நிரூபியுங்க! அப்ப நாங்க வர்றோம். இப்ப கிளம்பறோம். ரசிகா, நீ என்ன செய்யப் போறே?''

தீபக் தங்கையைப் பார்த்துக் கேட்க, அவளோ மான்குட்டி மாதிரி மிரண்டு தன் தாயின் முதுகுக்குப் பின்னால் நின்று மெல்லிய குரலில், ஆனால அழுத்தமாய் சொல்கிறாள்.

''எனக்குக் கல்யாணமே ஆகலையின்னாலும் பரவாயில்லை அண்ணா... நான் அப்பா அம்மாவை விட்டு வர மாட்டேன். யோசிச்சுப் பாரு... நம்ம தாததா, தாத்தாவுக்குத் தாத்தா எல்லாரும் பரம்பரை பணக்காரங்களா இருந்தவங்கதான். ஆனா, நம்ம அப்பா தலையெடுக்கறதுககு முன்னாலே தாத்தா, தன் சொத்தையெல்லாம் தொலைச்சாரு... அப்பா, தன் சொந்த முயற்சியில இத்தனை சம்பாதிச்சு, நம்மை இவ்வளவு வசதியா வச்சிருக்காரு. கண்டிப்பா அப்பா, நம்ம தாத்தாவை மாதிரி சின்ன வீடு வச்சிட்டு சீரழியல்லே. அம்மாவைத் தவிர, வேற ஒருத்திய அவராலே பொண்டாட்டியா

நினைச்சுப் பார்க்க முடியாது. நீங்க ரெண்டுபேரும் அண்ணிங்கமேல வச்சிருக்கற பிரியத்தைவிட, அவர் அம்மாமேல அதிகமாகவே வச்சிருக்கார். அதனாலே இலங்ககூட இருக்கறதைவிட எனக்கு வேற எந்த சந்தோஷமும் வேண்டாம்.''

தீபக்கும, லலித்தும் நகர, தேவேந்திரன் சிறு பிள்ளை போல உடைந்து அழுகிறார்.

வையாபுரிக்கே நண்பனின் வேதனை வியப்புக்குரிய விஷயமாய்...

''ஏன்டா தேவு...பிள்ளைங்கமேல நீ இத்தனை பாசம் வச்சிருக்கியா? உன்னை என்னவோ பொறுப்பில்லாத விளையாட்டுப் பிள்ளையின்னு இல்லே நினைச்சிருந் தேன்.''

அது நேரம் வரையில் வாயைத் திறக்காம இருந்த மதுரா, கணவரின் பக்கத்தில் சற்று நெருங்கி அமர்ந்தபடி வையாபுரியிடம் சொல்கிறாள.

''அண்ணா...உங்க சிநேகிதருக்கு இளகிய மனசு. அழகை ஆராதிக்கிற மனசு. அவரைப்பத்தி எனக்கு நல்லாத் தெரியும். இப்பவும்கூட எனக்கு என்ன வருத்தம்னா, அன்னிக்கு இவர், மகிமாவைப் பார்க்கப் போறேன்னு என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருந்தா இந்த அபவாதமே வந்திருக்காது. அவரை நான் புரிஞ்சிட் டிருக்கற அளவுக்கு அவர் என்னைப் புரிஞ்சுக்கலே...''

தேவேந்திரன் தலையசைத்தார்.

''இல்லே மதுரா! உன்கிட்ட சொன்னா நீ கோவிச்சுப்பே. ஏற்கனவே மகிமா விஷயத்துனாலேதானே நீ என்னைவிட்டுப் பிரிஞ்சு...''

''அப்ப, உங்கமேல கோபம் வந்தது என்னவோ உண்மைதான். ஆனா... நிதானமா யோசிச்சுப் பார்த்த பிறகுதான் உங்க சுபாவம் புரிஞ்சது. பெண்கள்

அடுப்படியில உழலறதைவிட, நல்லாப் படிச்சு, முன்னேறி தன் அழகோட புத்திசாலித்தனத்தையும் வளர்த்துக்கறது நல்லதுன்னு நீங்க நினைக்கிறீங்க. மகிமாவையும் அப்படித் தான் நினைச்சீங்க. ஆனா, அவ என்ன நினைச்சு திரும்பி வந்தாளோ... சொல்லாமலேயே போயிட்டா. ஒண்ணு மட்டும் நான் உறுதியா நம்பறேன். நீங்க அந்தக் கொலைய செய்யலே. உங்களுக்கும் அதுக்கும் சம்பந்தமே இல்லே.''

தேவேந்திரன், மனைவியின் முகத்தை இரு கைகளாலும் ஏந்தி, வாய் விட்டழுகிறார்.

''நீ என்னை நம்பறே இல்லே... எனக்கு அது போதும் மதுரா. நான் பிழைச்சேன்...''

வையாபுரி தொண்டையைச் செருமுகிறார்.

''கொஞ்சம் இடம் கொடுத்தாப் போதுமே இவனுக்கு! டேய் தேவு... நான் ஒருத்தன் இடிச்சபுளி மாதிரி உன் பக்கத்துல இருக்கேன். பாவம், உலகம் புரியாத பச்சைக் குழந்தை உன் மக...அவவேற இருக்கா. பொண்டாட்டியக் கொஞ்சப் போயிட்டான்...''

''அய்யோ... மறந்துட்டேன்பா.''

''சரி விஷயத்துக்கு வா. இந்த மகிமா எத்தனை மணி சுமாருக்கு செத்தாங்கறது தெரிஞ்சா உன்னைக் காப்பாத்த முடியுமான்னு பார்க்கலாம். இன்னும் மெடிக்கல் ரிப்போர்ட் வரல்லே. அது போகட்டும். மகிமா வைப் பார்க்கப் போனியே... அன்னிக்கு காலையில இருந்து ராத்திரி வரைக்கும் உன்னோட புரோகிராம் என்னென்ன? எங்கே இருந்தே? என்னவெல்லாம் செஞ்சே? கொஞ்சம் ஞாபகப்படுத்தி சொல்லு.''

தேவேந்திரன், நெற்றிப் பொட்டை அழுந்தத் தேய்த்து விட்டுக்கொண்டார்.

''அன்னிக்குத்தானே நம்ம தீபக்கோட வெட்டிங்டே? காலையில எட்டு மணிக்கு எழுந்திருச்சேன். பசங்க

எல்லாம் கோவிலுக்குப் போயிருந்தாங்க. மாடியில இருந்து கீழே இறங்கி வந்து சமையல் அறையிலே மதுராவுக்கு உதவி செஞ்சிட்டிருந்தேன்.''

''நீ உதவி செஞ்ச லட்சணத்தைத்தான் நான் பார்த்துட்டே இருந்தேனே.''

''ஆமா... அப்பத்தானே நீ வந்தே! ரெண்டுபேருமா மாடிக்குப் போனோம். பேசிட்டிருந்தோம்.''

''உம்... இப்ப ஞாபகம் வர்றது. நாம ரெண்டு பேரும் பேசிட்டிருக்கறப்ப ஒரு போன் கால் வந்ததே... நீ கூட வெளிநாட்டுல இருக்கற உன் ஃபிரண்டோடப் பொண்ணு இங்கே வந்திருக்கா, ஹோட்டல்லே தங்கியிருக்கான்னு சொன்னியே... அந்தப் பொண்ணு இந்தக் குட்டிதானா?''

தேவேந்திரன் மௌனமாய் தலை குனிந்தார்.

''வாயைத் திறந்து சொல்லேன் ''

''ஆமாடா...''

''ராத்திரி மகனோட திருமண நாள் விருந்துலகூட கலந்துக்காம அய்யா அங்கேதான் றெக்கை கட்டிட்டுப் பறந்தீங்களாக்கும்?''

''இதப் பாரு. நீ இப்படியெல்லாம் கேட்டா எனக்கு அழுகை வரும் தெரியுமா... நான் கண்டேனா—இது மாதிரி ஒரு சுருக்கு என் கழுத்துக்கு வரும்னு! அஞ்சாறு வருஷத்துக்கு அப்புறமா மகிமா எப்படியிருக்கான்னு...''

சொல்லிக்கொண்டே வந்தவர், மதுராவின் முகத்தைப் பார்த்ததும் பதறினார்.

''மது... என்னை அப்படிப் பார்க்காதே. ஏதோ அவ கூப்பிட்டதும் சின்னப்பையன் மாதிரி ஓடிட்டேன். அதுவும்கூட லேட்டாயிடுச்சு. இன்னும் கொஞ்சம் முன்னாலே போயிருந்தா, அவளைக் காப்பாத்தியிருக்கலாமோ என்னவோ. அவகிட்ட ஆறு மணிக்கு வர்றேன்னு சொல்லியிருந்தேன். ஆனா மதுராவுக்கு உடம்பு சரியில்லாததாலே அவகூட ஹாஸ்பிடலுக்குப் போகும்படியா ஆயிடுச்சு...''

''இருங்க... நாம எத்தனை மணியிலே இருந்து எத்தனை மணிவரை ஆஸ்பத்திரியில இருந்தோம்?''

மதுரா பிரகாசமாகக் கேட்டாள்.

''ஏன்? ஆறு மணியிலே இருந்து ஏழே முக்கால் மணி வரைக்கும்...''

வையாபுரி, சந்தோச மிகுதியில் சிநேகிதனின் கையைக் குலுக்கினார்.

''அடேய்... இது போதும்டா எனக்கு எந்த நர்ஸிங் ஹோம்? டாக்டர் சாட்சி சொல்ல வருவாரா? என்ன விஷயமா டாக்டரைப் பார்க்கப் போனே? எங்கே, 'மளமள'ன்னு சொல்லு.''

தேவேந்திரன் மதுராவைப் பார்க்க, அவள் அப்போது தான் நினைவு வந்தாற்போல வயிற்றைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள்.

உள்ளே, அது 'நான் இருக்கிறேன் அம்மா' என்பது போல்... துடிப்பது தெரிந்தது.

# 16

இசைக்க வேண்டிய காதல் வீணை
சுமக்க வேண்டிய
சிலுவையாய் போனது...

''இங்கே நின்னுட்டு என்ன செய்யறீங்க மிஸ்டர் மூர்த்தி?''

குரல் கேட்டு, சத்யன் திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தான். எதிரே ஹவுஸ்கீப்பர் பமீலாராவ்.

''ஒன்னுமில்லே, யூனிஃபார்ம் கசங்கின மாதிரி இருந்தது. அதான் வேற செட் ஏதாவது இருக்கான்னு தேட.''

''அது எப்படி இங்கே வேற செட் இருக்கும்? உங்க டிரஸ் எல்லாம் அந்த ரூம்லே இல்லே இருக்கும். இங்கே பெட்ஷீட், பில்லோ கவர்ஸ்தானே இருக்கும்.''

''ஓ...எஸ்...எஸ்...! நான் மறந்தே போயிட்டேன்.''

சத்யன் அவசரமாய் அடுத்த அறைக்குள் நுழைகிறான்.

''ராத்திரி முழுக்க தண்ணியடிக்க வேண்டியது, காலையில போதை தெளியாமலேயே டூட்டிக்கு வர வேண்டியது. நல்ல வேளை, யூனிஃபார்மை மாட்டிக்கறதா நினைச்சிட்டு, பெட்ஷீட்டை எடுத்து உடம்புல சுத்திக்காமப் போனாரே!''



முணங்கிக்கொண்டே பமீலா நகர, சத்யன் இப்பொழுது வேறு உடையுடன் அவசரமாய் வெளி வருகிறான்.

'அம்மா... அந்த செண்ட் நாத்தம் பழைய டிரஸ்ஸோடப் போச்சு. இனிமே ஒரு பய நம்மைக் கண்டு பிடிக்க முடியாது.'

அவனுள் மெலிதாய் நிம்மதி பரவியது.

அந்த ஹோட்டலின் அடித்தளத்தில்—ஹவுஸ் கீப்பிங் செக்ஷனில், சிப்பந்திகள் உடை மாற்றிக்கொள்ள தனி அறை உண்டு. அவரவர்கள் வீட்டிலிருந்து சொந்த உடை அணிந்து, கையில் யூனிஃபார உடையை எடுத்து வருவதும், இங்கு உடை மாற்றி, போட்டு வந்த பேண்ட் சட்டையை ஒரு பையில் திணித்து அந்த அறையிலேயே வைத்துவிட்டுப் போவதும், வழக்கமான ஒன்று

அறை, ஊழியர்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்தாலும், பொருள்களை ஒழுங்காக, நேர்த்தியாக வைத்திருக்க வேண்டும். பமீலாராவ் கண்ணில் படும்படியாக, துணிகளை விசிறிப் போட்டோ, சுருட்டி பையில் திணித்தோ வைத்துவிடக் கூடாது. கண்ணில் பொறி பறக்க கத்துவாள். ஆங்கிலமும், கொச்சைத தமிழும் மணிப்பிரவாளமாய் கலந்து அவள் திட்டும்போது, ஒவ்வொரு ஊழியருக்கும் தனிப்பட்ட முறையில் அவளை அங்கேயே நிறுத்தி வைத்து, கழுத்தை நெறிக்க வேண்டும் போல ஆத்திரம் பெருகும்.

''அனால்—

இதுவரையில சத்யன் அவளிடம் வசவு வாங்கிக் கட்டிக்கொண்டதே இல்லை. காரணம், இயல்பிலேயே அவனிடம் ஒழுங்கும், சுத்தமும் படிந்திருந்ததுதான். ஒரு முறை குடித்துவிட்டு வந்ததற்காக பமீலாவினால் எச்சரிக்கப்பட்டிருக்கிறான்.

''வேலை நேரத்துல குடிக்கிறதில்லே, சரிதான். ஈவினிங் ஷிப்ட் பார்க்கறப்ப, பகல்லே தண்ணியடிக்கறது

தப்பு. நிதானம் தவறி நடக்கறதுல்லேங்கறது வேற! உங்களைப் பொறுத்தவரைக்கும், நீங்க வேலையைக் கச்சிதமா செஞ்சிடறதாத்தான் நினைக்கிறீங்க. ஆனா பாருங்க...முகம் உப்பிப்போய் கண்ணு சிவந்து... இந்தக் கோலத்துல கஸ்டமர்ஸை வரவேற்கிறது தப்பு!''

''வர்றவங்க என்ஜாய் பண்ணறதுக்காக வர்றாங்க! அவங்க ஆர்டர் பண்ணற சாப்பாட்டையும், டிரிங்க்ஸை யும் சுறுசுறுன்னு வேகமா கொண்டு வைக்க வேண்டிய எம்ப்ளாயீஸ் நீங்க எல்லாரும். அதை விட்டுட்டு, நீங்களே அழுது வடிஞ்சிட்டிருந்தா எப்படி?''

பமீலாரால்—தான் சொல்வதைக் கேட்க யாருமே இல்லாவிட்டாலும், ஓயாமல் எதையாவது சொல்லிக் கொண்டேதான் இருப்பாள்.

சமயத்தில், சத்யனிடம் அவனுடைய சகாக்கள் சொல்வதுண்டு.

''இந்தப் பொம்பிளை வாயிலே பிளாஸ்திரியை ஒட்டி நாலஞ்சு நாளைக்கு சோறு தண்ணியில்லாம ரூம்லே போட்டு பூட்டி வச்சிடணும். புருஷன்காரன் குய்யோ முறையோன்னு ஊர் முழுக்கத் தேடணும்.''

''நினைச்சிட்டிரு. இந்த மட்டும் போய் தொலைஞ்சா ளேயின்னு அந்த ஆளு நிம்மதியா இருப்பான். மேலும், இவ இல்லையின்னா இந்த இடத்துக்கு இன்னொருத்தி வருவா. அவமாத்திரம் நம்மை கொஞ்சப்போறாளா என்ன! சரிதாம்மான்னு சொல்றதையெல்லாம் கேட்டுட்டு இந்தக் காதுல வாங்கி, அந்தக் காதுல விடுவியா...''

சத்யன் படு அலட்சியமாய் சொல்வான்.

இப்பொழுதுகூட சத்யன் அப்படித்தான்! பமீலாவின் முணுமுணுப்பை லட்சியமே செய்யாமல் 'விருட்'டென தனது இடத்துக்கு நகர்ந்தான்.

''இனிமேல் என்ன, பிரச்னையே இல்லை.''



''மகிமா, போஸ்ட்மார்ட்டம் செய்யப்பட்டு, மார்ச்சுவரியில கிடக்காளாமே...''

அவன் ஒரு கணம் கண்களை மூடி அந்தக் காட்சியை மனசுக்குள் கொண்டு வந்து நிறுத்திப் பார்த்தான்.

மகிமா! பிணக்கிடங்கில், ஒரு இழுப்பறையில் ஒயிலாகப் படுத்திருக்கிறாள். அன்று பார்த்த அதே ரோஜா வர்ண உடை. உதட்டோரத்தில் மட்டும் மெல்லியக் கோடாய் உறைந்து போன ரத்தம்...

அவன், அவளது முகத்தை குனிந்து பார்க்க, அவளது வெல்வெட் இமைகள் படபடத்து மெள்ளத் திறக்க, அவன் நெஞ்சு அதிர அவளையே பார்க்கிறான்.

அவளோ தனது குழந்தைச் சிரிப்பை சிதற விட்டபடி கொஞ்சலாய் சொல்கிறாள்:

''நீங்களா! நான் யாரோன்னு நினைச்சி பயந்துட் டேன்.''

''...............''

ஏர்கண்டிஷனை வேணுமானா நிறுத்திடுங்களேன்! இங்கே ரொம்பக் குளுருது. என் கையைத் தொட்டுப் பாருங்க, பொணமாட்டம் விரைச்சிட்டேன்.''

''...............''

''என்ன ஒரு மாதிரி நாத்தம் வருது—குடலைப் பிடுங்குது; எலி கிலி செத்துப் போச்சா! ப்ளீஸ், தேடிப் பாருங்க. எனக்கு எலியின்னாலே பயம்!''

''...............''

''ஒரு கட்டு ஊதுவத்தி கொளுத்தி வையுங்களேன்! என் தலைமாட்டுலே, நாத்தம் சகிக்கலே?''

''...............''

''ஆமா, என்கிட்ட நல்ல உசத்தியான பெர்ஃப்யூம் எல்லாம் இருக்கே... மறந்தேபோயிடுச்சு பாருங்க. ஒரு பாட்டிலை எடுத்து, ரூம் முழுக்க ஸ்ப்ரே பண்ணி விடுங்களேன்.

''.......''

''ஹை... உங்க சட்டைகூட நல்லா வாசனையாத தான் இருக்கு. கிட்ட வாங்க... மோந்து பார்க்கறேன்.''

'டக்'கென அவள், அவனது டையைப் பிடித்து இழுக்க, அவன் திமிற...

'டை'யின் சுருக்குக் கழுத்தை இறுக்கிக்கொண்டே போக... மூச்சு திணறியது. விழி பிதுங்கியது.

'ஏய்... ஏய்... விடு... விடு... என்னை.'

அவன் புறங்கையை வீச—

''சார்...''

''யாரு?''

''நான்தான் சார், ராஜா! ராத்திரி முழுக்க சரியானத் தூக்கமில்லையா? உட்கார்ந்துட்டே தூங்கறீங்க.''

சத்யன் திகைத்தான். சுற்றும் முற்றும் பார்த்தான்.

சாதாரணமாய் அந்தப் பகல் நேரத்தில் ஹோட்டல் வரவேற்பு ஹாலில் அத்தனைக் கூட்டம் இருக்காது. மந்தமாய்—ஏதோ ஒருவித மிதப்பில் இயங்கிக்கொண்டிருக்கும். மாலை நேரம் நெருங்க நெருங்கத்தான் சுருதி சேரும். உற்சாக மெட்டுக்கள் கிளம்பும்.

இன்று அப்படியில்லை.

முதல் நாள் நடந்த சம்பவத்தின் பாதிப்பால்—ஆங்காங்கே திட்டுத் திட்டாய் காக்கி உடுப்புகள்... சுறுசுறுப்பான பூட்ஸ் நடமாட்டங்கள்.

சத்யன், தன்னை உதறிக்கொண்டு எழுந்தான்.

இனிமேல் இப்படி உட்கார்ந்து, பேய் விழி விழித்தே—நம்மைக் காட்டிக் கொடுத்துவிட, நாமே காரணமாய் இருக்கக்கூடாது.

வலிய வரவழைத்துக்கொண்ட உற்சாகத்துடன் அவன் வேலையை கவனிக்க—



''ராஜா, டூ நாட் த்ரீயிலே வனிதா மாகஸீன் கேட்டாங்க. வெளியில கிடைக்குதா பாரு!''

''யாரங்கே... டூ நாட் செவன்லே ரூம் காலி செய்யணும்கறாங்க. பில் போடச் சொல்லு. என்னது, இப்ப காலி செஞ்சிட்டு போக முடியாதா... ஏன்?''

''போலீஸ் இன்வெஸ்டிகேஷனுக்காகவா .. சரியாப் போச்சு போங்க... இருங்க. டூ நாட் செவன்லே இருக்கறவங்க டென்ஷன்லே இருக்காங்க. நிலைமையைச் சொல்லி சமாளிங்க...''

''சார், டூரிஸ்ட் டாக்சி கேட்டிருந்தீங்க. அம்பாசிடர் போதுமா! ஏ.சி. போட்டது. இப்ப ஃபிக்ஸ் பண்ணிட்டாத்தான் உண்டு. அப்புறம் டிரைவர் வேற யாருக்காவது ஓட்டப் போயிருவான்.''

அவன் டெலிபோனிலும், நேரிலும் தேனீமாதிரி இயங்கிக்கொண்டிருந்தாலும், போலீசார் மீது வைத்திருந்த கவனத்தை எடுக்கவில்லை.

நடுவே ஒரு இன்ஸ்பெக்டர் கீழ் தளத்திலிருந்து மேலே வர... அவர் பின்னாலேயே பெரிய பிளாஸ்டிக் பைகளில் துணிகளுடன் கான்ஸ்டபிள்.

ஒரு கணம் உறைந்து நிற்கிறான் அவன்.

''என்ன அண்ணே, பார்த்தீங்களா... நம்ம உடம்பை செருப்பாத் தச்சுப் போடறோம். போலீஸ் என்னடான்னா— தும்பை விட்டுட்டு வாலைப் பிடிக்குது!

ராஜா அடிக்குரலில் அசிங்கமாய் திட்டுகிறான்.

''என்னடா பண்ணறாங்க?''

''நேத்து சாயந்திரம் அந்தம்யா ரூமுக்கு யார் யார் என்ன வேலையாப் போனாங்கன்னு விசாரிச்சிட்டிருக்கு போலீஸ்... ஹவுஸ் கீப்பர் பமீலாவுக்கு பிளட் பிரஷர் அதிகமாயிடுச்சாம். ரூம் பாய்ஸ், இன்னும் மத்த பேரர்ஸ் ஸோட யூனிஃபாரங்களை எல்லாம் எடுத்திட்டுப்

போறாங்க... என்னமோ முக்கியமான ஒரு சாட்சி கிடைச்சிருக்காம்... அண்ணே, அண்ணே... எங்கே ஓடறீங்க.''

சத்யன் எதையும் காதில் வாங்கிக்கொள்ளும் நிலையில் இல்லை. படு வேகமாய் கீழ் தளத்துக்குப் போகிறான்.

அங்கே—

பமீலாவின் மேற்பார்வையில்— ஊழியர்களின் யூனிஃபார உடைகள் தனித் தனி பிளாஸ்டிக் பைகளில் போடப்பட்டு—மேலே சீட்டில் பெயரெழுதப்பட்டு போய்க் கொண்டிருந்தது.

''யாரு அங்கே... செபஸ்டின்... நேத்து காலையில ஷிப்ட்லே இருந்தவங்க டிரஸ் எல்லாத்தையும் கேட்கறாங்க. போட்டுட்டிருந்தா கழட்டிக் கொடுக்கச் சொல்லுங்க... டோபி கிட்ட இருந்து வந்த புது செட்டை எடுத்துக் கொடுத்து போட்டுக்கச் சொல்லுங்க.''

அவள் சத்யனை திரும்பிப் பார்த்தாள்.

''என்ன மிஸ்டர் மூர்த்தி!''

''என் யூனிஃபாம்!''

''அதான் காலையிலேயே கசங்கியிருக்குன்னு வேற சேஞ்ச் பண்ணிட்டிங்க போல... உங்க பழைய செட்டை நானே எடுத்துக் கொடுத்திட்டேன்.''

''கொடுத்திட்டீங்களா?''

''ஆமா! ஏன்?''

''ஒண்ணுமில்லே. அதுல பேண்ட் பாக்கெட்லே ஒரு மருந்து சீட்டு இருந்தது... அதான்.''

''அப்படியா! ஆனா இப்ப ஒண்ணும் செய்ய முடியாதே. மருந்து சீட்டுதானே? போனாப் போறது' விடு... மறுபடியும் டாக்டரைக் கேட்டு வாங்கிக்கலாம்.''

சத்யனின் செவிகளில் அவளது வார்த்தைகள் எதுவும் விழவேயில்லை.

அவன் அப்படியே விக்கித்து நின்றிருந்தான்.

21057
377504 17

உனக்குத் தெரியுமா?
எந்த விபத்திலும்
காதல் செத்ததாக
சரித்திரமே இல்லை...

**வை**யாபுரி துள்ளிக் குதிக்கிறார். சந்தோஷம் தாங்க முடியாமல் கண்களில் நீர் தளும்புகிறது.

''அடேய் மடையா... இதைச் சொல்ல ஏண்டா இப்படி மென்று முழுங்கறே...?''

''அப்படியில்லே வையூ. இதை யார்கிட்டயும் சொல்ல வேண்டாம்னு மதுராதான், இத்தனை வயசுக்கு மேல... அதுவும் கல்யாணத்துக்குப் பொண்ணு இருக்கறப்ப...''

இப்பொழுதுதான் அவர் மகளின் நினைவு வந்து, சுற்றும் முற்றும் பார்க்கிறார்.

''ரசிகா...ரசிகா...எங்கே?''

''இருங்கப்பா. ஸ்வீட் கொண்டு வர்றேன்''

ரசிகாவின் குரல், சமையலறையிலிருந்து கேட்டது.

அவர் தயக்கத்துடன் மனைவியின் முகத்தைப் பார்க்க, அவளோ அப்படியே குன்றிப் போனவளாய் தேவேந்திரனின் தோளில் முகம் புதைத்து, குலுங்கிக் குலுங்கி அழுகிறாள்.

''அடடா...தங்கச்சி, என்னம்மா இது? எதுக்காக அழறே? இந்த வயசுல பிள்ளை பெத்துக்கறதுக்கா? அதை நீ முன்னாலேயே யோசிச்சிருக்கணும்மா? தேவு மாதிரி ஒரு புருஷனை வச்சிட்டு, ரசிகாவுக்கு அப்புறம் இப்படி நீண்ட இடைவெளி விட்டதே ஆச்சர்யம்தான். அது சரி... ஒரு

பள்ளிக்கூட வாத்தியாரா இருந்திட்டு, குடும்பக் கட்டுப் பாட்டுக்கு ஆலோசனை சொல்லி, ஆபரேஷனுக்கு ஆளை இழுத்துட்டு வர்ற நானே, தேவு விஷயத்துல ஏமாந்திட்டேன் பாரு...முதல்லே இவனை இழுத்திட்டுப் போய் ஒரு ஆபரேஷனை செஞ்சிருக்கணும். என் மரமண்டைக்கு அது தோணவே இல்லே. ஆனாலும் எல்லாம் நல்லதுக்குத் தான்னு நினைச்சிக்கோ!''

அவர் 'மள மள'வெனச் செயலில் இறங்குகிறார். தேவேந்திரனையும், மதுராவையும் அழைத்துக் கொண்டு, அந்த குறிப்பிட்ட டாக்டர் வீட்டுக்குப் போய்—

''ஆமா... நான்கூட பேப்பர்லே படிச்சேன். நீங்க ரெண்டு பேரும் இங்கே வந்திருந்த சமயத்துலேயே அந்தக் கொலை நடந்திருக்கு. இருங்க நர்ஸிங் ஹோம்லே நீங்க வந்த தேதி, நேரம் உங்களுக்கு இங்கே கொடுத்திருந்த டோக்கன் நம்பர் எல்லாமே ரிஜிஸ்தர் ஆகியிருக்கும். மேலும், மிஸஸ் தேவேந்திரனோட உடல் நிலை, அவங்க மெடிக்கல் ரிப்போர்ட் எங்ககிட்ட இருக்கும்''

அடுத்த அரை மணி நேரத்தில், தேவேந்திரன் குற்றவாளி இல்லை என்பதை நிரூபிப்பதற்கான சகல சாட்சியங்களுடன் வையாபுரி, தேவேந்திரனின் வக்கீலைத் தேடி நடக்க—

ரசிகா, அம்மாவின் முகத்தை தன் புறம் திருப்பி, ஆதரவாய் சொன்னாள.

''அம்மா, இப்ப என்ன நடந்திருச்சுன்னு இப்படி அழறே? யார் உன்னைக் கேவலமா மதிப்பாங்க? உண்மையில இதுக்காக நீ பெருமைப்பட வேண்டாமோ? இதோ நம்ம வீட்டுலே லலித் அண்ணனுக்கு குழந்தை இல்லையேன்னு எத்தனை வேதனைப்படறோம். இப்ப கடவுளாப் பார்த்துக் கொடுத்ததை ஏன் அவமானச் சின்னமா நினைக்கறே? சிரிப்பாங்க சிரிப்பாங்கன்னா யாரைச் சொல்றே? சின்ன அண்ணி வீட்டுல,



மாப்பிள்ளைக்கு ஏதாவது குறை இருக்கான்னு அண்ணனை டாக்டர்கிட்ட அழைச்சிட்டுப் போய் காட்டினாங்க. அண்ணன் நார்மலா இருந்தாலும், அண்ணியும் அவங்க அம்மாவும் சொல்லிக் காட்டிட்டே தான் இருந்தாங்க. இப்ப அவங்க புத்தியில படறமாதிரி, இத்தனை வயசுக்கும் எங்க அப்பாவே பெத்துக்கறாரு... எனக்கென்ன பிறக்காமலாப் போயிடப் போறதுன்னு அண்ணன் பெருமையாச் சொல்லிக்கலாம் இல்லையா?''

''......''

''சரி...அது போகட்டும் இந்த வயசுக்கும் தாயாகற அளவுக்கு தெம்பும், திடமும், இளமையும் உன்கிட்ட இருக்கு. அது, உன் பொண்ணான எனக்குப் பெருமை இல்லையா?''

''எல்லாத்துக்கும் மேல இந்தக் குழந்தையோட வருகை, அப்பாமேல விழ இருந்த பெரிய பழியை துடைச் சிருக்கு... யோசிச்சுப் பாரு, இது வயித்துல வரல்லை யின்னா, நீ அன்னிக்கு அப்பாவை அழைச்சிட்டு டாக்டர் கிட்ட போயிருப்பியா? அப்படி போனதுனாலேத்தானே இன்னிக்கி அப்பா தப்பிச்சாரு?''

''ஆமா...''

மதுரா, ஈனசுரத்தில் முனகினாள்.

ரசிகா, இந்த அளவுக்குப் பேசுவாள் என அவள் எதிர் பார்க்கவே இல்லை.

சம்பிரமமாய், தாயின் எதிரே அமர்ந்து அவளது மனதை உற்சாகப்படுத்தும் விதத்தில் நீளமாய் பேசினாள். வையாபுரியும், தேவேந்திரனும் வக்கீலைப் பார்த்து விட்டு வந்தபின்பும்கூட உள்ளே நுழையாது, ரசிகாவின் பேச்சில் வியந்துபோய் நின்றார்கள்.

''அம்மா... யாருக்காகவும் நீ தலை குனியாதே. இது உன் வாழ்க்கை. பிள்ளையப் பெத்துக்கறதும், பெத்துக் காததும் உன் இஷ்டம் ஆனா ஒண்ணு... இப்ப இந்தக்

குழந்தை வேண்டாம்னு அபார்ஷன் செஞ்சா, பெரிய உயிருக்கே ஆபத்தாயிரும்னு டாக்டர் சொல்றார். அதைவிட, குழந்தையப் பெத்துட்டு, அப்படியே குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் செஞ்சுக்கறது நல்லதுன்னு சொல்றார். எனக்கும், அப்பாவுக்கும் நீ வேணும்மா. நீ இல்லாம, எங்களாலே இருக்க முடியாது...''

''இத்தனை வயசுக்கு அப்புறம் பிறக்கற பிள்ளைய யார் பார்த்துக்குறதுன்னு கேட்கறே? வளர்க்கறதுக்கு பணம் மட்டும் போதாது? பெத்தவங்களோடப் பாசமும், அரவணைப்பும் வேணும். நாப்பது வயசுக்குமேல பிள்ளை பெத்து, அதை காலேஜ்லே சேர்க்கறச்சே, தள்ளாதக் கிழங்களாயிடுவோமே... அப்ப அந்தக் குழந்தைக்கு யார் ஆதரவுன்னு கவலைப்படறே...

நியாயமானக் கவலைதான். ஆனா, நான் இருக்கேன். எனக்கு கல்யாணம்னு ஒண்ணு நடக்கறதா இருந்தா, நான் போடப்போற ஒரே கண்டிஷன் இதுதான்... என் தம்பியோ, தங்கச்சியோ அது என்கூடத்தான் இருக்கும்னு. இஷ்டம் இருந்தா வந்து மாலையப் போடட்டும்...''

நீ ஒண்ணும் தகாத வழியிலப் போய் பிள்ளையப் பெத்துக்கலே. உன்னவர், உன்கிட்ட இத்தனைக் காலங்களுக்குப் பிறகும் அன்பு செலுத்தறாரேயின்னு சந்தோஷப்படு...''

வையாபுரி கைகளைத் தட்டி ஆரவாரித்தார்.

''ரசிகா...நிஜமா நீதாம்மா பெருமைப்படக்கூடிய குழந்தை. அம்மாவோடப் புடவைத் தலைப்புல ஒளிஞ்சுட்டே வளைய வருவே. இப்ப அந்தப் புடவைத் தலைப்பே, உனக்கு சிறந்த பள்ளிக்கூடமாகவும் ஆகியிருக்கு. தகப்பனுக்கு உபதேசித்த முருகன் மாதிரி, தாயாருக்கு நீ உபதேசம் பண்ணி பிரமிக்க வச்சிட்டே.''

அந்த ஒருகணத்தில் ரசிகா, மறுபடியும் குழந்தையாகிப் போனாள்.



ஓடிப்போய் அப்பாவைக் கட்டிக் கொண்டாள்.

''அப்பா, வக்கீல் என்ன சொல்றார்?''

''அவனை ஏன் கேட்கறே? என்னைக் கேளு. எல்லாம் பிய்ச்சு உதறிடலாம்னு சொல்லியிருக்கார். இனிமே அம்மாவை கவனிக்க வேண்டியது உன் பொறுப்பு. உங்க அப்பனை நான் கவனிச்சுக்கறேன்...''

அவர், தேவேந்திரனின் முதுகில் தட்டிக் கொடுத்தார்.

''இன்னும் என்னடா யோசனை? அதான் கேசை உடைச்சிட்டோமே...''

''இருக்கலாம் வையூ. ஆனா, இந்த வழக்குல ஒரிஜினல் கொலையாளின்னு ஒருத்தன் இருந்திருக்கணுமில்லையா... அவன், போலீஸ் கையில அகப்படாத மட்டும், என் கழுத்துக்கு மேல இருக்கற அபாயம் முழுசா நீங்கிடுச்சுன்னு சொல்ல முடியாது இல்லையா?''

''அட, எவன்டா அவன்? ஒரிஜினல் கொலையாளி யைக் கண்டு பிடிக்கத்தான் போலீஸ் இருக்கே. ஏதோ நம்ம வரைக்கும் கழண்டுக்க முடிஞ்சுதேயின்னு சந்தோஷப்படு... இனிமே இதுமாதிரி பொம்மனாட்டிகள் சகவாசமே வேண்டாம். நீ எத்தனைதான் நல்ல மனசோடப் பழகினாலும், கடைசியில இப்படித்தான் எதாவது சிக்கல்லே மாட்டிக்கும்படி ஆகிடும்''

''அவரை யார் வீட்டை விட்டு வெளியே போகவிடப் போறாங்க?'' மதுரா ஆவேசமாகச் சொல்கிறாள்.

தேவேந்திரனுக்கும், மறுபடியும் புதிய சிக்கல் எதிலும் மாட்டிக்கொள்ள விருப்பமில்லை. கழுத்து வரைக்கும் சுருக்குக் கயிறு வந்து, அதிலிருந்து தப்பிப்பது என்றால் சாதாரண விஷயமா?''—ஆனாலும்,

மதுராவின் அரவணைப்பில், அவள் கொடுத்த உணவை உண்டு, ரசிகாவின் பக்கத்தில் சின்ன பிள்ளை போல் படுத்திருந்தாலும் தேவேந்திரனின் மூளைக்குள் அந்தக் கேள்வி குடைகிறது.

'யார் இந்தக் கொலையைச் செய்திருப்பார்கள்?'

'பணத்துக்காக இல்லை என்பது பார்த்தவுடனேயே தெரிகிறது. ஒரு நகை ஒரு பொருள் காணாமல் போக வில்லை. எல்லாமே இருந்த இடத்தில் இருக்கிறது. அப்படி யானால் யார்? மகிமாவுக்குக்கூட விரோதிகள் உண்டா?

நீ எதற்காக இங்கே வந்தாய் மகிமா? என்னிடம் என்ன சொல்ல அழைத்தாய்?

'கடைசியாக நீ யாருடன் வாழ்ந்தாய்? அவனுக்கும் உனக்கும் என்ன தகராறு? அவனும் உன் கணவன் சத்யன் போல, உன்னைத் தேடி எங்கேயாவது அலைந்துகொண் டிருக்க...'

'இரு... இரு... உன் கணவன் சத்யன், ஆமாம். இப்போது அவன் எங்கே இருக்கிறான்? அவனுக்கு, நீ இந்தியா வருவது தெரியுமா?'

கேள்விமேல் கேள்விகள் பிறக்க படுக்க முடியாமல் நெளிகிறார் தேவேந்திரன்.

உண்மையில் கொலையாளி யாராக இருந்தாலும், இன்னார் என்று சுட்டிக் காட்டுவதால் செத்தவள் மீளப் போவதில்லை.

ஆனால், தன்மீது முழு சந்தேகமும் தீரவில்லை அந்த போலீஸ் அதிகாரிக்கு. நான் இல்லை என்பது மட்டும் புரிகிறது அவருக்கு.

கொலை நடந்த இடத்தில் தான் இருந்ததினால் மட்டுமே தன்மீது சந்தேகப்பட போலீசுக்கு உரிமை இருக்கிறது என்றால்...

அந்த ஸ்தலத்தில் இல்லாவிட்டாலும் மகிமாவின் கணவன்மீதும் சந்தேகப்பட வாய்ப்பிருக்கிறதல்லவா?

அவர், மெதுவாக மதுராவின் முதுகைத் தட்டி ''நான் மறுபடியும் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகணும்...''

''ஐயய்யோ! எதுக்கு?''

''நீ வையாபுரியைக் கூப்பிடு... எங்கே அவன்?''

தேவேந்திரன், விசுவரூபமெடுத்தாற்போல எழுந்து நின்றார்.

# 18

தச...!
நிலா முகம் உடைந்தது...
என் மனக் குளத்தில்
கல் விழுந்ததால்...

''வாங்க மிஸ்டர் தேவேந்திரன். வாங்க வாத்தியார் அய்யா! உங்களைத்தான் எதிர்பார்த்துட்டிருந்தேன்.''

இன்ஸ்பெக்டரின் வரவேற்பில் சிநேகம் தெரிந்தது. முகமே சிரித்தது.

வையாபுரிதான் கேட்டார்.

''எங்களை எதிர்பார்த்திட்டிருக்கீங்களா! அது ரொம்ப தப்பாச்சே! நாங்க இல்லே ஒரு முக்கியமான விஷயம் சொல்லலாம்னு வந்தோம்.''

''முதல்லே நீங்க சொல்ல வந்ததைச் சொல்லுங்க அப்புறம் நான் சொல்றேன்.''

வையாபுரி தலையை ஆட்டி, கண்களை மூடி இன்ஸ்பெக்டரின் சாமர்த்தியத்தை சிலாகித்தார்.

''சின்ன வயசானாலும் அபார புத்திசாலி சார் நீங்க... சீக்கிரத்துல பிரமோஷன் கிடைக்கும். நாங்க சொல்ல வந்தது என்னன்னா...''

அவர், தேவேந்திரனின் பக்கம் திரும்பிப் பார்த்து ஒரு அதட்டல் போட்டார்.

"எங்கேடா பராக்கு பார்த்துட்டு நிக்கறே! வாயைத் திறந்து சொல்லு!"

ஏதோ நினைவில் அமிழ்ந்து கிடந்த தேவேந்திரன்: திடுக்கிட்டு நிமிர்ந்து, மெள்ளத் தொண்டையைக் கனைத்துக் கொண்டு சொல்கிறார்.

மகிமா அவரிடம் வேலைக்கு சேர்ந்தது முதல் அவள் கணவன் சத்யனுக்கு இது விஷயம் பிடிக்காது போனது, தன் வீடு வரையில் வந்து சண்டையிட்டது; பின், மகிமா வெளிநாட்டிலிருந்து வந்தவர்களுடன் சொல்லாமல் கொள்ளாமல் ஓடியது; இத்தனைக்கும் பின் சத்யன், தனது அலுவலகம் தேடி வந்து, மனைவியின் சமீபத்திய புகைப்படங்களைக் கேட்டு வாங்கிக்கொண்டு போனது வரை...

"போட்டோவை சத்யன் வந்து வாங்கிட்டுப்போய் எவ்வளவு நாளாச்சு மிஸ்டர் தேவேந்திரன்?"

"அது, அஞ்சு வருஷங்களுக்கு மேலாறது."

"அப்புறம் நீங்க அவனைப் பார்க்கவே இல்லையா?"

"இல்லே, பார்க்கலே."

"இப்ப பார்க்கறீங்களா?"

"என்ன சொல்றீங்க."

தேவேந்திரன் மட்டுமில்லை. வையாபுரியும்கூட திகைத்தார் இன்ஸ்பெக்டர் புன்னகை மாறாமல் கூறினார்.

"ஆமா... சத்யன், மூர்த்திங்கற பேருல, அந்த ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்லே வேலை செஞ்சிட்டிருந்தான். துரதிருஷ்டவசமா, மகிமா அங்கே போய் தங்கியிருக்காங்க. இந்தக் கொலைய செஞ்சது அவன்தான். இதை அவன் வாயாலேயே ஒத்துக்க வச்சோம். இப்ப எங்க பாதுகாப்புலதான் இருக்கான்."



"எப்படி! எப்படி!"

தேவேந்திரனின் விழிகள் அகல விரிந்தன.

"இந்தக் கொலைய செய்ய உங்களைத் தவிர, இன்னும் வேற யார் யாருக்கொல்லாம் வாய்ப்பு இருந்திருக்கும்னு யோசிச்சுப் பார்த்தோம். மகிமாவோட பின்னணி என்னன்னு எங்களுக்குத் தெரியாது? எங்கேயோ அமெரிக்காவுல இருந்து இங்கே வந்தாங்க. மறுநாள் கழுத்து நெறிக்கப்பட்டு செத்துட்டாங்க. நடுவுல ஒரேயொரு போன் செஞ்சிருக்காங்க உங்களுக்கு, செத்துப் போனவங்க பக்கத்துல நீங்க பல மணி நேரம் உட்கார்ந்திருக்கீங்க. அதனால சந்தேகத்துக்கே இடமில்லாம நீங்க கைதானீங்க. அப்புறம்தான் கொலை நடந்து ஆறு மணி சுமாருக்கு நீங்களும், உங்க மனைவியும் ஆஸ்பத்திரியிலே இருந்தீங்கங்கறதுக்கு பலமான சாட்சியங்களோட உங்க நண்பர் வந்து, உங்களை அழைச்சிட்டுப் போனார். இதெல்லாம் ஒரு பக்கம் நடந்திட்டிருக்கறப்பவே— போலீஸ், ஹோட்டல் சிப்பந்திங்களை யாரெல்லாம் அந்தம்மா ரூமுக்குப் போயிட்டு வந்தாங்கன்னு விசாரிச்சிட்டிருக்கு. போதாக்குறைக்கு, முதல் நாள் சிப்பந்திங்க உபயோகப்படுத்தின யூனிஃபார்ம் எல்லாத்தையும் அள்ளிட்டு வந்திருக்கு."

"யூனிஃபார்ம் எதுக்கு."

வையாபுரி புரியாமல் கேட்கிறார். தேவேந்திரனுக்கு எல்லாமே மலைப்பாக இருந்தது.

உண்மையில், போலீசின் கரங்களில் தானே வலியப் போய் சிக்கிக் கொண்டான் சத்யன்.

போலீஸ் மார்ட்டத்துக்காக அனுப்பப்பட்ட மகிமாவை முழுவதும் பரிசோதித்த டாக்டர்—சம்பவம் நடந்த அன்று மாலை, ஆறுமணி சுமாருக்கு இந்தக் கொலை நடந்திருக்கிறது என்பதையும், கழுத்தைச் சுற்றி. நைலான் கயிறினால் இறுக்கியதால் மூச்சுக்குழல் சிதைந்து, ரத்தம் கசிந்து உடனடி மரணம் என்பதையும் மட்டுமல்லாது, இன்னொன்றையும் குறிப்பிட்டார்.

மரணப் போராட்டத்தில், அவள் நிறைய குடித்திருந்ததினால் போராட்டம் அதிகம் இல்லை என்றாலும், அவளது நகப்பூச்சு மிளிரும் கை நகம் ஒன்று ஒடிந்து, அதன் இடுக்கில் சுமார் ஒன்றரை அங்குல நீளத்துக்கு, நீலநிற எம்பிராய்டரி நூல் ஒன்று சிக்கியிருந்ததையும் எடுத்து வைத்து போலீசுக்கு தெரிவித்தார்.

உடனே, ஹோட்டல் சிப்பந்திகளின் சீருடைதான் போலீசின் கண்களுக்குப் பட்டது. சீருடையின் இடப்பக்க மார்புப் பகுதியில் ஹோட்டலின் பெயரும், அந்த ஹோட்டலின் அடையாள முத்திரையும், நீல நிற எம்பிராய்டரி நூலால் தைக்கப்பட்டிருக்கும். இதற்காகவே சீருடைகளைச் சோதிக்க எடுத்துப் போனார்கள.

எல்லா உடைகளிலும் ஒரே நூல்தான் என்றாலும், அறுந்த—இழை பிரிந்த நூலை—போலீசின் வசம் சிக்கிய நூலை வைத்துக்கொண்டு கண்டு பிடித்துவிட முடியும் என்கிற நம்பிக்கைதான் காரணம்.

ஆனால், சத்யன் இந்த சிரமத்துக்கெல்லாம் இடமளிக்கவே இல்லை.

எப்பொழுது உடைகள் போலீசின் வசம் போய் விட்டது என்பதை அறிந்தானோ, அப்பொழுதே, அவன் சற்று திகைத்து, பின் தன்னை சுதாரித்துக்கொண்டு, நேரே ஜீப் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இடத்துக்கே போனான்.



உள்ளே—

பிளாஸ்டிக் பைகளில் சீருடைகளுடன் ஒரு கான்ஸ்டபிள். வெளியே, இன்ஸ்பெக்டரின் வருகைக்காக இன்னொரு கான்ஸ்டபிள்.

முகம் முழுக்க மலர்ந்த சிரிப்பும், கம்பீரமான நடையுமாய் ஜீப்பின் உள்ளே அமர்ந்திருந்த போலீசை நெருங்கினான் அவன்.

''ஹலோ, நான் இங்கே பெல் கேப்டனாக வேலை பார்க்கிறேன். என்பேரு மூர்த்தி! நீங்க, எங்க ஸ்டாஃப்போட யூனிபார்ம்ஸ் எல்லாத்தையும் எடுத்திட்டுப் போறீங்கன்னு கேள்விப்பட்டேன். ஒரு நிமிஷம் துணிங்களை எடுத்திட்டு உள்ளே வர்றீங்களா...'

''எதுக்கு?''

''ஹோட்டலை விட்டு எந்தப் பொருள் வெளியே போனாலும்— இல்லே, வெளியே இருநது எத்தனை லக்கேஜ் உள்ளே வந்தாலும் நான்தான் பொறுப்பா கவனிச்சு எழுதி வச்சுக்கணும். கோவிச்சுக்காதீங்க. நீங்க எப்படி உங்க டூடிய செய்யறீங்களோ, அது மாதிரி நானும் என் கடமைய செய்யணும் இல்லையா...''

''அங்கேதான் ஹவுஸ் கீப்பர் அம்மாகிட்ட கணக்கு ஒப்படைச்சிட்டோமே.''

''யாரு? அந்தம்மாவா... அவங்க நாளைக்கே ஒரு கைக்குட்டை தொலைஞ்சாக்கூட என்னைத்தான் கூப்பிட்டு கேட்பாங்க...''

''இப்ப என்ன செய்யணும்கறீங்க?''

''ஒரு நிமிஷம் என்கூட வாங்க. எல்லாத்தையும் ஒரு முறை செக் பண்ணிட்டு, மொத்தம் எத்தனை இருக்கோ! அதுக்கு ஒரு ரசீது தர்றேன். எனக்கும் சேஃப்டி... உங்களுக்கும் பிரச்னை இல்லை.''

போலீஸ்காரர் எரிச்சலுடன் இறங்கி வந்தார். கீழே நின்றிருந்தவரிடம் கடுப்புடன் சொன்னார்.

''அண்ணே! எல்லாத் துணிங்களையும் இவர்தான் எண்ணிப் பார்த்து கையெழுத்துப் போட்டுக் கொடுக்கணுமாம். இன்ஸ்பெக்டர் வந்தாச் சொல்லு...தா! நான் வந்திடறேன்.''

பதிலுக்குக் காத்திராமல் போலீஸ்காரர், இறங்கி நடக்க, சத்யன்—உடுப்புக்கள் அடங்கிய பிளாஸ்டிக் பையுடன், தனது கம்பீரத்தைச் சிறிதும் இழக்காமல் பின்னால் நடந்தான்.

ஹோட்டலின் விஸ்தாரமான வரவேற்பறையில், சொகுசான சோபாவில் போலீஸ்காரரை அமர்த்திவிட்டு அவன் பணிவாய் சொன்னான்.

''அஞ்சு நிமிஷம் வெயிட் பண்ணுங்க. ராஜா!'

''என்ன சார்!''

''நம்ம சாருக்கு ஒரு காப்பி, என் கணக்குல கொண்டு வந்து கொடு. நான், இதையெல்லாம் செக் பண்ணிட்டு, கேட் பாஸ் போட்டு எடுத்திட்டு வர்றேன்.''

அவன் இதைச் சொல்லிவிட்டு, நிமிஷமாய் மறைந்து போனான். போலீஸ்காரர், தனக்காக வரவழைக்கப் பட்ட காபியை உறிஞ்சிக் குடிப்பதிலேயே கவனமாயிருந்தார்.

அரை கோப்பைகூட முடியவில்லை.

இன்ஸ்பெக்டர், அவரெதிரில் இடுப்பில் கையூன்றிய படி...

''எங்கேய்யா அந்த ஆளு?''



''எஸ் சார்! நோ சார்! பெல் கேப்டனாம் சார். அவுட் பாஸ் போட்டு எடுத்திட்டு வர்றதா, இப்பதான் சார், இந்தப் பக்கமாத்தான் சார்...''

எதற்காக இன்ஸ்பெக்டர் இந்த பாய்ச்சல் பாய்கிறார் என்பதே புரியாமல் போலீஸ்காரர் திகைத்து, உடனேயே தன்னைச் சமாளித்துக்கொண்டு அவர் பின்னால் ஓட...''

எங்கே எங்கே என்று தேடி, நிமிடத்தில் ஹோட்டல் பணியாளர்களுக்காக கட்டிவிடப்பட்டிருக்கும் கழிவறையில் கையும் மெய்யுமாய் பிடித்து—

''திறய்யா கதவை. திறய்யா! இல்லையின்னா கதவை உடைச்சிடுவேன்!''

இன்ஸ்பெக்டர் கத்த—இதற்குள் அங்கே கூட்டம் கூட—பமீலாராவ், தனது கீச்சுக் குரலில் ஆங்கிலமும் தமிழும் கலந்து அலற—

''யாரு? மூர்த்தியா! எனக்கு அப்பலே சந்தேகம்தான். ஹி வாண்ட்ஸ் டு கெட் பேக் ஹிஸ் யூனிபார்ம். காலையில இருந்து கீழேயே சுத்தி சுத்தி வந்துட்டிருந்தான்''

கதவையே உடைத்து உள்ளே நுழையக்கூடிய அளவுக்கு பலமான இடி.

சத்யன் பிரமித்து நின்றான். அங்கிருந்து வெளியே போக வேறு வழி இல்லை. உயரத்தில் கையகல வென்டிலேட்டர் ஆள் நுழைவது சாத்தியமில்லை.

அவன், அப்பொழுதுதான் தான் மாட்டியிருந்த உடுப்புகளைக் கழற்றிவிட்டு, பிளாஸ்டிக் பையிலிருந்த அவனுடைய பழைய உடையை எடுத்து மாட்டியிருந் தான்.

கதவைத் திறந்தவுடன் அத்தனைப்பேரையும் முட்டி மோதிக்கொண்டு ஓடிவிடுவோமா!

எப்படி! எத்தனை வேகமாக ஓடினாலும், போலீசின் கையிலிருந்து தப்பிவிட முடியுமா!

''அது சரி. எதற்காக ஓட வேண்டும். அந்தக் கொலையை நான்தான் செய்தேன் என்பதற்கு என்ன சாட்சி இருக்கிறது. இந்த செண்ட் வாசனையைத் தவிர,''

''அந்த வாசனை உன்னை காட்டிக் கொடுத்திடாதா!''

''கொடுக்கும். ஆனா, வேற வழி?''

இதற்குப் பின் சத்யன் கதவைத் திறந்ததும் போலீஸ் அவனைச் சுற்றி வளைத்ததும்.

எடுத்த எடுப்பில் இன்ஸ்பெக்டர், அவனது சட்டையைத்தான் கவனித்தார். மார்புப் பகுதி எம்பிராய்டரி சற்றே சிதைந்து, அறுபட்ட நீல நூல் காற்றில் நடுங்கிக் கொண்டிருந்தது.

''பிறகென்ன...சத்யன், 'இதற்கு மேல் முடியாது' என்பது போலச் சரணடைந்து— நடந்தது அத்தனையையும் சொல்லிவிட்டான்.

பெருமூச்செறிந்தார் தேவேந்திரன். எதிரே டீபாயின் மேல் செய்தித்தாள்கள். மகிமாவின் மரணத்தின் பின்னணி பற்றியும், கொலையாளி பற்றியும் விலாவரியாக விளக்கிக்கொண்டிருந்தது.

''அப்பா! எங்களை மன்னிச்சிருங்க. எல்லாம் கேள்விப்பட்டோம்.''



பிள்ளைகள்—முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு. மதுராவுக்கு இவர்களிடம் பேசப் பிடிக்கவில்லை. என்னதான் இருந்தாலும், ஒரு தகப்பனுக்கும் பிள்ளைகளுக்கும் உள்ள உறவு இவ்வளவுதான் என்பது போல அன்றைக்கு முறித்துக்கொண்டு போனார்களே,

இப்பொழுது அப்பன்மீது குற்றம் இல்லை என்றவுடன் வரத்தோன்றுகிறதோ... இது எந்தவிதத்தில் நியாயம்?

வையாபுரி, வார்த்தைகளை நெருப்பில் போட்டு வறுத்தெடுத்தாற் போலத்தான் பேசினார்.

''இதப் பாருங்கடா... அவன் குழந்தை மாதிரி! ஏதோ பெண்டாட்டியோட பலத்துலதான் வளையவர்றான். சத்தியமா அவனுக்கு கீழ்தரமான புத்தி கிடையாது. ஆனா என்ன செய்ய...இவனோட உயர்ந்த மனசைப் புரிஞ்சுக்காம, கீழ்தரமான சனங்க, தங்களோடக் காரியத்தை இவன் மூலமா சாதிச்சுக்கறாங்க. அவ்வளவுதான் இப்படி தாங்க வேண்டிய நேரத்துல தாங்காம 'பொத்'துனு கீழே போட்டுட்டு ஓடிட்டீங்களே, அப்புறம் எந்த முகத்தை வச்சிட்டு, திரும்பி வந்தீங்க.''

''அதில்லே அங்கிள்! கொலை, போலீஸ், கேஸ்னா— எங்க மாமனார், மச்சினர் இவங்க எல்லாருமே ரொம்ப நொந்துட்டாங்க! எல்லாருமே பெரிய வம்சத்துல வந்தவங்க பாருங்க, அதான்...''

''ஆமா பொல்லாத வம்சம். எனக்குத் தெரியாத வம்சம். ஏண்டா தீபக், உங்க மாமனார் திருச்சியில ஒரு சின்ன வீடு வச்சிட்டு, கோயம்புத்தூருக்கும் திருச்சிக்கும் தனி வழிப்பாதை போட்டுட்டு சனி, ஞாயிறு தவறாமப் போயிட்டுப் போயிட்டு வர்றாரே, அப்ப அந்த வம்சம் நொந்து போகல்லையோ?''

''...............''

''சரி, அதைவிடு. ஏம்பா லலித். உன் மச்சான், அதாம்பா டாடாசியராவுல வருவானே, ஒரு தரம் ஏதோ பாாட்டியிலே ஓவராக் குடிச்சிட்டு தாறுமா றா விழுந்து கிடந்தானே, அப்ப அவன் பண்ணின கலாட்டா வுணாலே ஏற்பட்ட சேதத்துக்கு நஷ்டஈடு கொடுத்து, ஹோட்டல் மானேஜர்கிட்ட மன்னிப்பு கேட்டுட்டு வந்தானே உங்க அப்பன். மறந்திட்டியா. அப்ப குடிகார மச்சானைத் தூக்கிப் போட்டு வர அப்பா வேண்டியிருந்தது. இப்ப அதே அப்பா செருப்பை விடக் கேவலமாயிட்டாரு இல்லையா.''

''............''

''எதுக்காக மாமனையும், மச்சானையும் இழுக்கணும்! நீங்க காலேஜ்லே படிக்கிறப்ப எத்தனை ஹாட்டி அடிச்சிருக்கீங்க. ஆனா அதெல்லாம் வெளியில தெரியாது; மூடி மறைக்கத்தான் நாங்க இருக்கோமே...''

இப்பொழுது தேவேந்திரன் குறுக்கிட்டார்.

''டேய் வையூ, விடுடா அவனுங்களை. என்னமோ ரோஷத்துல செஞ்சிட்டாங்க. அதுக்காக ரொம்பவும் சொல்லிக் காட்டக்கூடாது. அவங்களையே முழுக்க குறை சொல்லவும் கூடாது. நானும் சிறுபிள்ளைத் தனமா இருந்துட்டேன் இல்லே?''

அவர், தானே போய் மனைவியை அழைத்து வந்து கூட்டத்தின் நடுவே நிறுத்தி வைத்தார்.

''மதுரா! நம்ம குழந்தைங்க... பாவம். தெரியாம செஞ்சிட்டாங்க. மன்னிச்சு, 'வாங்க'ன்னு கூப்பிடு மதுரா...''

''என்ன இருந்தாலும், ஆம்பிளைப் பசங்களுக்கு கௌரவம்தான் முக்கியம்கறதைக் காமிச்சிட்டாங்க. இதுவே பாருங்க... பொண் குழந்தை, நம்மை விட்டுப் பிரியாம கூடவே இருக்குது.''



''முழுசா அவங்களைக் குத்தம் சொல்லாதே மதுரா! இப்ப உன் வயித்துல இருக்கிறது பிள்ளைக் குழந்தையின்னு வச்சுக்க! அது உன்னைவிட்டு ஓடிப்போச்சா! எத்தனை இக்கட்டுலேயும் உன்கூடவேதானே இருக்கு''

மதுரா கோபத்தை மறந்து 'குப்'பெனச் சிரிக்க—அவர்களின் பேச்சு புரியாமல் திகைத்த தீபக்கையும் லலித்தையும் புன்முறுவலுடன் பார்த்தார் வையாபுரி.

''அப்பா! பெரிய வம்சத்துல வந்தவங்களே, உங்க அம்மா இப்ப நாலாவது முறையா உண்டாயிருக்கா அந்தக் குழந்தையைக் கலைச்சுக்கத்தான் ஆஸ்பத்திரிக்குப் போனாங்க புருஷனும், பெண்டாட்டியும். முடியலே, கலைச்சா தாய் உசிருக்கு ஆபத்துன்னு சொல்லிட்டாரு டாக்டர். வந்திட்டாங்க. ஆனா, எந்த வேளையில ஜனிச்சதோ, பொறக்கறதுக்கு முன்னாலேயே அப்பா கழுத்துக்கு வந்த சுருக்கை கழட்டி எறிஞ்சிடுத்து. யாருக்கு வேணுமோ, வேணாமோ சென்டிமென்டலா இந்தக் குழந்தை எனக்கு வேணும். பொறக்கறதுக்கு முன்னாலேயே அப்பனைக் காப்பாத்தின பிள்ளை.''

''அம்மா...''

''அம்மா...''

பிள்ளைகள் மட்டுமில்லை. மருமகள்களும மதுராவைச் சூழ்ந்துகொள்ள—

தேவேந்திரன் கவலையுடன் நண்பனிடம் கேட்கிறார்.

''ஏண்டா! எல்லாருமாச் சேர்ந்து, என் பெண்டாட்டிய ஆளுக்குக் கொஞ்சமாப் பிய்ச்சு தின்னுடுவாங்க போலிருக்கே. ராத்திரி அவ என் ரூமுக்கு வருவாளா...''

''தேவு! உனக்காக சப்போர்ட் பண்ணி இத்தனை தூரம் பேசியிருக்கேன். இனிமே நீ எந்தப் பொம்பிளையப்

பார்த்தாவது உருகினியோ, நானே உன்னைக்கொன்னுடு வேன். போதும்டா. பொறக்கப் போறதாவது உன்னை மரியாதையா நடத்தட்டும்.''

தேவேந்திரன்—சுற்றி வரக் குழந்தைகள் புடை சூழ வெட்கமும், பெருமையும் முகத்தில் ஜொலிக்க உட்கார்ந் திருக்கும் மதுராவையே இமைக்காமல் பார்க்கிறார்.

இந்த நிமிஷத்தில்கூட மதுரா— அவரது கண் களுக்குப் புத்தம் புதுப் பெண்ணாகத்தான் தோற்றமளிக் கிறாள்.

காதல் வங்கியின் ஆயுட் கால சேமிப்பு நிதியல்லவா அவள்... தேவேந்திரனைப் பொருத்தவரையில் இந்த அன்பு நிதி வளர்ந்துகொண்டேதான் இருக்கும்.

21057
3775640